சைவப்புலவர் சு. செல்லத்துரையின்

# நற்சிந்தனைகள்

50

(வானலையில் வந்தவை)

இணுவில் - இளவாலை

திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரையின்

ஏழாம் ஆண்டு நினைவு நூல்

03-07-2017

தெல்லிப்பழைக் கலை இலக்கியக்கள வெளியீடு

200/-

*சைவப்புலவர் சு. செல்லத்துரையின்*

# நற்சிந்தனைகள்

## 50

**(வானலையில் வந்தவை)**

இணுவில் - இளவாலை

திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரையின்

**ஏழாம் ஆண்டு நினைவு நூல்**

03-07-2017

தெல்லிப்பழைக் கலை இலக்கியக்கள வெளியீடு

# நூல் தரவு

| | | |
|---|---|---|
| தலைப்பு | - | நற்சிந்தனைகள் - 50<br>(வானலையில் வந்தவை) |
| நூலாசிரியர் | - | கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை |
| முதலாம் பதிப்பு | - | 03-07-2017 |
| வெளியீடு | - | தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம்,<br>தெல்லிப்பழை. |
| பதிப்பகம் | - | அம்மா அச்சகம்<br>இணுவில் |
| பக்கம் | - | 114 + vi |
| விலை | - | 200.00 |

# சமர்ப்பணம்

என் குரலில் பலகாலம் வானலையில் வலம்வந்த
நற்சிந்தனைத் தொகுப்பு ஒலிப்பேழை நூலிதனை
என்இனிய நாயகியின் ஏழாண்டு நினைவாகப்
பற்பலரும் பயன்பெறவே தந்திட்டேன் சமர்ப்பணமாய்.



இணுவில் – இளவாலை

**சிவகாமசுந்தரி செல்லத்துரை**

**1944-03-24 - 2010-07-03**



சிவகாமசுந்தரி செல்லத்துரையின் வம்ச விருட்சங்கள்

# முன்னுரை

என்னைப் பேசவைத்துப் பார்த்து மகிழ்ந்திருந்த என் துணைவி சிவகாமசுந்தரி இன்றில்லை. என்னை உடலால் பிரிந்து ஏழாண்டு சென்றாலும் என் உள்ளத்துள் இன்றும் வாழ்ந்துகொண்டு என்னையும் வாழ்வித்துக் கொண்டு இருக்கிறார்.

என் துணைவியின் நினைவாக ஆண்டுக்கொரு நூல் வெளியிடும் பணியில் இது ஏழாவது நூல். நான் பேசிய நற்சிந்தனைகளில் ஐம்பதின் தொகுப்பாக என் மைந்தர்களின் துணையோடு என்குரலில் இறுவெட்டாகவும் இது வெளிவருகிறது.

மாணவப் பருவத்தினர் முதல் அனைவருக்கும் இன்றைய காலகட்டத்தில் அறவாழ்வு சார்ந்த நற்சிந்தனைகள் அதிகம் வேண்டப்படுகின்றன என்னும் எனது நண்பர்களின் ஆலோசனையே இந்த நூலாக்கத்துக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

இந்த நற்சிந்தனைகளை வானொலியிலும், தொலைக் காட்சியிலும் என்னைப் பேசவைத்த கலைஞர்களை நன்றியுடன் இவ்வேளையில் நினைவு கூருகின்றேன்.

சிறப்பாக இலங்கை வானொலி கலைமகள் மகேந்திரன், சற்சொரூபவதி நாதன், லண்டன் ஐ.பி.சி செல்லத்துரை நாவரசன், மற்றும் லண்டன் தீபம் தொலைக்காட்சி, லண்டன் தமிழ் வானொலி, இலங்கை ரூபவாகினித் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப் பாளர்கள் அனைவர்க்கும் நன்றியுடையேன்.

இந்த நூலை அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த அம்மா அச்சகம் ஸ்ரீகிருஸ்ணராஜா அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகள்.

இளவாலை. **சைவப்புலவர் சு. செல்லத்துரை**

# பதிப்புரை

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் தலைவர் கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் இதுவரை 25க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

தனது துணைவி அமரர் சிவகாமசுந்தரியின் நினைவாக ஆண்டுக்கொரு நூலை எங்கள் இலக்கியக் களத்தின் வெளியீடாக வெளியிட்டு வருகிறார். இது ஏழாவது நூல்.

எமது தமிழ்ச் சமூகம் குழம்பிப் போயிருக்கும் இன்றைய கால கட்டத்தில் சமூகப் பொறுப்புடையவர்களின் நற்சிந்தனைகள் அவர்களை வழிப்படுத்தப் பெரிதும் உதவும் என நம்புகின்றோம்.

"சைவப்புவர் சு. செல்லத்துரையின் "நற்சிந்தனைகள் - 50" எனும் இந்நூல் அறவாழ்வு சார்ந்தவையும் சைவ வாழ்வு சார்ந்தவையுமாக இருப்பதால் மாணவர் முதல் பெரியவர்கள் வரை அனைவர்க்கும் பயன்தரும். ஒவ்வொன்றும் ஐந்து நிமிடங்களில் வாசிக்கவோ, பேசவோ கூடியவைகளாக இருப்பதும் இதன் பயன் பாட்டுக்கு மேலும் உதவியாக இருக்கும்.

மாணவர்கள் பேசிப் பழகுவதற்கும், பேச்சுப் போட்டிகளில் பேசுவதற்கும் பொருத்தமானதுமாகும்.

இது நூலாக மட்டுமல்லாது அவரின் குரலில் இறுவெட்டாகவும் வெளியிடப்படுகின்றது. வாசித்து மட்டுமன்றி கேட்டும் பயன் பெறலாம்.

எல்லோரையும் வழிப்படுத்த வல்ல இந்த நூலை வெளியிடுவதில் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் பெருமை பெறுகின்றது.

**செ. உ. சந்திரகுமாரன்**

பிரதிப் பிரதம செயலாளர் (நிதி),
வடக்கு மாகாணசபை.

பொருளாளர்,
தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | வாக்கும் வாழ்வும் | 01 |
| 02. | நித்திய விரதம் | 03 |
| 03. | வல்லமை பெறும் வழி | 05 |
| 04. | மறக்கருணை | 07 |
| 05. | சாந்துணையும் கற்போம் | 09 |
| 06. | யார் பெரியர் | 11 |
| 07. | அழுக்காறு அகற்றி வாழ்வோம் | 13 |
| 08. | கோமாதா குலம் காப்போம் | 15 |
| 09. | தீதும் நன்றும் பிறர்தர வாரா | 17 |
| 10. | எது பெரிது | 19 |
| 11. | குறைவிலாது உயிர்கள் வாழ்க | 21 |
| 12. | எல்லா உயிரும் இன்புற்றிருக்க | 23 |
| 13. | அறம் செய்தல் யார்க்கும் எளிது | 25 |
| 14. | திரிகரண வழிபாடு | 27 |
| 15. | சிவனை நினைந்து வழிபடுவோம் | 29 |
| 16. | தானம் செய்யும் வழி | 31 |
| 17. | தீபாவளி | 33 |
| 18. | கந்தபுராணம் | 35 |
| 19. | முருகப்பெருமான் | 37 |
| 20. | வள்ளி திருமணம் | 39 |
| 21. | திருமந்திரம் காட்டும் சைவம் | 41 |
| 22. | சுந்தரரின் சிவலோகப்பேறு | 44 |
| 23. | ஆன்ம யாத்திரை | 46 |
| 24. | மங்கல வாழ்த்தின் மாண்பு | 48 |
| 25. | இறையனாரின் திருமுகப்பாசுரம் | 51 |

| | | |
|---|---|---|
| 26. | சிற்றம்பலவன் கைச்சீட்டு | 54 |
| 27. | திருமூலர் காட்டும் சிவநெறி | 56 |
| 28. | சிவபுரத்துள் செல்வர் | 58 |
| 29. | பெரியபுராண மங்கல வாழ்த்து | 61 |
| 30. | திருவடி ஞானம் | 64 |
| 31. | சிவவிரதங்கள் | 66 |
| 32. | மாசி மகம் | 68 |
| 33. | தருமம் என்றொரு பொருள் உளது | 70 |
| 34. | அறவழி வாழ்வோம் | 72 |
| 35. | பண்பாட்டுக் கோலங்கள் | 75 |
| 36. | காலதத்துவமும் சித்திரை வருடப்பிறப்பும் | 78 |
| 37. | வழிபாடு | 80 |
| 38. | அடியார் நடுவுள் இருக்கும் அருள் | 83 |
| 39. | தமிழர் பண்பாடும் தைப்பொங்கலும் | 85 |
| 40. | அன்னையும் பிதாவும் | 87 |
| 41. | அன்பே சிவம் | 89 |
| 42. | குருலிங்க சங்கம வழிபாடு | 92 |
| 43. | சம்பந்தரும் மெய்கண்டாரும் | 94 |
| 44. | வினையும் பயனும் | 96 |
| 45. | பஞ்சபூதத் தலங்கள் | 98 |
| 46. | ஈழநாட்டுப் பஞ்ச ஈஸ்வரங்கள் | 101 |
| 47. | கற்றலும் தொழுதலும் | 104 |
| 48. | மார்கழி மாண்பு | 107 |
| 49. | கொல்லாமை | 110 |
| 50. | சைவத்தமிழ்ப் பண்பு | 112 |

# வாக்கும் வாழ்வும்

இவ்வுலகில் எண்ணில்லா மக்கள் வாழ்ந்து மறைந்திருக் கின்றார்கள். இவர்களில் ஒருசிலரைத்தான் இந்த உலகு எந்நாளும் நினைந்து போற்றுகின்றது. இவ்வித போற்றுதலுக்குரியர்வர்கள் எத்தகையர் என்பதை நோக்கும் போது வாக்கும் வாழ்வும் ஒன்றா யுடையவர் தான் அவர் என்பது விளங்கும். அதாவது சொல்லும் செயலும் ஒன்றாயிருக்க வேண்டும். "சொல்லுதல் யார்க்கும் எளிய சொல்லிய வண்ணம் செய்தல் அரிது" என்பது வள்ளுவப் பெருமான் வாக்கு. ஆதலால் சொல்லுகின்றபடி வாழ்ந்து காட்டியவர்களே பெருமைக் குரியவர்கள். அவர்களால் தான் இந்த உலகம் வாழ்கிறது.

உள்ளத்தால் பொய்யாது உள்ளதையே சொல்லி, சொன்னபடி வாழ்ந்தவர்கள் உள்ளத்தால் பொய்யாத உத்தமர்களென வரலாறும், இலக்கியங்களும் எங்களுக்கு எடுத்தியம்புகின்றன. அவர்களது வாக்கும் வாழ்வும் ஒன்றியிருந்ததால் அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களாகவே போற்றப்படுகின்றார்கள்.

உள்ளம் தூய்மையாக இருந்தால் அங்கு உண்மையொளி உண்டாகும். "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்பார் மகாகவி பாரதியார். அவர்களுடைய வாக்கினிலே இந்த உலகம் வாழும்.

அரிச்சந்திரன் விஸ்வாமித்திர முனிவருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகத் தன் மனைவியையும் மகனையும் வீதியில் விலைகூறி விற்கிறான். ஈற்றில் தன்னையும் விற்கிறான். நாடு காத்த மன்னன் சுடுகாடு காக்கும் நிலை வந்தபோதும், தன் மனைவியையே தன்கையால் வெட்டவேண்டிய தர்மசங்கட நிலை வந்தபோதும் "பதி இழந்தனம், பாலனை இழந்தனம், படைத்த நிதி இழந்தனம், கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்" எனக்கூறி வெட்டுகிறான்.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய படியால் வெட்டிய வாள் சந்திரமதியின் கழுத்தில் மாலையாக விழுந்தது. மீண்டும் அரசும் வாழ்வும் பெற்று என்றும் இந்த உலகு போற்றும் உத்தமர்களாகும் பெருமைக்குரியரானார்கள்.

இளமைப் பருவத்தில் அரிச்சந்திரன் நாடகம், பார்த்ததால் சத்தியம் தவறாது வாழ்தலையே தன் இலட்சியமாகக் கொண்ட காந்தி அடிகள் "தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரத நாட்டுக்குச்" சுதந்திரம் பெற்றுக் கொடுத்து மகாத்மாவானார். அவர் வாழ்ந்த சத்திய வாழ்வே இன்றும் உலகில் அஹிம்சையைக் காத்து நிற்கிறது.

உள்ளதை உள்ளபடி சொல்லி அதன்படி ஒவ்வொருவரும் வாழ்ந்தால் பொய்மை இல்லாமலே போய்விடும். ஒளியின் இன்மை இருளாவது போல உண்மையின் இன்மையே பொய்யாகும். இருளை நீக்குவதற்குச் செயற்கையான விளக்குகளை ஏற்றுவது போலப் பொய்யை நீக்குவதற்காகச் சட்டம், பொலிஸ், நீதிமன்றம், அதிரடிப்படை, அணுவாயுதங்கள் என்று இப்படி எத்தனையோ கெடுபிடிகளால் உலகு அழிகிறது. உண்மை நிலைக்குமாயின் இவையெதுவும் தேவைப்படா.

மகாகவி பாரதியார் சின்னஞ்சிறு பிள்ளையைப் பார்த்துப் "பொய் சொல்லக்கூடாது பாப்பா" என்று பாடியது மகா மந்திரமாகும். பிள்ளைப் பருவம் முதல் ஒவ்வொருவரும் உண்மையே பேசி வாழ்வார்களாயின் இந்த உலகின் அவலங்கள் எல்லாம் அகலும்: அமைதி குடிகொள்ளும்; ஒவ்வொரு வீட்டிலும் இது பேணப்பட வேண்டும். ஒவ்வொருவரும் உண்மை பேசும் உத்தமர்களாகலாம். இந்த உலகத்தார் உள்ளங்களிலெல்லாம் போற்றப்படும் பெருமைக்குரியவராகலாம்.

**"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்"**

என்ற வள்ளுவப் பெருமான் வாக்கின்படி வாக்கும் வாழ்வும் ஒன்றாக வாழ்ந்து என்றும் இன்புற முயல்வோம்.

**பொய்சொல்லக் கூடாது பாப்பா - என்றும்**
**புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா**
**தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு**
**தீங்கும்வர மாட்டாது பாப்பா.**

என்னும் பாரதி சொல்லைப் போற்றி வாழ்வோம்.

# நித்திய விரதம்

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்று நாம் இறைவனை வழிபடும் போதெல்லாம் வேண்டுதல் செய்கிறோம். இந்த உலகில் இன்பமே எவ்விடத்தும் நிலைகொள்ள வேண்டும். எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்பது இந்த வேண்டுதலின் பொருளாகும். இதனை நாம் வேறெங்கோ இருந்து எதிர்பார்க்கின்றோம். எல்லோரும் என்று சொல்லும் போது நாமும் அதில் அடங்கிவிடுகின்றோம். அந்த இன்ப வாழ்வில் நாமும் திழைக்க ஆசை கொள்கின்றோம்.

அதேவேளை உலகெல்லாம் இன்பம் சூழ்வதற்கு நாமென்ன செய்தல் வேண்டும், அதில் எங்கள் பங்கு என்ன என்பதை ஒவ்வொரு வரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். உழைப்பவன் தானே ஊதி யத்தைப் பெற முடியும். உழைப்பு இல்லாமல் ஊதியம் கிடைக்க மாட்டாது. ஆதலால் இன்பத்தை ஊதியமாகப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்.

நாம் விரும்பியவை கைகூடவேண்டும் என்று விரதம் இருக் கின்றோம். சாதாரணமாக விரதம் என்றாற் சில விசேட நாட்களில் ஒரு நேரம் உண்ணாதிருத்தல் என்ற அளவிற் சுருங்கி விட்டது. உண்மை விரதம் அதுவன்று. வாழ்வில் எக்காலமும் நித்திய விரதம் இருக்க வேண்டும். தனக்கும் பிறர்க்கும் துன்பம் அகன்று இன்பம் சூழ நித்தியம் மேற்கொள்ள வேண்டிய விரதங்கள் இரண்டுள. ஒன்று உண்மை பேசுதல், மற்றது கொல்லாமை.

உண்மையால் விளைவது இன்பம்; பொய்யாமையால் விளைவது துன்பம்; என்றும் நிலையானது உண்மை. உண்மையல்லாதது பொய்மை. ஆதலால் எக்காலத்தும் உள்ளதையே நினைந்து உள்ளதையே சொல்லி உள்ளபடி அதாவது உண்மையைக் கடைப் பிடித்து வாழவேண்டும். "உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்ற வள்ளுவப் பெருமான் வாக்கின்படி உண்மைபேசி பேசி உத்தமர்களாக வாழ்ந்து தமக்கும் பிறர்க்கும் எக்காலத்தும் இன்பம் விளைத்த மகாத்மா காந்தியடிகள், நாவலர் பெருமான் போன்றவர்களை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். உண்மை நிலைத்தால் உலகம் இன்ப மயமாகும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என வள்ளுவப் பெருமான் சொன்னதையும் "கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சைபரா பரமே" எனத் தாயுமான சுவாமிகள் சொன்னதையும் சிந்திக்க வேண்டும். கொலை செய்பவர்கள் கொடியவர்கள். ஆனால் நல்லவர்களும் கொலை செய்து விடுகிறார்கள் அல்லது கொலைக்குக் காரணர்களாகி விடுகிறார் கள். அதாவது தமது உணவுக்காகப் புலால் உண்ணும் பழக்கத்தால் கொலைகாரர்களாகவோ அல்லது கொலைக்குக் காரணர்களாகவோ ஆகிவிடுகின்றார்கள். இவ்வித வாழ்வால் "எல்லா உயிர்களும் இன் புற்றிருக்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆதலாற் கொல்லாமை நித்திய விரதமாகக் கொள்ளப்பட வேண்டும். புலால் உண்ணாமல் விடுதலின் மூலம் கொல்லாமை எனும் விரதத்தைக் கைக்கொள்ள முடியும்.

உண்மை பேசுதலும், கொல்லாமையும் இலகுவான, ஆனால் உறுதிபயக்கும் - நம்மை உத்தமர்களாக்கும் அதியுயர்ந்த விரதங்கள் ஆகும். உண்மையைச் சொல்லுதல் இலகு. அதுபோல கொல்லா திருத்தலும் இலகு. உண்மையை மறைத்துப் பொய் சொல்ல முயலும்போது தொடர்ந்து பல பொய்களைச் சொல்லி அவலப்பட்டு அவமானப்பட்டுப் பிறரை வருத்தித் தானும் வருந்த வேண்டி ஏற்படுகிறது.

அதுபோலத் தமது உணவுக்காகப் பிற உயிர்களைக் கொல்லும் போதும், கொலைக்குக் காரணர்களாகும் போதும் அவற்றை வருத்தித் தானும் பாவத்திற்கு ஆளாக வேண்டி வருகிறது.

ஆதலால் "இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க" உண்மை பேசுதலையும், கொல்லாமையையும் நித்திய விரதமாகக் கொள்வோ மாக. அவ்விதம் செய்வோரே நல்லவர் எனப் போற்றப்படுவர்.

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம்மிக்க**
**நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் நன்று.**

# வல்லமை பெறும் வழி

புரட்டாதி மாத அமாவாசைக்கு அடுத்த நாள் தொடங்கி அடுத்துவரும் ஒன்பது நாள்கள் நவராத்திரி காலமாகும். எல்லாம் வல்ல பரம்பொருளைச் சக்தி வடிவில் வைத்து வணங்கும் காலம் இது. முதல் நாளிற் கும்பம் வைத்து அதிற் சக்தியை எழுந்தருளச் செய்து ஒன்பது நாட்களும் பூசை வழிபாடு செய்வது வழக்கம். சக்திக்குச் சிறப்பான பூசைக்காலம் இராக்காலம் ஆதலால் இது நவராத்திரி எனப்படுகிறது.

எங்கும் நிறைந்து எல்லாமாய் இருக்கிற அன்னை பராசக்தியே இந்த உலகப் பொருட்கள் அனைத்திற்கும் இயக்க சக்தியாக இருக் கின்றாள். மெய்யியலில் மட்டுமன்றி அறிவியல் எனப்படும் விஞ்ஞானத்திற் கூட இவ்வுலகு எங்கும் சக்தி மயமாக இருப்பது உண்மை எனக் கொள்ளப்படுகின்றது. எனவே எங்கும் நிறைந்திருக்கும் சக்தியே எம்மை வாழ்விக்கின்றது என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையாகும்.

நாம் வாழ்வதற்கு நல்ல உடல் உள உறுதி தரவல்ல வீரம் வேண்டும்; நிறைந்த பொருள்வளம் மிக்க செல்வம் வேண்டும்; தெளிவான கல்வி அறிவு வேண்டும். இவை மூன்றும் அதாவது வீரமும், செல்வமும், கல்வியும் இருந்தால் வாழ்வு பூரண மகிழ்வுள்ளதாக அமையும். இவை மூன்றும் ஒன்றுடனொன்று பிரிக்க முடியாத இணைப்பு உடையனவா யிருத்தல் வேண்டும். அடுப்புக்கு மூன்று கல் வேண்டும். அவற்றுள் ஒன்றில்லாவிட்டாலும் அடுப்பு அமைக்க முடியாது. அதைப் போன்று இன்றியமையாத இணைப்பு உடையவைதான் வீரமும் செல்வமும் கல்வியும்.

இவ்வுலகம் சக்தியும் சிவமுமாய தன்மையுடையது. அதனாலே தான் உலகியற் பொருட்கள் எல்லாம் குணமும் குணியுமாகவுள்ளன. குணத்தையுடையது குணி. ஒவ்வொரு பொருளுக்கும் குணம் உண்டு. குணியிலிருந்து குணத்தைப் பிரிக்க முடியாது. விளக்கில் ஒளி இருக்கின்றது. ஒளியைப் பிரித்தால் அது விளக்காகாது. மலரில் அதன் குணமாகிய நிறம் இருக்கிறது. நிறத்தைப் பிரிக்க முடியாது. பிரித்தால் மலர் மலராய் இராது. அது போலச் சிவமும் சக்தியும் பிரிக்க முடியாதவை. இயக்க சக்தியாகிய பராசக்தியும் இயக்கும் சக்தியாகிய சிவமும் எங்கும் நிறைந்து, எதிலும் கலந்து, எல்லாமாய் இருந்து எம்மை

வாழ்விக்கின்றன. அந்தச் சக்தியை நாம் எமதாக்கிக் கொள்ள வேண்டும். மனிதன் தனக்கும் பிறர்க்கும் பயன்தரவல்ல நிறைவான வாழ்வுக்குரிய சக்தியை தன்னுள் பெற்றுக் கொள்ளக்கூடிய சிறப்பான வழிபாட்டுக் காலம் நவராத்திரி காலமாகும்.

அதி உயர்ந்த பொருட்களைத் தெய்வீக வடிவிற் காண்பது சைவத்தின் தனித்துவ இயல்பு. அதன்படி வீரத்தைத் தரும் சக்தியைத் துர்க்கையாக முதல் மூன்று நாள்களும், செல்வத்தை தரும் சக்தியை இலக்குமியாக நடு மூன்று நாள்களும், கல்வியைத் தரும் சக்தியைச் சரஸ்வதியாக இறுதி மூன்று நாள்களும், வழிபாடு செய்து பத்தாம் நாள் விஜயதசமி அதாவது வெற்றி பெற்ற பத்தாம் நாள் என மகா நோன்பு இருந்து வழிபாடு நிறைவு செய்யப்படும்.

வீரத்திற்குரிய துர்க்கை உமையாகச் சிவபெருமானின் உடலில் இடப்பாகத்தில் இருக்கின்றாள். செல்வத்திற்குரிய இலக்குமி, மகா விஷ்ணுவின் சக்தியாக அவன் மார்பில் இருக்கிறாள். கல்விக்குரிய சரஸ்வதி பிரமதேவனின் சக்தியாக அவர் நாவில் இருக்கிறாள். எனவே வீர சக்தியாகிய துர்க்கை உடலையிடமாகவும், செல்வ சக்தி இலக்குமி மனதை இடமாகவும், கல்விச் சக்தி சரஸ்வதி நாவையிடமாகவும் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

நாம் எக்கருமத்தையும் முதலில் நினைக்கின்றோம். பின் சொல்கின்றோம். அதன்பின் செய்கின்றோம். நினைப்பது மனம், சொல்வது நா, செய்வது உடல். இவற்றைச் சைவசமய வழக்கில் திரிகரணங்கள் என்போம். மனம் வாக்குக் காயம் எனும் திரிகரணங்களும் தூய்மையாகவும், உறுதியாகவும், தெளிவாகவும் இருந்தாலே எடுத்த காரியம் சித்தியாகும். அங்கு சக்தி உறைவாள்.

கடவுள் எமக்கு நேரில் வந்து நாம் கேட்பதைத் தருவதில்லை. அவர் எம்முடனாகி எமக்குள் நின்றே கருமத்தை நிறைவாக்கித் தருகின்றார். எனவே நவராத்திரிக் காலத்தில் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருட் சக்தியாகிய வல்லமையை எமது மனதிலும் வாக்கிலும் செயலிலும் வருவித்துக் கொள்வோம்.

# மறக்கருணை

இறைவன் எமக்கு நல்வாழ்வைத் தந்து எம்மை நல்வழியில் வாழ வைக்கின்றான். இந்த வாழ்வும் வளமும் சிவன் தந்தது என்ற நன்றி மறந்து நல்லதை மறந்து, அல்லதைச் செய்யும் போது இறைவன் எம்மைத் தண்டித்துத் திருத்துவதற்காகத் துன்பத்தைத் தந்து வருத்து கின்றான்.

இறையொருவர்; அவர் சிவபெருமானே. ஏகனாகிய சிவபெருமானை வணங்கும் நாம் விநாயகர், முருகன், வயிரவர், வீரபத்திரர் முதலான தெய்வங்களையும் வணங்குவதேன் எனும் வினா எழுகின்றது. சிவனன்றி வேறு தெய்வம் இல்லை. சிவனே அத்தெய்வங் களாகி வந்து ஆன்மாக்களை உய்விக்கின்றார் என்பதே உண்மை. "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொருபாகனார்தாம் வருவர்" என்பது சிவஞான சித்தியார் கூறும் எண்மை. இந்த வாழ்வும் வளமும் சிவன் தந்தது என்ற நன்றியை மறந்து, தம்நிலை மறந்து, சிவனை மறந்து கொடுமை செய்யும் கொடியவர் களையும் அடியவர்களாக்கும் சிவபெருமானின் மறக்கருணையே மூர்த்தி பேதங்களுக்குக் காரணமாகும்.

சிவபெருமானிடம் வரம்பெற்ற கஜமுகாசுரன் வரம் பெற்றுவந்த வலிமையால் நன்றி மறந்து உலகில் வாழ் உயிர்களை வருத்தினான். அவனது கொடுமைக்காற்றாது மனிதரும், தேவரும், முனிவரும் சிவனிடம் முறையிட்டனர். சிவபெருமானே விநாயகராகி வந்து அவனை வதம் செய்தார். அவன் தவவலியால் பெருச்சாளியாகி நின்று எதிர்த்த போதும் அவனைக் கொன்றழிக்காமல் அருட்பார்வையால் அவனது ஆணவ முனைப்பையடக்கித் தனக்கு வாகனமாக்கி அருள்பாலித்தார்.

சூராதி அவுணர்கள் சிவபெருமானிடமிருந்து பெற்ற வரத்தை மறந்து, சிவனையும் மறந்து தேவரையும், முனிவரையும் கொடுமைப் படுத்தியபோது முருகனாகி வந்து சூரனை வதம் செய்தார். சூரன் சேவலும் மயிலுமாகி நின்று எதிர்த்த போது அருட்பார்வையால் அவனது ஆணவத்தையடக்கி மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் ஆக்கி அருள் பாலித்தார்.

படைத்தற் கடவுளாகிய பிரமா தனக்கும் ஐந்து தலை சிவனுக்கும் ஐந்து தலை. தான் படைப்பவன்; சிவன், தான் படைத்ததை அழிப்பவன்;

ஆதலால் தானே பரம்பொருள் எனக்கருதிய போது சிவபெருமான் வயிரவராகி வந்து பிரமனின் ஒருதலையைக் கிள்ளியெடுத்து ஏனைய தேவர்களிடம் இரத்தப் பிச்சையேற்று அவர்களின் ஆணவத்தை அடக்கி அருள் புரிந்தார்.

தவம் செய்து சிவனிடமிருந்து உமாதேவியாரைத் தனக்கு மகளாகப் பெற்றான் தக்கன். அதனால் சிவன் தனக்கு மருமகன் தானே என்று செருக்குற்றுச் சிவனை அவமதித்து விஷ்ணுவைத் தலைவனாகக் கொண்டு ஒரு யாகம் செய்தான். தக்கனுக்குப் பயந்த தேவர்கள் எல்லோரும் அதிற் பங்கு கொண்டனர். சிவபெருமான் வீரபத்திரராகச் சென்று யாகத்தை அழித்துத் தக்கன் முதலாய தேவர்களைத் தண்டித்து அருள் புரிந்தான்.

நன்றி மறவாது அன்பின் வழி நிற்போரை இறைவன் அறக் கருணையால் ஆட்கொள்வார். நன்றி மறந்து ஆணவச் செருக்கால் உலகிற்குக் கொடுமை செய்வோரை மறக்கருணையால் தண்டித்துத் திருத்தி அருள் புரிவார். கொடியவர்களையும் அடியவர்களாக்கி ஆட்கொள்ளும் இறைவன் கருணைக்கு எல்லையே இல்லை. இதனைக் கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்

**ஒன்றொரு பயன்தனை உதவினோர் மனம்**
**கன்றிட அவரது கருதிச் செய்வரேல்**
**புன்றொழிலவர்க்கவர் புரிந்த நன்றியே**
**கொன்றிடுமல்லது கூற்றும் வேண்டுமோ.**

எனக் கூறுவார்.

ஆதலால் இப்புராணக் கருத்துக்களை மனதுட் கொண்டு இந்த நல்வாழ்வைத் தந்த இறைவனுக்கு நன்றியுடையோராய் உலகிற்கு நல்லதைச் செய்து நற்கதி அடைவோம்.

**"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது**
**கொல்லவல்லக் கொல்ல வல்லப்**
**பொல்லா வினை தீர்க்க"**

என்பதை உணர்ந்து உய்தி பெறுவோம்.

# சாந்துணையும் கற்போம்

நான் அண்மையில் ஒரு பேரறிஞரிடம் போனேன். அவருக்கு வயது 85. படித்துக்கொண்டிருந்தார். வணக்கம் சொல்லிவிட்டு அவர் உத்தரவுப் படி அமர்ந்தேன். என்னைப் பார்த்துச் சிரித்தார். "நான் படிக்கிறேன்; என்னைப் பார்த்த பேரன் "பாட்டா என்ன பரீட்சை எடுக்கப் போறியள்; எப்ப பரீட்சை? என்று கேட்டான்." அவனுக்குப் பதில் சொல்லாமல் சிரித்துச் சமாளித்து விட்டேன். உடனே நீங்கள் வருகிறீர்கள். ஏன் படிக்கிறனென்று உங்களுக்கு விளங்குதோ" என்றார். நான் பணிவுடன் "வள்ளுவர் சொன்னபடி செய்கிறீர்கள். நானும் அதற்குத்தான் உங்களைத் தேடி வந்தேன்" என்றேன், அவர் தலையாட்டிச் சிரித்தார்.

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்புடைத்து"**

என்ற வள்ளுவப் பெருமானின் திருக்குறளை விளங்கப்படுத்தினார்.

ஒருவன் ஒரு பிறப்பிற் பெற்ற கல்வியறிவு அவனுக்கு அடுத்துவரும் பிறவிகள் தோறும் தொடரும். தொடர்ந்து வரும் பிறப்பின் தேவைக்காகச் "சாந்துணையும் கற்க" என்று சொல்லி வைத்தார்கள் அறநூலார். தேடிய செல்வம் எல்லாம் உடலோடு நின்றுவிடும். கல்வி மட்டும்தான் உடலைவிட்டு உயிர் பிரிந்த பின்னும் உயிருடன் தொடர்ந்து வரும். ஆதலால் கற்றலே முதற்கடன். கற்றவனுடைய கல்வி அறிவினால் அவன் செய்யும் நற்கருமங்களின் காரணமாக நல்ல புண்ணியப் பேற்றையும் தரும் என்னும் உண்மையை உணரவைத்தார்.

பஞ்ச பாண்டவரிலே "வில்லுக்கு விஜயன்" என்று போற்றப்படு பவன் அருச்சுனன். அவன் சிவபெருமானிடமிருந்து "பாசுபதாஸ்திரம்" எனும் அம்பினைப் பெறச் சிவனை நோக்கி ஒற்றைக்காலில் நின்று கடுந்தவம் செய்கிறான். சிவபெருமான் காட்சி கொடுக்கப் பெருமானின் தரிசனம் பெற்ற அருச்சுனன் தன்னை மறந்த ஆனந்த நிலையிற் "பெருமானே உங்கள் மீது என்றும் ஆரா அன்புடன் இருக்கும் வரம் வேண்டும்" எனக் கேட்கின்றான். "அருச்சுனா உனக்கு இப்போது வேண்டியது பாசுபதாஸ்திரம். அதற்காகவே தவம் செய்தாய். அதனைத் தந்தேன். மறுபிறப்பில் நீ என் மீது ஆராத அன்பைப் பெறுவாய்" என்று வரம் கொடுத்து மறைகிறார். இது ஒரு இலக்கியச் செய்தி.

கண்ணப்பர் எல்லார்க்கும் அறிமுகமானவர். வேடர் குலத்தில் பிறந்தவர். மிகச் சிறுவயதிலேயே வில்வித்தையில் மகா திறமைசாலி யாகிறார். எல்லோரும் வியக்கிறார்கள். தந்தை நாகன் வேடர் குல வழக்கப்படி அவரை கன்னி வேட்டைக்கு முதல் முறையாக அனுப்பு கிறார். வேட்டையாடச் சென்றவர் ஒரு காட்டுப் பன்றியைத் தொடர்ந்து செல்கிறார். அது காளத்தி மலைமீது செல்கிறது. தொடர்ந்து சென்று அதை எய்து வீழ்த்துகிறார். வேட்டையாடிய களைதீரப் பொன்முகலி யாற்றில் நீர் அருந்தச் சென்றவர் மலையில் சிவலிங்கத்தைக் காண்கிறார். களையும் தாகமும் மறைய அன்பு மேலிடுகிறது. ஓடோடிச் சென்று பெருமானைக் கட்டித்தழுவி "இக்காட்டில் தன்னந்தனியே சுவாமி இருக்கலாமா? நானே துணையாயிருப்பேனெனத் தன்னை மறந்த நிலையில் பெருமானை வணங்கிக் காத்திருக்கிறார். ஆறு நாட்கள் கழிகின்றன. பெருமானின் கண்ணில் இரத்தம் வடிகிறது. கண்ணப்பர் "ஊனுக்கு ஊன்" என்பதையறிந்து தன்கண்ணையே தோண்டி அப்பு கிறார். அக்கண்ணில் இரத்தம் தடைபட மற்றக் கண்ணில் இரத்தம் வடிகிறது. எனக்கு இன்னுமொரு கண்ணுளது. அப்பனுக்கு அதனையும் தோண்டி அப்புவேன் எனத்துணிந்து மற்றக் கண்ணையும் அம்பால் தோண்டும்போது சிவபெருமான் தோன்றி அவர் கையைப் பிடித்து "நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, என அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று தடுத்து ஆட்கொள்கின்றார்.

வேடுவர் குலத்திற் பிறந்த கண்ணப்பருக்கு இத்தனை பக்தியும் ஞானமும், பரிபக்குவமும், ஆராத அன்பும் எப்படி வந்தன.

அருச்சுனனின் அடுத்த பிறப்புத்தான் கண்ணப்பர். முற்பிறப்பின் தொடர்ச்சியாக அவனின் வில்வித்தையும், சிவன் வரம் கொடுத்தபடி ஆராத, தலையாய அன்பும் அவனுக்குக் கிடைத்தன. சிவலிங்கப் பெருமானைக் கண்டவுடன் காந்தம் இரும்பைக் கவர்வது போலக் கவரப் பட்டான். முற்பிறப்பின் புண்ணியம் இப்பிறப்பில் சிவப்பேற்றை நல்கிறது. ஒருமையில் கற்றது எழுமையும் தொடரும் என்பது பொய்யா மொழியல்லவா?

# யார் பெரியர்

நாம் யார்? எத்தகையவர்? எம் நிலை என்ன? நாம் பெரியவனா சிறியவனா? எம்மைப்பற்றி நாமே அறிவதற்கு வள்ளுவப் பெருமான் ஓர் அளவுகோல் காட்டுகிறார்.

**"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலாதார்.**

என்பதே வள்ளுவர் காட்டும் அளவுகோல். செய்தற்கரிய செயலை எவர் ஒருவர் செய்கிறாரோ அவரே பெரியவர். செய்தற்கரிய செயலைச் செய்யாதவர் சிறியவர் என்பது அவர் கூற்று. இந்த அளவு கோலால் அளந்து பார்க்கும் போது நாமெல்லாம் சிறியர் எனும் உண்மையை அறிகின்றோம்.

அப்படியாயின் நாம் சிறியவர்களாகவே வாழ்ந்து மடிவதா. அது மானமற்ற, விலங்கு வாழ்வாகவல்லவோ முடியும். விலங்குகள் போல் பசிவந்தபோது உணவுதேடி உண்டு, உறக்கம் வந்தபோது உறங்கி, இனப்பெருக்கம் செய்து இறத்தல் தான் வாழ்வின் நோக்கன்று. அப்படி யாயின் நாமென்ன செயற்கரிய செயலைச் செய்ய முடியும் என்ற ஏக்கம் உண்டாகின்றது.

இந்த ஏக்கத்தைப் போக்கச் செயற்கரிய செய்த ஒருவர் இருவரையல்ல அறுபத்து மூன்று தனியடியார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் எங்களுக்கு உதாரணமாகக் காட்டுகின்றார் சேக்கிழார் சுவாமிகள். அவர்களது வரலாறுகளை விரித்துரைத்து அவர்கள் செய்த செயற்கரிய செயல்களையும் அதனால் அவர்கள் பெற்ற நற்கதியையும் காட்டுகின்றார். இதற்காகத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் அவர் பாடித் தந்த அரும்பெரும் பொக்கிசம் ஆகும். சைவசமய மக்களின் வாழ்வியல் எப்படி அமைய வேண்டுமெனக் காட்டும் சைவக்காப்பியம் அதுவாகும்.

அதன்மூலம் எக்குலத்திற் பிறந்தாலும், எத்தொழிலைச் செய்தாலும் அதனூடாகச் சிவத்தொண்டு செய்து, உய்தி பெற்றுச் செயற்கரிய செய்யும் பெரியவராகலாம் என்ற மனஉறுதியைத் தருகிறார். செயற்கரிய செய்பவர் சிவனடியார் எனப் போற்றப்படுவர். சிவனடியார்கள்

எப்படி இருப்பார்கள். அவர்களின் புறக்காட்சி எப்படியிருக்கும், அகக்காட்சி எப்படியிருக்கும் என்பதை,

**மாசிலாத மணிதிகழ் மேனிமேல்**
**பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்**
**தேசினால் எத்திசையும் விளங்கினார்**
**பேசவொண்ணாப் பெருமை பிறங்கினார்"**

என்கிறார். சிவனடியார்களின் உடல் நல்லதையே செய்யும் தூய்மையுடையது. அதில் உருத்திரனாகிய சிவபெருமானின் கருணை யாகிய உருத்திராக்க மணிமாலை விளங்கும். சிவப்பேற்றினை உணர்த்தவல்ல வெண்ணிறத் திருநீறு உடலெங்கும் துலங்கும். புறத்தே காணும் திருநீற்றைப் போலவே உள்ளமும் கள்ளங்கபடமற்ற வெள்ளை யுள்ளமாக இருக்கும். தங்கள் அருட்பிரவாகத்தினால் எவ்விடத்தும் அருளொளி பரப்புவர். அவர் இருக்கும் இடமெல்லாம் குறைவற்ற நிறைவே குடிகொள்ளும். அவர்தம் பெருமை பேச்சில் அடங்காத தகைமையுடையது. அதுமட்டுமல்ல

**"ஆரம்கண்டிகை ஆடையும் கந்தையே**
**ஈரநெஞ்சினர் யாதும் குறைவிலார்**
**பாரம் ஈசன் பணியல தொன்றிலார்**
**வீரம் என்னால் விளம்பும் தகையதோ.**

என்கிறார். அவர் அணியும் மாலை உருத்திராக்கம், அணியும் ஆடை கந்தைத்துணி, ஆனால் அவர்கள் யாதும் குறைவிலா நிறைவு உடையோராவார். எந்நேரமும் மற்றவர் குறைதீர்க்கும் கருணையாகிய ஈரநெஞ்சுடையவராயிருப்பர். இறைவனுக்குத் தொண்டு செய்வதே அவர்தம் மனப்பாரமாயிருக்கும்.

நல்லது கெட்டது எனும் உலகியற் பற்றுக்களைத் துறந்தவர். ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றாகவே மதிப்பவர். சிவபெருமானைக் கும்பிடுவதேயன்றி வீடுபேற்றைக் கூட விரும்பிக் கேட்க மாட்டார்கள். இத்தகைய பெரியவராவதற்கு நாமும் முயல வேண்டும். சுயநலமற்றுப் பிறர்க்குதவும் மனப்பக்குவம் பெற்றுச் செய்யும் தொழிலே தெய்வப் பணியாய்ச் செய்து இறைவழிபாட்டில் திழைத்து இன்புறுவோமாக.

# அழுக்காறு அகற்றி வாழ்வோம்

இவ்வுலகில் வாழும் மக்களில் இருவகையினரைப் பார்க் கின்றோம். ஒருவகையினர் பிறருடைய சீர்சிறப்புக்களையும், மகிழ்ச்சி யான வாழ்வையும் பார்த்துத் தாமும் மகிழ்ந்து அவர்களைப் பாராட்டி உவகையுறுகிறார்கள்.

இன்னொரு பகுதியினர் பிறருடைய சிறப்புக்களைக் கண்டு மனம் புழுங்கி அவர்களில் வெறுப்புக் கொண்டு பொறாமைப்படுகிறார்கள்.

இவர்களில் பிறராக்கம் கண்டு மகிழ்வோர் சிலரே, அவர்கள் மன அமைதியாகச் சந்தோஷமாக வாழ்கிறார்கள். பிறராக்கம் கண்டு பொறுக்க முடியாமற் பொறாமைப்படுவோர் பலர். இவர்களுக்கு வாழ்வில் அமைதியே இல்லை. எந்நேரமும் மன உறுத்தல்தான்.

அடுத்தவர் ஆக்கத்தைக் கண்டு பொறுக்க முடியாத குணத்தைப் பெரியோர் அழுக்காறு என்று சொல்வர். அவர்கள் மனமும் வாழ்வும் அழுக்கு நிறைந்ததாய்த் தீமையே விளைவிப்பதாய் இருக்கும். அமைதி மருந்துக்கும் இருக்காது.

**அழுக்காறு எனஒருபாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்.**

என்பார் வள்ளுவப் பெருமான், அழுக்காறு எனும் பாவி ஒருவனுடைய செல்வத்தையும் அழித்து அவனைத் தீய வழியில் செலுத்திவிடும்.

பொறாமை, மற்றவரிலும் பார்க்க மேலானதைத் தாம் பெற வேண்டுமென்ற அவாவை உண்டாக்கும். அவாவெனும் பேராசை மனதிற் குடிகொண்டுவிட்டால் நல்லது கெட்டது எது என்பதை மறந்து, எப்படியும் நினைத்ததை அடைய வேண்டும், யார் என்ன சொன்னாலும் தான் நினைத்ததே சரி எனும் நிலைக்கு ஆளாக்கிவிடும்.

அவருடைய நன்மைக்காகச் சொன்னாலும் ஏற்க மாட்டார்கள். பெரியவராயினும் மதிக்கவும் மாட்டார்கள். மதிப்புக்குப் பதில் வெகுளி கொள்வர். வெகுளி அறிவை மறைத்துவிடும்.

வெகுளியினால் யாருடன் என்ன பேசுகிறோம் என்பதையறியாமல் இன்னாத வார்த்தைகளைப் பேச வேண்டிவரும். அதனால் மற்றவர்க்கு வெறுப்பும் துன்பமும் உண்டாகும். உலகு பழித்துரைக்கும் நிலைக்கு ஆளாகி அழிவு எய்த வேண்டிவரும். கோபம் பாவத்தைத் தேடித்தரும்.

பொறாமையாகிய அழுக்காற்றினால் பேராசையாகிய அவாவும், அவாவினால் கோபம் ஆகிய வெகுளியும், வெகுளியினால் தீயவார்த்தை களாகிய இன்னாச் சொல்லும் ஏற்படும்.

அழுக்காறு மனதில்தான் முதலில் தோன்றும், அதற்கு இடம் கொடுத்தால் அவாவும் சேர்ந்துவிடும். அழுக்காறும் அவாவும் சேர்ந்து விட்டால் வெகுளி மனத்தில் இருந்து உடலையே ஆட்கொண்டு செய்யாதனவெல்லாம் செய்யச் செய்யும். அதற்கு உதவியாக இன்னாத வார்த்தைகள் வாயில் இடையறாது வந்து கொண்டே இருக்கும். அழுக்காறும் அவாவும், வெகுளியும் இன்னாச் சொல்லும் குடிகொண்டால் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் அறம் தவறும். நினைப்பதும், சொல்வதும், செய்வதுமாகிய அனைத்துமே பாவ கருமங்களாகி அழிவைத் தரும்.

**"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்ற தறம்"**

என்ற வள்ளுவப் பெருமான் வாக்கின்படி இந்த நாலும் எம்மை அறநெறியினின்றும் வீழ்த்தி அவநெறியில் மாய்த்துவிடும்.

பஞ்சபாண்டவர் தலைவன் தருமர் தருமநெறி தவறாதவர். பிறர் எவர் மீதும் பொறாமை கொள்ளாதவர். நல்ல மனம் படைத்தவர். அதனால் அவருக்கு எல்லாரும் நல்லவர்களாகவே இருந்தார்கள். பாண்டவர் புகழ் உலகெங்கும் பரவியது.

துரியோதனன் பாண்டவர் பெருமை கண்டு பொறாமை கொண்டான்.

ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றிய அழுக்காறும் அவாவும் வெகுளியும் இன்னாச் சொல்லும் ஒருருவாகி மகாபாரத யுத்தத்துக்கே வழிகோலிப் பேரழிவைத் தந்தன. பொறாமை கொண்ட கௌரவர் அழிந்தனர். பொறுமை கண்ட பஞ்சபாண்டவர் வென்றனர்.

ஆதலால் அழுக்காறு எனும் பாவி எம்மில் குடிகொள்ள இடமளியாமல், பிறராக்கம் கண்டு மகிழ்ந்து சாந்தியும் சமாதானமும் நிலைக்க வாழ முயல்வோமாக.

# கோமாதா குலம் காப்போம்

சைவ சமயத்தவர்களாகிய எம்வாழ்வுக்குப் பெருந்துணையாகப் பேர் உபகாரியாக இருப்பது பசு. எமது பூசை வழிபாட்டுக்குரியது அது. கோமாதா எனச் சைவம் பசுவைப் போற்றுகின்றது.

பெற்றதாய் பிள்ளைக்குக் குழந்தைப் பருவத்தில் மட்டும் தான் பாலூட்டுவாள். பசுவோ நம் அனைவர்க்கும் குழந்தைப் பருவம் முதல் விருத்தப் பருவம் வரை, அதற்கப்பால் உயிர் பிரியும் வேளையிற் பயன்படக்கூடிய வகையிற்கூடப் பால் தருகின்றது. அதனாலே தாய்மார் களுக்கெல்லாம் தாயாக, அரச மாதாவாகப் பசுவைக் கோமாதாவென்று போற்றுகின்றோம்.

எமக்குப் பயன் இல்லையெனக் கழித்துவிடும் தவிடு, கஞ்சி, கழுநீர், வைக்கோல், புல், பிண்ணாக்கு இலை, குழை முதலானவற்றைத் தான் உண்டு அதிசயிக்கத்தக்க பூரண சத்துள்ள பாலைத் தருகின்றது பசு. அதுமட்டுமல்ல அதன் கழிவுப் பொருள்களான சாணமும் சலமும் கூட எமக்குப் பயிர் வளர்க்கும் உரமாகவும், கிருமிநாசினியாகவும் பயன் படுகின்றன. அதுமட்டுமன்றி வீட்டையும், சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருப்பதற்குச் சாணியைப் போலப் பயன்படுவது வேறொன்று மில்லை.

நாம் வணங்கும் எல்லாத் தெய்வங்களும், தேவர்களும், முனிவர் களும் புண்ணிய தீர்த்தங்களும் பூலோகத்தில் பசுவிலே எழுந்தருளி இருக்கின்றார்கள். பசுவை வணங்குவதன் மூலம் எல்லாத் தேவர்களின் அநுக்கிரகத்தையும் பெறமுடியும்.

அதனாலேதான் சிவாலயத்தில் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யுமுன் கருவறையில் பசு விடப்படுகின்றது. புதுவீடு அமைக்கும் இடத்தில் பசு கட்டப்படுகின்றது. திருமணத்தின் போது தம்பதிகள் முதலில் பசுவைத் தரிசனம் செய்கின்றனர். அந்தியேட்டிக் கிரியையிற் கூடப் பசுதரிசனம் நடைபெறுகின்றது. தானங்களில் சிறந்ததாகிய கோதானம் உடலைப் பிரிந்த உயிர் நல்லகதி அடைவதற்கு உபகார மாகச் செய்யப்படுகின்றது. சிவபூசை முடிவிற் செய்யப்படும் கபில பூசைக்குரியதாகவும் பசு வணங்கப்படுகின்றது. அதுமட்டுமன்றிச் சிவாலயத்திற் "கோபூசை" எனப் பசுவுக்கு பூசை செய்து வணங்கப்படுகின்றது.

சைவக்கிரியைகள் அனைத்திற்கும் வேண்டிய பஞ்சகௌவியத் திற்குரிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகியவற்றைப் பசுவே தருகின்றது. அபிஷேகத்திற்குரிய பால், தயிர் என்பவற்றையும், தீபம் ஏற்றுவதற்கும், நைவேத்தியம் செய்வதற்கும் உரிய நெய்யையும் தருவது பசுவே. சிவகதியை நல்க வல்ல சிவசின்னமாகிய திருநீற்றுக்குரிய மூலப்பொருளைத் தருவதும் பசு.

நன்றாகச் சிந்திப்போமானால், வாய் பேசாது எம்முடன் எமக்காக நடமாடும் தெய்வத்திருவுரு பசு என்பதை உணர முடியும். அதனாலே தான் "பசுஓம்புதல்" சிவபுண்ணியம் என எமது சமய சாஸ்திரங்கள் சொல்கின்றன. "யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை" என்பார் திருமூலர் சுவாமிகள். பசுவுக்கொரு பிடி தீன் கொடுப்பதே உயர்ந்த சிவபுண்ணியம் எனில் பசுவின் பெருமை எத்தகையது என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

திருமூலர், சண்டேசுரர், ஆனாய நாயனார், மனுநீதி கண்ட சோழன், ஞானப்பிரகாச முனிவர் முதலானோர் பசுஓம்புதல் மூலம் சிவகதி பெற்ற செய்திகள் இதற்குச் சான்றாகும்.

ஆனால் சிவகதி தரும் கோமாதாவான பசுவுக்கும் அதன் குலமான மாடுகளுக்கும் இன்று என்ன நடக்கிறது. கொன்று தின்று விடுகிறார்களே! உடல் வளர்க்கும் மலிவான உணவென உண்டு மலிவாகப் பாவத்தைச் சேர்த்துப் பாழ்படுகிறார்களே!

சைவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொண்டு, பசு தந்த திரு நீற்றை நெற்றி நிறையப் பூசிக்கொண்டு, அதன் இறைச்சியை உண்பது எவ்வளவு வெட்கம், எவ்வளவு கொடுமை. பசுவின் ஒரு துளி இரத்தம் நிலத்தில் வீழினும் ஒரு கோடி அசுரர் தோன்றி உலகை கொடுமைப் படுத்துவர் என்று நீதி நூல் சொல்வதை இன்று நேரில் நிஜமாகக் காண கிறோமல்லவா.

சைவர்கள் மட்டுமற்றி மனித குலம் முழுவதுமே உயிர் வாழப் பயன்படும் தெய்வீகப் பசுவையும், அதன் குலமான மாடுகளையும் கொல்லாமற் காக்கும் பணியில் ஒவ்வொருவரும் பங்குபெற வேண்டும்.

**தாமாகத் தாவரநல் உணவை உண்டு**
**தகுபாலும், பாலுணவும் தந்து வாழும்**
**கோமாதா குலத்தினையே கொன்று தின்னும்**
**கொடுமையினைப் போக்கிடவே எழுந்து வாரீர்**

★★★

# தீதும் நன்றும் பிறர்தரவாரா

நம் வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றன. இன்பம் வரும்போது துவழ்கின்றோம். அதேவேளை அத்துன்பம் வேறு யாராலோ வந்ததென மற்றவரைக் குறை சொல்கின்றோம். துன்பத்துக்கு உண்மையான காரணம் என்ன என்பதை நாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

"தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்று நம் சங்கச் சான்றோர் சொல்லி வைத்துள்ளனர். எமக்கு நன்மையோ தீமையோ பிறரால் வருவனவல்ல என்பது இதன் பொருள். அப்படியாயின் நம்மாலே தான் நமக்கு தீமையும் நன்மையும் வரும் என்பது பெறப்படும்.

"தாம்தாமே செய்த வினை தாமே அனுபவிப்பர்," என்பது ஆன்றோர் வாக்கு. எனவே எமக்கு வரும் நன்மைக்கும் தீமைக்கும் நாமே காரணம் என்பதைச் சிந்திக்கும் போது நாம் செய்த நல்வினைகளால் நமக்கு இன்பமும், தீவினைகளால் நமக்குத் துன்பமும் விளைகின்றன என்பதை உணர முடிகின்றது.

"செய்வானும், செய்வினையும், சேர்பயனும், சேர்ப்பவனும் உய்வான் உளன் என்றுணர்" என்பது சாஸ்திர உண்மை. எக்கருமத்தையும் செய்பவனும் செய்யப்படும் கருமமும், அதனால் விளையும் பயனும் அப்பயனைச் செய்பவனுக்கே சேர்ப்பிக்கும் வல்லவனும் வேண்டும். அதன்படி கருத்தைச் செய்பவர்களாகிய எமக்கு அதன் பயனாகிய இன்ப துன்பங்களை இறைவனே சேர்ப்பிக்கின்றார். உழைப்பவனுக்கே ஊதியம் உரியது அதுபோலச் செய்பவனுக்கே சேர் பயன் உரியது. ஆதலால் எமக்குத் துன்பம் வரும்போது நாம் செய்த தீவினைப் பயன் அது என்பதை உணரவேண்டும்.

சூரபன்மன் சிவனை நோக்கித் தவம் செய்து 1008 அண்டங்களையும் 108 யுக காலம் ஆட்சி செய்யும் வரம் பெற்றான். தனது ஆட்சியில் தேவர்களைச் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாக் கினான். தேவலோகத்தைத் தீக்கிரையாக்கினான். தேவர்களைச் சிறை யிட்டு வருத்தினான். தனக்குக் குற்றேவல் செய்யும்படி கொடுமைப் படுத்தினான். தேவர் தலைவனாகிய இந்திரன் முதலியோர் பிரம

தேவனிடம் சென்று தம் குலத்திற்கேற்பட்ட துயரைக் கூறி முறை யிட்டனர். அப்போது பிரமதேவன் அவர்களுக்குத் துன்பம் ஏற்பட்ட காரணத்தைச் சொன்னார்.

முன்னொருகால் எனது மூத்த மகனாகிய தக்கன் தவ வலிமை யாலே தருக்குற்றுச் சிவனை மறந்து விஷ்ணுவை யாகத் தலைவனாக வைத்துச் செய்த யாகத்தில் அவனுக்குப் பயந்து நாமெல்லாம் பங்கு பற்றி அவிப்பாகமும் உண்டோமல்லவா? சிவபெருமான் வீரபத்திரராக வந்து யாகத்தை அழித்துத் தக்கன் முதலானோரைத் தண்டித்தார். அதன் தொடர்ச்சிதான் இது, சிவனை மறந்து செய்த யாகமாகிய சிவ நிந்தையில் நாம் பங்கு கொண்ட பாவம் தீரச் சிவபெருமானே சூரபன்மனைக் கொண்டு எம்மைத் தண்டிக்கின்றார்.

**பெற்றிடுங் குரவரானோர் பிள்ளைகள் தம்பால் நோயொன்**
**றுற்றிடில் பிறரைக் கொண்டும் உறுதுயர் செய்துதீர்ப்பர்**
**மற்றவர் தம்மேல் அன்போ வன்கணோ அதுபோல் நம்மைப்**
**பற்றிய பவங்கள் தீர்ப்பான் பரமனுமிவைகள் செய்தான்.**

பெற்றார்கள் பிள்ளைக்கு நோய்வந்தபோது அந்த நோயைத் தீர்ப்பதற்கு வைத்தியர் மூலம் மருந்து கொடுப்பர். அல்லது சத்திர சிகிச்சை செய்விப்பர். பிள்ளைக்கு மருந்து கசக்கும், சத்திர சிகிச்சை யாலே தாங்கமுடியாத நோ இருக்கும். பிள்ளைகள் துன்பப்படுவர். பிள்ளைகள் மீது கொண்ட வெறுப்பினாலா இப்படி வருத்துகிறார்கள். இல்லை, பிள்ளை மீது கொண்ட அன்பே அது. சில நாளில் நோய் குணமாகி விடும். பிள்ளை சிரித்து விளையாடும். பெற்றார்க்கு நன்றி சொல்லும்.

அதுபோலத்தான் நாம் செய்த பாவம் தீரச் சிவபெருமானே சூரபன்மன் மூலம் எம்மைத் தண்டித்துத் திருத்துகின்றான் எனும் உண்மையை உணர்ந்து நாம் சிவபெருமானிடமே சென்று முறையிடு வோமெனத் தேவர்களைப் பிரமதேவன் வழிப்படுத்தினார் என்பது கந்தபுராணம் தரும் செய்தி.

ஆதலால் நமக்குற்ற துயர்க்கு நாமே காரணமென்பதுணர்ந்து நல்வினையே செய்து நற்கதி அடைய முயல்வோமாக.

☆☆☆

# எது பெரிது

சிறுவன் ஒருவன் நாவல் மரத்தில் நின்று நாவற் பழங்களைப் பறித்துத் தின்று கொண்டிருந்தான். அந்த வழியால் வந்த ஔவையார் "தம்பி! எனக்கும் நாவற்பழம் தருவாயா" என்று கேட்டார். "பாட்டி தாராள மாகத் தருகிறேன், உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா" என்று கேட்டான். ஔவையாருக்கு ஆச்சரியமாக இருந்தது. நாவற்பழத்திலும் சுட்ட பழமா? இவன் என்ன செய்கிறான் என்று பார்ப் போம் என்று எண்ணிக் கொண்டு "தம்பி சுட்டபழம் போடு" என்றார்.

சிறுவன் பழங்களைப் பறித்து நிலத்தில் எறிந்தான். ஔவையார் அவற்றைப் பொறுக்கி எடுத்து மண்ணை ஊதியூதித் தின்றார். சிறுவன் "என்ன பாட்டி பழம் சுடுகிறதா" என்றான் கிண்டலாக. பாட்டி வெட்கி விட்டார். "கருங்காலிக் கட்டைக்கு நாணாத கோடரி இருங்கதலித் தண்டுக்கு நாணும்" என்பது சரியாகப் போய்விட்டதே. என்னையே இவன் மடக்கி விட்டானே. இவன் சாதாரண சிறுவனாக இருக்க முடியாது, இவனிடத்து ஏதோ மறைபொருள் இருக்கிறது எனத் துணிந்து "நீ யார் தம்பி" எனக் கேட்டார். "என்னைத் தெரியாதா" என்ற முருகன் தன் உண்மைக் கோலத்தைக் காட்டினான். ஔவையார் பணிந்து வணங்கிப் பரவசமானார்.

ஔவையாரின் அரும்பெரும் அறிவுத்திறனை உலகிற்குக் காட்ட வேண்டுமென நினைத்த முருகன் "ஔவையே இந்த உலகிற் பெரியதெது?" என்று கேட்டான். ஔவை தமிழ்க் கிழவியல்லவா பாடியே விட்டாள்.

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய் பெரிது பெரிது புவனம் பெரிது" இந்த உலகம்தான் எல்லாவற்றிலும் பெரிது. "புவனமோ நான் முகன் படைப்பு" இந்த உலகைப் படைத்தவன் பிரமதேவன். அப்படி யாயின் பிரமன்தான் பெரியவன். அதுவும் பொருந்தாது. "நான்முகனோ கரியமால் உந்தி வந்தோன்" பிரமதேவன் கரியதிருமாலின் உந்திக் கமலத்தில் இருந்து தோன்றியவன் ஆதலால் திருமாலே பெரியர். அதுவும் சரியல்ல "கரியமாலோ அலைகடல் துயின்றோன்" ஆதலால் திருமால் பள்ளி கொள்ளும் திருப்பாற்கடலே பெரியது. "அலைகடல், குறுமுனி அங்கையில் அடக்கம்" அந்த அலைகடலோ குறுமுனியாகிய அகத்திய முனிவரின் கையில் ஒரு காலத்தில் அடங்கி இருந்தது.

ஆதலால் அகத்திய முனிவரே பெரியவர். ஆனால் "குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்". ஆதலால் குறுமுனியை விடக் கலசமே பெரியது. "கலசமோ இப்புவியின் சிறுதுளிமண்" ஒருதுளி மண்ணில் தோன்றிய கலசத்தைவிட இந்த மண்ணுலகே பெரிது. "இப்புவியோ ஆதிசேடனின் ஒருதலைப்பாரம்" ஆதலால் தன் ஆயிரம் தலைகளில் ஒரு தலையில் இப்புவியைத் தாங்கும் ஆதிசேடனே பெரியன். "ஆதிசேடனோ உமையவள் சிறுவிரல் மோதிரம்" ஆதலால் அவனை மோதிரமாகக் கொண்ட உமையே பெரியர். "உமையவளோ இறைவர் தம் உள்ளத் தொடுக்கம்" ஆதலால் இறைவன் பெரியர், "இறைவனோ தொண்டர்தம் உள்ளத்தொடுக்கம்" ஆதலால் இறைவனையும் தம் உள்ளத்துள் வைத்திருக்கும் "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" ஆகவே சொல்லுதற்கரிய பெருமைக்குரியர் தொண்டரே என்றார்.

சிவபெருமானிடம் எதையும் கேட்காத இயல்பினரான மாணிக்க வாசக சுவாமிகள் "வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே" என்பர். அப்படிப்பட்டவர் கூட சிவபெருமானிடம் தான் இருக்க ஒரு இடம் கேட்கின்றார்.

"சிவபெருமானே சக்தியாகிய உமாதேவியார் உங்களுக்குள் இருக்கின்றாள். சிவமாகிய நீங்கள் சக்திக்கு உள்ளே இருக்கின்றீர்கள். சிவமும் சக்தியுமாகிய நீங்கள் இருவரும் சேர்ந்து என்னுள்ளத்தே இருக்கிறீர்கள். அப்படியாயின் நான் இருப்பதற்கும் ஒரு இடம் வேண்டு மல்லவா? நான் அடியார்க்கு நடுவில் இருக்கும் அருளைத் தர வேண்டும்" என்கிறார்.

**உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி**
**அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால் அடியேன் உன்**
**அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்**
**முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.**

ஆதலால் சிவனடியார்கள் செயற்கரிய செய்யும் பெரியவர்களாவர். அவர் பெருமையே உலகிற் பெரியது என்பதுணர்ந்து, நாமும் சிவதொண்டு செய்து சிவகதி பெற முயல்வோமாக.

# குறைவிலாது உயிர்கள் வாழ்க

"குறைவில்லாதுயிர்கள் வாழ்க, இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்னும் தொடர்கள் எல்லோருக்கும் நன்கு பழக்கப்பட்டவை. இதற்கு நாம் செய்ய வேண்டுவது என்ன என்பதைச் சிந்திப்போம். உலகப் பொதுமறையாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல் திருக்குறள். மக்கள் வாழ்வியல் நூலாகிய திருக்குறளைத் தந்த வள்ளுவர்,

**"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமையானும் கெடும்"**

என்கிறார்.

அப்படியானால் இதில் திருக்குறளைப் படிக்கும் எங்களின் பங்கு என்ன என்று சிந்திக்க வேண்டியுள்ளது. வள்ளுவர் இதில் எங்களின் பங்கு என்ன என்பதை இரண்டு வகைப்படுத்துகின்றார். ஒன்று செய்தல் மற்றையது செய்யாமல் விடுதல். எதைச் செய்தல் வேண்டும், எதைச் செய்யாமல் விடவேண்டும் என்பதையும் அவரே அறுதியிட்டுச் சொல் கின்றார்.

தர்க்கரீதியாக எங்களைப் பார்த்துக் கேட்கின்றார். நீ அறிவுடைய வனா? அறிவீனனா என்பதைப் பின்வரும் அளவு கொண்டு அறிந்து கொள். பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை உனக்கு வந்த துன்பமாகக் கருதுவாயானால் நீ அறிவுடையவன், அப்படியில்லையெனில் உன் அறிவால் பயனில்லை, நீ அறிவற்றவன்.

**"அறிவினான் ஆகுவ துண்டோ பிறதின்நோய்**
**தன்நோய்போற் போற்றாக் கடை"** (குறள் 315)

என்பது குறள்.

ஆகவே உயிர்களுக்கு வரும் துன்பத்தை எமக்கு வந்த துன்ப மாகக் கருத வேண்டும் என்பதன் மூலம் நாம் செய்ய வேண்டியது எமக்கு வந்த துன்பத்தைப் போக்குவது போலப் பிற உயிர்களுக்கு வந்த துன்பத்தையும் போக்க வேண்டும். இதன் மூலம் நாம் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழவேண்டும் என்பதும் பெறப்படுகின்றது.

இதனையே மேலும் விரிவாக்கம் செய்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் வேண்டும் என்கிறார். பசித்துன்பம் தான் உயிர்களுக்கு என்றும் உள்ள கொடிய துன்பம். அதைப் போக்குவதற்கு நீ செய்யக்கூடியது

உன் தேட்டத்தைப் பகுத்து இல்லாதோர்க்கும் கொடுத்து பல உயிர்களையும் பாதுகாத்தல் வேண்டும்.

**"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாம் தலை"** (குறள் 332)

எனும் குறள் மூலம் அறிஞர் கூறிய எல்லா அறங்களிலும் மேலானது "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்கின்றார்.

எனவே நாம் செய்ய வேண்டுவன பிற உயிர்க்கு வரும் துன்பத்தை நமது துன்பம் போல மதித்து அவற்றைக் காத்தல், அதற்காகச் செய்ய வேண்டியது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் வேண்டும்.

அடுத்து நீ சிலவற்றைச் செய்யாது விடுவதாலும் எல்லா உயிரும் இன்புற்றிருக்க உதவலாம் என்கின்றார். அது உனக்கும் பிற உயிர்க்கும் நன்மை தரும். உன்னில் நீ அன்புடையவனானால் தீயது எதையும் செய்யாதே. தீயதைச் செய்தால் உனக்கும் கேடு வரும். உன்னால் பிறர்க்கும் கேடுவரும்.

**"தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்**
**துன்னற்க தீவினைப் பால"** (குறள் 209)

என்பது குறள். எனவே தீயன செய்யாதிருப்பதன் மூலம் பிற உயிர்கள் இன்புற்றிருக்க உதவலாம் என உணர்த்துகின்றார்.

தீயதைச் செய்யாதிருத்தல் மூலம் பிற உயிர்கள் இன்புறுவது மட்டுமல்ல அவையெல்லாம் உன்னைக் கைகூப்பித் தொழும் எனும் உச்சநிலையையும் காட்டுகின்றார். உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் கைகூப்பித் தொழுவதை யார்தான் விரும்பமாட்டார்கள். அதற்காக நீ செய்வதல்ல செய்யாமல் விட வேண்டியவை இரண்டு. ஒன்று பிற உயிர்களைக் கொல்லாமல் விடுதல், மற்றையது கொன்ற உயிர்களின் உடம்மை உண்ணாமல் விடுதல். இதனை,

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்"**

எனும் குறள் மூலம் உணர்த்துகின்றார்.

தீய செயல்களைச் செய்யாமல் வாழ்வதன் மூலம் எல்லா உயிரும் இன்புற்றிருக்க உதவ வேண்டும். திருக்குறளைக் கற்ற பயன் இதுவாதல் வேண்டும்.

★★★

# எல்லா உயிரும் இன்புற்றிருக்க

## - வள்ளுவர் காட்டும் வழி -

வள்ளுவப் பெருமான் இந்த உலகம் நல்லபடி வாழ வேண்டும், எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனே திருக்குறளைப் படைத்தார். அதனால்தான் உலகினர் எல்லோருமே திருக்குறளைப் போற்றுகின்றனர்.

திருக்குறளைப் படிப்பவர்கள் எப்படிப் படிக்க வேண்டும். படித்த பின் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லாமற் சொல்லி யுள்ளார். கற்றல் பற்றிச் சொல்லும் போது கற்க, கசடறக் கற்க, கற்பவை கற்க, கற்றபின் அதற்குத்தக்க நிற்க என்று சொல்கின்றார். இதன் மூலம் உலக நன்மை கருதி அவர் தந்த திருக்குறளை நாம் கற்க வேண்டும். அதை கசடற, அதாவது சந்தேக விபரீதம் அறத் தெளிவாகக் கற்க வேண்டும். அவ்விதம் கற்கவேண்டிய முறையில் நல்லாசிரியரிடம் கற்றபின் கற்றதற்குத்தக நிற்க வேண்டும். கற்றபடி வாழ வேண்டும் என நாம் தெளிந்து கொள்ள வேண்டும்.

இதன் மூலம் ஏனைய இலக்கியங்களைப் போன்று இலக்கிய இன்பம் பெறுவதற்கும், பேசுவதற்கும், எழுதுவதற்கும் மட்டுமல்லாது அதன்படி வாழ்வதற்காகக் கற்க வேண்டும். அதனால்தான் பெரியோர்கள் திருக்குறளை ஒரு வாழ்வியல் நூல் எனக் கூறுகின்றார்கள்.

வள்ளுவர் உலக உயிர்களின் நன்மை கருதித் திருக்குறளைப் படைத்தார் என்னும் போது இதனைப் படிப்போரும், அவர்கள் மூலமாகப் படிப்பறிவில்லா மக்களும் மற்றும் பகுத்தறிவு இல்லா உயிரினங்களும் நன்மை பெறவேண்டும் என்பதே நோக்கம் எனக் கொள்ளலாம்.

ஆன்மீக வாதிகள் முதல் சோஸலிச வாதிகள் வரை, ஆஸ்திகர் முதல் நாஸ்திகர் வரை, சமயவாதிகள் முதல் அரசியல் வாதிகள் வரை எல்லோருமே எல்லா உயிரினங்களும் இன்புற்றிருக்க வேண்டுமென்றே கூறுவர். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பாரதியார் "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்பார். திருமூலர் இதையே "யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி" என்பார். கந்தபுராணம் "குறைவிலாது உயிர்கள் வாழ்க" என்னும் இக்காலச் சினிமாப் பாடல் "எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்கிறது. இப்படி எங்கு பார்த்தாலும் எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற கொள்கை போற்றப்படுவதைக் காண்கின்றோம். அதைப் போற்றி வாழ்வோம்.

மகாகவி பாரதியார் எல்லா உயிரும் இன்புற்று வாழ்வதற்கு நான் உதவ வேண்டும். அதற்கு நீ எனக்கு உதவ வேண்டும் என்று பராசக்தியை வேண்டுகின்றார்.

தாயே என்னை நல்ல அறிவுடையவனாகப் படைத்திருக்கிறாய். நான் இந்த உலகில் உள்ள எல்லா உயிர்களும் இன்பமாய் வாழ்வதற்கு உதவி செய்வதற்கு வரம்தா. நல்ல வீணையைச் செய்து அதனைப் புழுதியில் எறியலாமோ. அதே போல என்னைப் படைத்த நீ பிறர்க்குதவ வரம்தா என்கிறார்.

**"நல்லதோர் வீணை செய்தே - அதை**
**நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ**
**சொல்லடி சிவசக்தி - என்னைச்**
**சுடர்விடும் அறிவுடன் படைத்துவிட்டாய்**
**வல்லமை தாராயோ - இந்த**
**மாநிலம் பயனுற வாழ்வதற்கே"**

பாரதி கேட்பது போல நாமும் பயனுற வாழ்வோம்.

# அறம் செய்தல் யார்க்கும் எளிது

"அறஞ் செய்ய விரும்பு" என்பது ஒளவையார் வாக்கு. இளமைப் பருவத்திலே இந்த விருப்பத்தை உண்டாக்கி விட்டால் பின் வளர்ந்து வருங்காலத்தில் அறத்தைச் செய்வார்கள் என்பது ஒளவையார் கொண்ட ஒரு உத்திமுறை இது.

எல்லார்க்கும் அறம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் பெரும் பாலும் உண்டு. ஆனால் அறம் செய்வதற்குப் பொருள் அமைய வேண்டுமே. எங்களிடம் இருக்கும் பொருள் எங்கள் தேவைகளுக்கே போதாதே. அப்படியிருக்க எப்படி அறஞ் செய்ய முடியும். தன்னைக் கண்டுதானே தானம் செய்ய முடியும் என்ற மனச் சஞ்சலம் தான் பலரை அறஞ் செய்ய விடாமல் குழப்பிக் கொண்டு இருக்கிறது.

இப்படிச் சஞ்சலப்படுபவர்களைப் பார்த்துத் திருமூலர் சுவாமிகள் பொருள் இல்லாமல் அறஞ்செய்யலாம், அறஞ் செய்வதற்குப் பொருள் கட்டாயமில்லை, மனம்தான் வேண்டும் என்று கூறி அறம் செய்யும் உபாயத்துக்குரிய நான்கு வழிகளைக் கூறுகின்றார்.

கடவுளை வணங்க வேண்டும் என்ற விருப்பம் உண்டுதானே. அதற்குப் பொருள் தேவையில்லை. பூவோ மாலையோ, பூசைப்பொருட் களோ இல்லை என்று கவலைப்படாதே. உன்னால் ஒரு இலையாவது பறிக்கமுடியாதா. ஒரு இலையைப் பறித்துக் கொண்டு போய் மனம் ஒன்றி, உண்மையான அன்புடன் அந்த இலையைப் போட்டு இறைவனை வணங்கு. இப்படி வணங்குதல் எல்லாரும் செய்யக்கூடிய இலகுவான வழிபாடல்லவா. "யாவர்க்கும் ஆம் இறைவற்கொரு பச்சிலை" என்கிறார்.

இரண்டாவது வழி, உன் அயலில் உலாவும் பசுவைப் பார். இந்தப் பசு இறைவன் பூசைக்குரிய பஞ்ச கௌவியங்களான பாலும் தயிரும் நெய்யும், கோமயம், கோசலமும் பெரியோர் வரை எல்லார்க்கும் பாலும் பால் பொருட்களும் கொடுத்து வளர்க்கும் புண்ணியப் பிறவியல்லவா. இந்தப்பசுவுக்கு ஒருபிடி தீனி போடு. அது பசுவுக்கு மட்டுமல்ல இறைவனுக்கும் மனிதர் எல்லார்க்கும் செய்யும் அறமாகும். "யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை" பசுவுக்கு ஒரு பிடி தீனி போடுதல் எல்லார்க்கும் இலகுவான வழியல்லவா என்கிறார்.

மூன்றாவது வழி. நீ உண்ணும் போது உன் உணவில் ஒரு பிடி ஏழைகளுக்குக் கொடு. உன் வீட்டில் உள்ளார் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிடி கொடுத்தால் என்ன குறைவு வரப்போகிறது. அது ஒரு ஏழையின் பசியைப் போக்குமல்லவா. சோறாக்கும் உலையில் அரிசியைப் போடும்போது அதில் ஒருபிடி அரிசியை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு வைத்தால் பிச்சை என்று வருவார்க்கு இல்லை யென்னாமற் கொடுக்கலாமே. இது எல்லாரும் செய்யக்கூடிய இலகுவான அறமல்லவா. "யாவர்க்கும் ஆம் உண்ணும்போதொரு கைப்பிடி" என்கிறார்.

நாலாவது வழி இந்த வழிகளிலும் செய்யமுடியாவிடின் மற்றவர் களுடன் குறிப்பாக நொந்து போனவர்களுடன் கதைக்கும் போது நாலு இதமான இனிய வார்த்தைகளைப் பேசு. அவர்களுடைய மனம் ஆறுதல் பெறும், கவலை நீங்கும், மகிழ்வு உண்டாகும். பிறருடன் நாலு இனிய வார்த்தைகள் பேசுதல் யார்க்கும் இலகுவான வழியல்லவா? அது அறச் செயல் அல்லவா? "யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" என்கிறார். ஆகவே திருமூலர் சொல்லும் அறஞ்செய்யும் மந்திரம்

**யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே.**

இந்த நான்கு அறவழிகளும் நாம் பெறவேண்டிய உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கையும் தரும் அறச் செயல்கள் அல்லவா.

அறம் செய்தலின் பயன் என்ன என்பதற்கு வள்ளுவர் ஒரு காட்சியைக் காட்டுகிறார்.

**"அறத்தா றிதுவெனல் வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தா னிடை.**

ஒருவன் சிவிகையிலே சுகமாக இருந்து போகின்றான். மற்றவர் நால்வர் சிவிகையைக் கஷ்டப்பட்டு சுமந்து கொண்டு போகிறார்கள். அறஞ்செய்தவன் சுகம் அனுபவிக்கிறான். செய்யாதோர் கஷ்டப்படு கிறார்கள். அறமே இன்பம் தரும்.

★★★

# திரிகரண வழிபாடு

இந்த உலகத்திலே புல்பூண்டு முதலிய ஓரறிவு உயிரினம் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதமான பிறப்புக்களைக் காண்கின்றோம். இவை அனைத்திலும் மனிதனே உயர்ந்த பிறப்பாகக் காணப்படுகின்றான். உடம்பால் ஸ்பரித்து உற்றறிதல், நாவால் சுவைத்தறிதல், மூக்கால் முகர்ந்தறிதல், கண்ணால் பார்த்தறிதல், காதால் கேட்டறிதல் ஆகிய ஐந்து அறிவுகளுக்கும் அப்பால் பகுத்து அறிதலுக்குரிய மனத்தை உடையவன் மனிதன் மட்டுமே. ஏனைய உயிரினங்களுக்கு மனம் இல்லை. மனம் உடையவன் ஆதலால் மனிதன் எனப் பெயர் பெற்றான்.

ஆகவே பகுத்தறிகின்ற மனத்தினால் ஏனைய உயிரினங்களுக்கு இல்லாத மனமும் உயர்வும் எனக்கு எப்படிக் கிடைத்தது, ஏன் கிடைத்தது. மனதால் நினைக்க முடிகிறது, நாவால் சொல்ல முடிகிறது, உடலால் செய்ய முடிகிறது. இது எப்படி என்று சிந்தித்தால் மானிடப் பிறவியின் மகத்துவம் தெரியும்.

சைவ சமய சாத்திரமாகிய சித்தாந்த சாத்திரத்தில் சிவஞான சித்தியார் இதற்கு விடை தருகின்றது.

**மானுடப்பிறவிதானும் வகுத்தது மனவாக்குக்காயம்**
**ஆனிடத் தைந்துமாடும் அரன்பணிக்காகவன்றோ**
**வானிடத்தோரும் மண்மேல் வந்தரன்தனை அர்ச்சிப்பர்**
**ஊனெடுத்துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ.**

மக்களின் பிறவிப்பிணியை நீக்குவதற்காகப் பசுவிடத்திலிருந்து உண்டாகும் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் பஞ்ச கௌவியங்களையும் அபிடேகமாகக் கொண்டருளும் சிவபெருமானை மனத்தால் நினைத்தும் வாக்கினால் அவன் புகழைப் பாடித் துதித்தும் உடம்பால் பணிந்தும் வழிபாடு செய்ய வேண்டும். இந்த வழிபாடு ஏனைய பிறவிகளில் செய்ய முடியாமையால் இந்த வழிபாட்டின் பொருட்டாக வன்றோ பிறவிகளில் விசேடமாகிய மானுடப்பிறவியை நாம் முன்செய்த தவத்தால் வகுத்துள்ளான்.

வானுலகினிலுள்ள திருமால் பிரமன் முதலிய தேவர்களும் ஏனைய உலகங்களில் சிவபெருமானை வழிபட முடியாமையால் தேச

விசேடமாகிய இந்த மண்ணுலகில் வந்து சிவனை அர்ச்சித்து வழிபடுகின்றனர்.

அவ்வாறு சிவனை வழிபடுவதற்குரிய இவ்வுலகில், அதற்கு உபகாரமான மானுட உடலைப் பெற்றும் வழிபட வேண்டும் என்னும் உண்மையை உணராமல் இந்த மனிதர் மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் உழல்கின்றார்களே என வருந்துகின்றார். இதன்மூலம் மானுடப் பிறப்பின் பயன் சிவவழிபாடேயாகும் என்பதை உணர்த்துகின்றார். இதனாலே தான் அப்பர் சுவாமிகள் எங்கள் உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் விழித்து,

தலையே நீ வணங்காய், கண்காள் காண்மிங்களோ, மூக்கேநீ முரலாய், செவிகாள் கேண்மின்களோ, நெஞ்சே நீ நினையாய், கைகாள் கூப்பித் தொழீர், கால்களே கோலக்கோபுரக் கோகரணம் சூழ்ந்து வாருங்கள் என்று திருவங்கமாலையில் கட்டளை இடுகின்றார்.

மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் சிவனை வணங்குதல் வேண்டும் என்பதை "வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை வணங்கி" மானிடப்பிறவிப் பயனை பெறவேண்டும் என்பதை உணர்ந்து தொழுவோம்.

இதனை மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருப்பள்ளி எழுச்சியிலும் காண்போம்.

புவனியில் போய்ப் பிறவாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப்பூமி
இவனுய்யக் கொள்கின்ற ஆறென்று நோக்கித்
திருப்பெருந்துறைவாய் திருமாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள வல்லாய்
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே.

# சிவனை நினைந்து வழிபடுவோம்

நாம் நம் கண்முன் யோகம். தியானம். தானம், தவம், தருமம், பாடல், ஆடல், பணிதல், யாகம் முதலான பலவித வழிபாடுகளைக் காண்கின்றோம். இவையெல்லாம் நாம் எதிர்பார்த்த பயனைத் தருகின்றனவா? இவற்றின் பயனைத் தருபவர் யார்? அவரை நினைத்து, அவரை முன்னிலைப்படுத்தி இந்த வழிபாடுகள் செய்யப்படுகின்றனவா? என்பதைச் சிந்தித்தல் பொருந்தும்.

இறைவன் ஒருவன், அவன் எங்கும் இருக்கின்றான். எனினும் வழிபடும் இடங்களாகிய ஆலயங்களிலும், சிவனடியாரிடத்திலும், ஞான குருவினிடத்திலும் தயிரில் நெய் போல இருக்கின்றான். ஏனைய இடங் களில் பாலில் நெய் போல இருக்கின்றான். தயிரில் இருந்து இலகுவாக நெய்யைப் பெறலாம், பாலில் நெய்யிருப்பினும் அதனைப் பெறுவது கடினம்.

ஆதலால் இறைவனை வழிபாடு செய்வதற்குரிய இடங்களில் வைத்து வழிபாடு செய்ய வேண்டும். இறைவனை - முழுமுதற் கடவுளை நினையாமல் செய்யும் யோகமோ, தியானமோ, யாகமோ பயன் தரமாட்டா. "அரனை மறந்து செய் அறங்கள் எல்லாம் வீண் செயல்" என்பது தத்துவம்.

பரம்பொருளாகிய இறைவனை முன்னிலைப்படுத்தி வழிபட்டுச் செய்யும் செயல் எதுவாயிருப்பினும் அது பலன் தரும். பரம்பொருளை நினையாமல் செய்யும் செயல் எவ்வளவு உயர்ந்ததாயிருந்தாலும் பலன் தராது. இதனைச் சிவஞானசித்தியார் என்னும் சித்தாந்த சாத்திரம் பின்வருமாறு கூறுகிறது.

**அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்**
**பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்**
**வரனுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி**
**நரரினிற்பாலன் செய்த தீமையும் நன்மையாய்த்தே.**

என்கிறது.

அரனாகிய சிவபெருமானிடத்து அன்புவைத்துச் செய்யும் செயல் பார்வைக்கு பாவம்போல் இருந்தாலும் அது அறப்பயனையே தரும். சிவபெருமானிடம் அன்பில்லாமல் செய்யும் செயல் புண்ணியச் செயலாயிருந்தாலும் அது பாவத்தையே தரும். உதாரணமாக

சிறு பையனாகிய விசாரசருமர் என்னும் சண்டேசுரர் மணலில் சிவலிங்கம் செய்து பால் கொண்டு சிவனை அன்போடு நினைந்து அபிடேகம் செய்தார். இதனைத் தடுத்த தந்தையின் காலை வெட்டினார். இங்கே தந்தையின் காலை வெட்டிய செயல் பாவம் போல் தெரிந்தாலும் சிவபூசைக்கு இடையூறு ஏற்படாதவிதத்தில் சிவன் மீது அன்பு கொண்டு செய்ததால் அவர் சண்டேசுர பதம் பெற்றார். தந்தையும் வெட்டிய காலைப் பெற்று இன்புற்றார்.

தக்கன் என்பவன் சிவனிடம் பல வரங்களைப் பெற்ற பெருமைக் குரியவன். அவன் சிவனை நிந்தித்து, சிவனை நினையாமல் பெரும் யாகம் செய்தான். அந்த யாகம் புண்ணியச் செயலாயிருந்தாலும் சிவனை நினையாததால் யாகம் அழிந்தது. பங்குபற்றியோர் யாவரும் தண்டிக்கப் பெற்றனர்.

**தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு இவ்வண்டத்துடனே**
**பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமும் அருளி**
**சோதி மணிமுடித்தாமமும் நாமமும் கொண்டர்க்கு நாயகமும்**
**பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.**

சிவனை நினைந்து செய்த விசாரசருமருக்கு சண்டேசுர பதவி கிடைத்தது. சிவனை மறந்து யாகம் செய்த தக்கனுக்குச் சொந்தத் தலையும் போய் ஆட்டுத் தலை கிடைத்தது. ஆதலால் எவ்வித வழிபாடு செய்தாலும் முழுமுதற் பொருளாகிய சிவனை நினைந்து வணங்கிச் செய்யும் செயலே உண்மைப் பயன் தரும் என்பதை உணர்ந்து வழிபடுவோம்.

# தானம் செய்யும் வழி

மனிதன் செய்யக்கூடிய காரியங்களிலே மிக உயர்ந்தது தானம். தானம் எனப்படுவது தனக்குக் கிடைத்ததைப் பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்தல் ஆகும். மழை எப்படி இன்னார் இனியார் என்று பாராமல் எல்லோார்க்கும் பயன்படப் பொழிகின்றதோ அதேபோல நாமும் இன்னார் இனியார் என்று பாராமல் எல்லார்க்கும் பகுத்துக் கொடுத்து வாழ வேண்டும். இதனை வள்ளுவர்

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர், தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என்கிறார். அறவோர்கள் சொல்லிவைத்த அறச் செயல்கள் அத்தனையிலும் தலைசிறந்தது தான்பெற்றதைப் பிறர்க்கும் பகுத்துக் கொடுத்து தானும் அனுபவித்துப் பிற உயிர்களைக் காத்தல் ஆகும் என்பது இதன் பொருள். இதனைத் திருமூலர் சுவாமிகள் திருமந்திரத்திலே

**ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்**
**பார்த்திருந்து உண்மின், பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே.**

என்கிறார்.

பிறக்கும் போது யாரும் செல்வத்தைக் கொண்டு வரவில்லை. இறக்கும்போதும் கொண்டு போவதில்லை. எங்கள் செல்வம் எல்லாம் இடைநடுவில் வந்தவை. ஆதலால் எல்லார்க்கும் பகிர்ந்து கொடுங்கள். நல்லவர் கெட்டவர் வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதம் பாராமல் யார் யாருக்குத் தேவையோ அவர்க்கெல்லாம் கொடுங்கள். நீங்கள் உண்ணும்போது யாரும் விருந்தினர்கள் ஏழைகள் வருகின்றார்களோ என்று பார்த்து அப்படி வந்தவர்க்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணுங்கள். நீங்கள் மட்டுமே உண்ண வேண்டும் என்று எண்ணாதீர்கள். காகங்களைப் பாருங்கள் அவை ஒரு உணவைக் கண்டவுடன் தன்னினத்தைக் கூவி அழைத்து இனத்துடன் சேர்ந்து உண்பதைப் பாருங்கள். அது காலமறிந்து அழைத்துக் கொடுத்து உண்பது போல நீங்களும் பசித்தோர்க்குப் பகிர்ந்து கொடுத்து உண்ணுங்கள்.

யாரும் வந்து விடுவார்களோ, அதற்கு முன் நாமே இந்த நல்ல பண்டத்தை உண்டுவிட வேண்டுமென்று அவாப்பட்டு அவசரமாக

உண்ணாதீர்கள். பசித்தோர் விருந்தினர் வந்தால் மகிழ்ந்து கொடுத்து உண்ணுங்கள். தானம் கொடுக்கும்போது இது பழமையானது இதை நாமே வைத்திருக்க வேண்டும் என்று பழமை பெருமை பாராதீர்கள். எது எனினும் கொடுத்து வாழுங்கள் என்று சொல்கின்றார்.

யார்க்கும் இடுவதே தானம் எனப்படும். இது கைமாறு கருதாமல் செய்யப்படும். உயர்வு தாழ்வு பார்த்துக் கொடுப்பது தானம் ஆகாது என்பதன் மூலம் தானம் என்றால் எது எனக்காட்டுகிறார்.

உண்ணும் உணவில் கூட யாரும் வருகின்றார்களா என்று காத்திருந்து வந்தவர்க்கும் கொடுத்து உண்பதே தானம் ஆகும் என்கிறார்.

பொருளைத் தானம் செய்யும் போது நல்லதை எடுத்து வைத்து விட்டு மற்றவற்றைக் கொடுத்தல் தானமாகாது. எதையும்கொடுத்தலே தானம்.

உதாரணமாக காக்கைகள் பிரதிபலன் கருதாமல் தன் இனத்தை அழைத்துப் பகிர்ந்துண்பதுபோலப் பலன் கருதாமல் செய்வதே தானம் என்பதை உணர்த்துகின்றார் வள்ளுவர்.

**“காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீரார்க்கே உள”**

என்பார். காக்கை தமக்கு உணவு கண்டவுடன் மறையாது தன் இனத்தை அழைத்து அதனோடும் கூட உண்ணும். அதே போல நாமும் நமக்குக் கிடைத்த செல்வத்தை இல்லாதார் எல்லார்க்கும் கொடுத்து அவர் மகிழக் கண்டு இன்புறுவோம்.



# தீபாவளி

மாதந்தோறும் பலவிதமான பண்டிகைகள், விரதங்கள், விழாக்கள் வருகின்றன. நாம் அவற்றைக் கொண்டாடி மகிழ்கின்றோம். ஆனால் அவற்றின் அர்த்தம் என்ன. எப்படி, ஏன் கொண்டாட வேண்டும். அதனால் நாம் பெறும் நன்மை என்ன? என்பது பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. சில பண்டிகைகள் அவற்றின் நோக்கத்திற்கு எதிர்மாறாக கொண்டாடப் படுவதையும் காண்கின்றோம்.

உதாரணத்துக்கு ஐப்பசியில் வரும் தீபாவளிப் பண்டிகையைப் பற்றிச் சிந்திக்கலாம். இதற்குரிய புராணக்கதை, ஒரு காலத்தில் நரகாசுரன் என்பவன் சர்வாதிகாரக் கொடுங்கோல் ஆட்சி நடாத்தினான். கடவுள் என்று ஒருவர் இல்லை. நானே கடவுள் என்னையே எல்லாரும் வணங்கிப் பணிவிடை செய்ய வேண்டும் என்றும் கட்டளை இட்டான்.

அவனுடைய ஆட்சியிலே பொய், களவு, கொலை, புலால், மது, காமம் முதலாகச் சொல்லப்பட்ட, விலக்கப்பட்ட அத்தனை தீச்செயல் களும் மலிந்தன. கொலையோடு, களவு, காமம் குறித்திடு வஞ்ச மெல்லாம் நிலையெனச் செய்தான். வல்லவன் இட்டதே சட்டம் என அவன் ஆட்சி நடைபெற்றது.

இவனது கொடுமைகளுக்கு ஆற்றாத மக்கள் காத்தற் கடவுளாகிய திருமாலிடம் முறையிட்டார்கள். அவர் நரகாசுரனை வதம் செய்து அவனுக்கு நல்லறிவு புகட்டினார். நல்லறிவு பெற்ற அவன் உயிர்விடும் போது திருமாலிடம் ஒரு வரம் கேட்டான்.

நான் செய்த தீச்செயல்கள் எல்லாம் பழிச் செயல்கள் என்பதை உணர்ந்தேன். அதனால் நான் இறக்கும் இன்னாளை ஆண்டுதோறும் மக்கள் நான் செய்த பொய்யும், கொலையும், புலாலும், மதுவும், களவும் முதலான தீச்செயல்களை விலக்கிப் பழைய கெட்டவற்றையெல்லாம் நீக்கிப் புத்தாடை புனைந்து கடவுள் வழிபாடு செய்து தூயவர்களாய் மகிழ்ந்து கொண்டாடவேண்டும் என்று கேட்டான். அப்படியே ஆகட்டும் எனத் திருமால் வரங்கொடுத்து மக்களையும் அதன்படி தூயவர்களாய் இந்நாளைக் கொண்டாடி மகிழச் செய்தார்.

நம்மிற் பலர் இந்த உண்மை தெரியாமல் புத்தாடை உடுப்பதும், நன்றாகக் கூத்தடித்து மது மாமிசம் உண்டு மகிழ்வதும் தான் தீபாவளி என எதிர்மாறாகக் கொண்டாடுகின்றார்கள். மற்றைய நாட்களில் சாதாரண மனிதராக உள்ளவர்கள் அன்று நரகாசுரன் போல் மாறி விடுகின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். தீபாவளி நாளில், கழிக்க வேண்டியவற்றைக் கழித்து, புத்தாடை புனைந்து, ஆலய வழிபாடு செய்து உடலும் உள்ளமும் தூயவர்களாய் உற்றார் உறவினருடன் விருந்தோம்பி வாழ வேண்டும். நாம் எல்லார்க்கும் இனிப்பாக வாழ்த்த வேண்டும்.

தீபாவளி என்ற சொல்லே தீப ஆவளி - தீபங்களின் வரிசை எனப் பொருள்தரும். இருள் அகற்றும் தீபங்களை எல்லா இடத்தும் வரிசையாய் ஏற்றி ஒளியூட்ட வேண்டும். வெளி இருளை மட்டும் ஓட்டினால் போதாது. இதன் உண்மைப் பொருள் மக்கள் மனதில் குடிகொண்ட அறியாமை யால் செய்யப்படும் தீச்செயல்களாகிய இருளை ஓட்டி அறிவொளி ஊட்டி மகிழ வேண்டும். புண்ணியமாம் பாவம்போம் என ஔவையார் சொல்லுவது போலப் பாவச் செயல்களை ஒழித்துப் புண்ணியச் செயல்களைச் செய்ய வேண்டும்.

**உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண்டாகும்**
**பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர் எல்லாம்**
**விழிபெற்றுப் பதவி கொள்வார்.**

என்னும் மகாகவி பாரதியாரின் வாக்கின்படி தீபாவளி எனும் ஒளித் திருநாளில் அறியாமை இருளகற்றி அறிவொளி ஏற்றி வாழ்வோம்.



# கந்தபுராணம்

சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். சிவசம்பந்தம் உடையது. ஆதலால் சைவசமயம் எனப்படுகிறது. சைவத்தின் தத்துவம் சைவசித்தாந்தம். சைவசித்தாந்தத்தை விளக்கும் சாத்திரங்களாக மெய்கண்ட சாத்திரங்கள் உள்ளன. தோத்திரங்களாகப் பன்னிரு திருமுறைகள் உள்ளன. சைவசித்தாந்தத்தை விளக்கும் புராணமாயுள்ளது கந்தபுராணம். கந்தனது புராதனமான பெருமையைக் கூறுவதால் இது கந்தபுராணம் எனப்படும்.

இதில் சொல்லப்படும் கதாபாத்திரங்கள் எல்லாம் சைவசித்தாந்த தத்துவக் குறியீடுகளாக இருப்பதைக் காணலாம்.

கதைச் சுருக்கத்தை நோக்கினால் தேவர்கள் எண்ணில்லாத காலமாக சூரபன்மன் முதலான அசுரர்களால் சிறைபட்டு வருந்துகிறார்கள். துன்பத்துக்காற்றாது சிவபெருமானிடம் முறையிடுகிறார்கள். சிவபெருமான் தனது நெற்றிக் கண்ணொளியிலிருந்து கந்தப் பெருமானைத் தோற்றுவிக்கின்றார். கந்தப்பெருமான் சூரன் முதலான அசுரர்களின் வலிமை எல்லாவற்றையும் அழித்துத் தேவர்களைச் சிறை மீட்டு அருள்புரிகின்றார்.

சைவசித்தாந்தம் கூறும் உண்மை இறைவன் ஒருவர். ஆன்மாக்கள் எண்ணில்லாதன. அவை அநாதிகாலம் தொடக்கம் ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலங்களால் பீடிக்கப்பட்டு அறிவிழந்து பிறந்தும் இறந்தும் துன்புறுகின்றன. அவை எப்போது இறைவனுடைய துணையை நாடுகின்றனவோ அப்போது இறைவன் தனது திருவருளால் மும்மலபந்தத்தை நீக்கி ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பார் எனும் இந்தக் கருத்தே கந்தபுராணக் கருவாக உள்ளது.

சைவசித்தாந்த முப்பொருள் உண்மை கந்தபுராணத்தில் விளக்கப் பட்டுள்ளது. காசிபர் உபதேசத்தில்

**சான்றவர் ஆய்ந்திடத்தக்கவாம் பொருள்**
**மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன**
**ஆன்றதோர் தொல்பதி, ஆருயிர்த்தொகை**
**வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே.**

என்று சொல்லப்படுகிறது.

தக்கவர் ஆராய்ந்தறிய வேண்டிய அநாதியான உண்மைப் பொருள்கள் மூன்று உள்ளன. அவை வேதாகமங்கள் சொல்கின்ற அநாதியான பதி ஒருவர். இயல்பாகவே மலங்களால் பீடிக்கப்பட்டு உழல்கின்ற எண்ணில்லாத ஆன்மாக்கள் இந்த ஆன்மாக்களை இயல்பாகவே பீடித்துள்ள ஆணவம். கன்மம், மாயை எனும் மலங்கள் எனும் பதி, பசு, பாசங்கள் என்றுமுள்ள முப்பொருள்கள் ஆகும்.

சிவபெருமானை வழிபாடு செய்தால் அவருடைய திருவருளே குருவடிவாக வந்து மலபந்தங்களை நீக்கி ஆன்மாக்களுக்கு முத்திப் பேறு நல்கும் என்ற சைவசித்தாந்த உண்மையே கந்தசஷ்டிக் காலமாகிய சூரன்போர் மூலம் உணர்த்தப்படுகின்றது. தேவர்கள் சிவபெருமானை வேண்டுதல் செய்ய அவர் தனது திருவருளே திருமேனியாகக் கொண்டு கந்தப் பெருமானாக வந்து ஆணவமாகிய சூரனையும் மற்றும் மலங்களாகிய அசுரர்களையும் வதம் செய்து தேவர்களை சிறைமீட்டு அருள்புரிந்தார்.

திருவருள் துணை கொண்டு பக்குவ ஆன்மாக்கள் மலபந்தம் நீங்கி இறையின்பம் பெறும் செய்தியை உணர்ந்து கந்தசஷ்டிக் காலத்தில் நோன்பிருந்து இறையருள் பெற முயல்வோம்.

"புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை
விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு
காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை
நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல்
பாத பங்கயங்கள் போற்றி".



# முருகப்பெருமான்

சூரன் முதலான அசுரர்களின் ஆட்சியில் தேவர்கள் சொல்லொணாத் துயர் அடைந்தார்கள். சிவபெருமானிடம் சரணடைந் தார்கள். அவர் முருகப்பெருமானை உதிக்கச் செய்தார். முருகன் சூராதி அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காத்தருள் செய்தார்.

கடவுள் ஒருவன்தானே. அவரே சிவன். அப்படியானால் முருகன் என இன்னொரு கடவுள் எப்படி இருக்க முடியும் என்னும் சந்தேகம் பலருக்கு உண்டு. கந்தபுராணம் இந்தச் சந்தேகத்துக்கு விளக்கம் தருகிறது.

**அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டே**
**ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய.**

என்பது முருகப் பெருமான் தோன்றியமை குறித்த கந்தபுராணப் பாடல்.

அருவமாயும், உருவமாயும், அநாதியாயும், பலவாயும் ஒன்றாயும் உள்ள பரம்பொருளாகிய சோதிப்பிழம்பு ஒரு வடிவம் தாங்கிக் கருணை புரியும் ஆறுமுகங்களும், பன்னிரண்டு கரங்களும் கொண்டு திருமுருகனாக வந்து உதித்தது என்பது இப்பாடலின் பொருள். எனவே ஞானஜோதியாய் விளங்கும் பரம்பொருளே முருகனாக வந்தார் என்பது தெரிகிறது. ஆதலால் சிவன் வேறு முருகன் வேறு அல்ல. ஒருவரே என்பது புலனாகிறது.

அசுரர்களை அடக்கித் தேவர்களை வாழ்விப்பதற்காகச் சிவப்பரம் பொருளே சங்கற்பமாத்திரையில் முருகனாக அருள்திருமேனி கொண்டு வந்தார். சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து புறப்பட்ட ஆறு தீப்பொறிகள் சரவணப் பொய்கையை அடைந்து ஆறு குழந்தைகளாகிட உமாதேவியார் எடுத்தணைக்க ஆறும் ஒருவராகி ஆறுமுகனானார்.

சிவபெருமானுக்கு தற்புருஷம், வாமம், அகோரம், சத்தியோசாதம் என நான்கு திக்குகளை நோக்கிய முகங்கள் நான்கும் மேல்நோக்கிய ஈசானமுகமும், கீழ்நோக்கிய அதோமுகமும் என ஆறுமுகங்கள் உள. இந்த ஆறுமுகங்களிலுமுள்ள நெற்றிக் கண்களின் சோதியிலிருந்தே ஆறுமுகன் தோன்றினார். சிவப்பரம்பொருளே முருகன் என்பதற்குக் கந்தபுராணத்தில் கச்சியப்பர் சிவன் வாக்காகவே சொல்கின்றார்.

**ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்**
**பேதகமன்றால் நம்போல் பிரிப்பிலன். யாண்டும் நின்றான்**
**ஏதமில் குழவிபோல்வான். யாவையும் உணரும் நீரான்**
**போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்.**

என்பது அப்பாடல், நமது சக்திதான் முருகன் என்றும், தாமும் அவனும் வேறல்ல என்றும், தன்னைப்போலவே எங்கும் நிறைந்துள்ளான் என்றும், ஞானம் நல்கும் குழந்தையாயுள்ளான் என்றும், என்போல் எல்லாம் அறிந்தவன் என்றும், வீட்டின்பத்தையும் அருளவல்லான் என்றும் குறிப்பிடுவது கொண்டு சிவப்பரம்பொருளே முருகன் என்பதையுணரலாம்.

ஆதலால் இக்கலியுகத்தில் முருகப்பெருமானைச் சிவப் பரம்பொருள் என்றே நினைந்து வழிபட்டுப் பேரின்பப் பெருவாழ்வு பெறுவோம்.

**விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா**
**மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் முன்புசெய்த**
**பழிக்குத்துணையவன் பன்னிருதோளும் பயந்ததனி**
**வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.**

# வள்ளி திருமணம்

சிவமுனி என்பவர் தவஞ்செய்யும் போது ஒரு மான் வந்தது. முனிவர் அதைப் பார்த்தார். அது கருக்கொண்டு வள்ளிக்கிழங்ககழ்ந்த குழியில் ஒரு பெண்குழந்தையை ஈன்றுவிட்டுச் சென்றது.

அதை வேடர் தலைவனாகிய நம்பி எடுத்து வளர்த்து வந்தான். வள்ளிக்குழியிலிருந்து எடுத்ததால் வள்ளியெனப் பெயர் இட்டான். வள்ளி வளர்ந்து 12 வயதானாள். வேடர்குல வழக்கப்படி அவளைத் தினைப்புனம் காக்க வைத்தனர்.

முற்பிறப்பில் முருகனை அடையத் தவம் செய்த சுந்தரவல்லி என்பவளே வள்ளியாகப் பிறந்தாள். நாரதர் இதையறிந்து முருகப் பெருமானிடம் போய் வள்ளி நாயகியின் செவ்வியை விண்ணப்பித்தார். முருகன் மானுட வடிவங் கொண்டு வந்து வள்ளியைக் கண்டு உரையாடினார். அப்போது வேட்டுவர் தலைவன் வர முருகன் வேங்கை மரமாகி நின்றான். நம்பி போக மீண்டும் மானுட வடிவங்கொண்டு வள்ளி நாயகியாருடன் உரையாடினார். மீண்டும் நம்பிராசன் வர முருகன் சந்நியாசியாகி வேடர் தலைவனை ஆசீர்வதித்தார். அவர்கள் போனபின் வள்ளிநாயகி அவருக்கு தேனும் தினைமாவும் கொடுக்க உண்டுவிட்டு வள்ளி நாயகியாரைத் தழுவ முயன்றார்.

வள்ளி மறுத்து விலகி ஓடினாள். முருகன் விநாயகரை நினைக்க யானை வடிவங்கொண்டு அவர் வந்தார். வள்ளி யானைக்குப் பயந்து முருகக் கடவுளின் பின்னே ஒதுங்கினார். முருகன் தன் உண்மை வடிவத்தைக் காட்டி அவளை அணைத்தார்.

தினைப்புனம் காவல் நீங்கியது. வள்ளி நம்பிராசன் வீட்டில் இருந்தாள். முருகன் இரவில் வள்ளிநாயகி இருந்த குடிசைக்குப் போய் தோழி துணையாக வள்ளியைக் கூட்டிப்போனார். இதையறிந்த வேடர்கள் கோபங் கொண்டு முருகக் கடவுளை எதிர்த்தார்கள். முருகன் கட்டளைப்படி சேவல் கூவ எல்லாரும் வீழ்ந்திறந்தார்கள். பின்பு இறந்தவர்களை எழுப்பி வள்ளிநாயகியாருக்குத் தெய்வத் திருக்கோலம் அருளிச் செய்து மணஞ்செய்தார்.

இது புராணக்கதை. இதற்குள் ஒரு பக்குவ ஆன்மாவைத் திருவருள் தேடிவந்து ஆட்கொண்டு பேரின்பம் நல்கும் தத்துவம் சொல்லப்பட்டிருக்கிறது. இது வெறும் உலகியல் கதையல்ல.

வள்ளி நாயகி ஒரு பக்குவ ஆன்மா, முப்பிறப்பில் சுந்தரவல்லி எனும் பெயருடன் முருகனை அடையத் தவம் இருந்தவள். அதன் பேறாக சிவமுனிவர்க்கு மகளாகப் பிறந்தார். வேடுவ சேரியில் வளர்ந்தார். வேடுவ சேரி எனப்படுவது இந்த உடம்பு. ஐம்புலன்களாகிய வேடுவர்கள் தாம் நினைத்ததையே செய்யப்புகும் உடம்பினுள் ஒரு பக்குவ ஆன்மா நல்வினைகளையே செய்வது போல வள்ளி தினைப்புனம் காத்தாள். ஆன்மாவின் பக்குவநிலை கண்டு திருவருளே குருவடிவாக வந்து ஆட்கொள்வது போலத் திருவருள் வேடனாயும், விருத்தனாயும் வந்து ஆட்கொள்ள வள்ளியாகிய அந்த ஆன்மாவின் மலம் பாகப்படாததால், யானையை அழைத்தார். அது பிரணவ மந்திரம், பிரணவ மந்திரத்தையுணர்ந்ததும் ஆன்மா மலபந்தம் நீங்கி இறைவனைக்காணும்.

இறைதரிசனம் உண்டாகத் தன் செயல் என்பது முற்றும் நீங்கி அயரா அன்பில் அரன் கழல் சேரும். பக்குவ ஆன்மா திருவருள் வயப்பட்டு இறைவனை அடைதலையே வள்ளி திருமணமாகக் காட்டப்பட்டுள்ளது. இதையுணர்ந்து நாமும் பக்குவ ஆன்மாக்களாகிப் பரமனடி சேர முயல்வோம்.

**ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு**
**அன்னியம் இன்மையின் அவன்கழல் செலுமே.**

என்னும் சிவஞான போதச் செய்தியே வள்ளிதிருமணம் ஆகும்.



# திருமந்திரம் காட்டும் சைவம்

சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதையும், சிவசம்பந்தமுடையது சைவம் என்பதையும்,

**சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்**
**சைவம் தனைஅறிந்தே சிவம் சாருதல்**
**சைவம் சிவன்தன்னைச் சாராமல் நீங்குதல்**
**சைவம் சிவானந்தம் சாயுச்சியமே.**

எனும் மந்திரம் சொல்கிறது.

சைவசமய நெறியாவது சிவனுடன் சேர்ந்திருத்தல், சிவம் என்பது சைவ நெறிமுறை அறிந்து சிவனோடு கூடியிருத்தல். சைவம் என்பது சிவப்பரம்பொருளோடு தாம் ஒன்றிக் கலந்து இருக்கிறோம் என்ற உணர்வுமற்று, அந்த நினைப்பையும் விட்டொழிந்து இருத்தல். இப்படிச் சிவத்தோடு சிவமாகக் கலந்து சிவசிந்தனையில் சிவானந்தம் பெற்றுப் பரம்பொருளோடு இரண்டறக் கலந்து நிற்றலே சாயுச்சிய நிலை அடைதலாம்.

அதுமட்டுமல்லாமல் பாச ஞானத்தில் அழுந்தும் ஆன்மா எப்படிப் பசுஞானம் பெற்றுப் பின் பதிஞானம் சித்திக்கச் சாயுச்சிய முத்தி பெறுகிறது எனும் சைவசித்தாந்தச் செம்பொருளையும், இம்மந்திரம் தெட்டத் தெளிவாகச் சொல்வதையும் காணமுடியும்.

முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதையும் எவ்விடத்தில் அவனைப் பணிந்தால் பணிபவர் உள்ளத்தைக் கோயிலாகக் கொள்வான் என்பதையும் பின்வரும் மந்திரம் உணர்த்துகிறது.

**நாடும் நகரமும் நற்திருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின், பாடிப்பணிமின், பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.**

நாடுநகரங்கள் எல்லாம் நல்திருக் கோயில்கள் இருக்கின்ற இடங்கள் என்று தேடிப்போய் அங்கெல்லாம் இருக்கின்ற சிவப்பரம் பொருளைக் கண்டு சிவபெருமானே என்று பணிந்து போற்றிப் பாடுங்கள், பாடிப்பரவி வணங்கி நில்லுங்கள். இப்படி வணங்கிப் பணிந்தால் பணிபவர் உள்ளமே கோயிலாகக் கொண்டு எழுந்தருளுவான் பரம்பொருள் என இம்மந்திரம் கூறுகின்றது.

அதுமட்டுமல்லச் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையையும் திருமந்திரம், சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுதற்கு முன்னே கூறிவிட்டது. முப்பொருள்கள் பதி, பசு, பாசம் எனும் மூன்று. அவை மூன்றும் அநாதியான உள்பொருள் என்பதை

**பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைப் போல் பசு பாசம் அநாதி**
**பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்**
**பதியணுகில் பசுபாசம் நிலாவே.**

என்கிறது மந்திரம்.

பதி பசு பாசம் என்று சொல்லப்படும் மூன்றில் இறைவனைப் போலவே உயிர்களும், அவற்றைப் பற்றியிருக்கும் பந்த பாசங்களும் அநாதியானவை. தலைவனாகிய இறைவனை ஆன்மாக்கள் அணுகு வதில்லை. காரணம் அவற்றைப் பற்றியுள்ள பாசங்களாம். ஆனால் இந்த ஆன்மாக்கள் தலைவனாகிய பதியை நெருங்கினால் அவற்றைப் பீடித்துள்ள பாசங்கள் நில்லாது விலகிப்போம் எனும் சைவசித்தாந்த உண்மையை இம்மந்திரம் சொல்கிறது.

சித்தாந்த நெறி நின்று இறைவனைத் தொழுதால் சீவன் முத்தி சித்திக்கும். வேதாந்தத் தெளிவே சைவசித்தாந்தம். இது காட்டும் பொருள் சிவமே எனப் பின்வரும் மந்திரம் உணர்த்துகிறது.

**சித்தாந்தத்தே சீவன்முத்தி சித்தித்தலால்**
**சித்தாந்தத்தே நிற்போர் முத்திசித்தித்தவர்**
**சித்தாந்தத்தே வேதாந்தம் செம்பொருள் ஆதலால்**
**சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே**

சித்தாந்த வழிநிற்கும் சீடர்களுக்கு திருவடிப் பேரின்பமாகிய முத்தி காட்டுதலால் சித்தாந்த நெறி நிற்போர் முத்தி இன்பம் பெற்றவர் ஆவார். சித்தாந்தம் வேதாந்தம் என்ற இந்த இரண்டும் உயர்ந்த பரம்பொருளாகிய சிவத்தைப் பற்றியதாதலால் சித்தாந்தம் வேதாந்தம் எனும் இரண்டுமே சுட்டுவது சிவனின் காட்சியையே, எனும் இம்மந்திரக் கருத்து மிக உயர்வானதாகும்.

இக்கலியுகத்தில் சைவம், சிவநெறி என்றும், சைவ சித்தாந்தம் என்றும், சிவபெருமான் என்றும் சொல்லுவதற்குக் கூச்சப்படுபவர் களையும், தமது சமயத்தின் பெயர் எது எனத் தெரியாது தடுமாறுபவர் களையும் பரவலாகக் காண்கின்றோம். இவர்கள் திருமூலரின் திருமந்திரத்தைப் படிப்பார்களேயானால் தம் அறியாமையைப் புரிந்து தெளிவு பெறுவர்.

சைவத்தை அறிய மிகத் தொன்மையான ஆழமான அகலமான நுண்ணிய கருத்துக் களஞ்சியமாயுள்ள திருமந்திரத்தைப் படித்து வாழ்வின் பயனைப் பெறுவோம்.



# சுந்தரரின் சிவலோகப் பேறு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமான் இட்ட கட்டளைக்கு இணங்கிப் பாடியவர். பிராமணராக வந்து நீ எனக்கு அடிமை என்று ஓலை காட்டித் திருமணத்தை தடுத்து ஆட்கொண்ட சிவபெருமான் திருவெண்ணெய் நல்லூரின் சிவாலயத்தில் மறைந்து விடுகின்றார்.

அவரைக் காணாத சுந்தரர் “என்னை ஆட்கொண்ட பெருமானே என்னை விட்டு மறைந்தீர்களே நான் என்ன செய்வேன்” எனத் தவித்த போது “நமக்கு அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு” என்று ஆணையிட்டார். சுந்தரர் பித்தா என எடுத்துச் சுந்தரச் செந்தமிழில் தேவாரம் பாடினார். கோயில் தோறும் சென்று பாடியவர் நிறைவில் திருவஞ்சைக் களத்தில் வழிபடும்போது அங்கு சிவலோகத்தில் இருந்து வந்த வெள்ளை யானையில் ஒளியுடல் வடிவாக ஆடிச்சோதி நாளில் சிவலோகம் நோக்கிச் சென்றார்.

இந்தக் காட்சி தனது ஆச்சிரமத்தில் சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்த உபமன்யு முனிவருக்குத் தெரிந்தது. சிவனை அன்றி வேறு எவரையும் வணங்காத இயல்புடையவர் திடீரென்று எழுந்து வானைப் பார்த்து வணங்கினார். இதனைச் சீடர்கள் ஆச்சிரியத்துடன் பார்த்தார்கள். சிவனை அன்றி வேறு எவரையும் வணங்காத எங்கள் குரு இன்று எதையோ வணங்குகின்றாரே என்று திகைத்தனர். அவரிடம் கேட்டும் விட்டனர். இதனைத் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள்

**சம்புவின் அடித்தாமரைப் போதலால்**
**எம்பிரான் இறைஞ்சாய் இது என்னனெனத்**
**தம்பிரானைத் தன் உள்ளம் தழீஇயவன்**
**நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான்**

எனப் பாடுகின்றார்.

குருவே சம்புவாகிய சிவனுடைய திருவடிகளையேயன்றி வேறு எதனையும் வணங்காத நீங்கள் எதையோ வணங்குகின்றீர்களே என்று கேட்க, முனிவர், சீடர்களே தம்பிரானாகிய சிவபெருமானைத் தமது

உள்ளத்தில் வைத்திருக்கும் நம்பியாரூரன் சிவலோகம் செல்கின்றார். அவர் சிவன் அடியார் ஆதலால் சிவனாகவே வணங்கத்தக்கவர் ஆவார் என்கின்றார். எல்லோரும் ஒளி வடிவாய்ச் செல்கின்ற சுந்தரரை இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் நிற்கின்றனர். இது பூலோகத்தில் நிகழும் போது கைலாயத்தில் சுந்தரரே தனது (நொடித்தான் மலை) கயிலை மலைப் பதிகத்தில் பாடுகின்றார்.

**இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்**
**வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து**
**மந்திரமாமுனிவர் இவன் ஆர் என எம் பெருமான்**
**நந்தமர் ஊரன் என்றான் நொடித்தான் மலை உத்தமனே.**

கயிலாயத்திலே இந்திரன் திருமால் பிரமன் முதலான தேவர்களும் முனிவர்களும் கூடி நின்று வரவேற்கிறார்கள். அப்போது அங்கு நின்ற முனிவர்கள் இவர் யார் என்ன, இவன் நம்மவன் என்று சிவன் திருவாய் மலர்ந்தார் என்கின்றார்.

சுந்தரத் செந்தமிழால் அர்ச்சித்த சுந்தரர் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொன்னதால் சிவபுரத்தில் உள்ள சிவபெருமான் திருவடி சேர்ந்தார். அவ்வேளை கயிலையில் இந்திரன் பிரமா முதலான தேவர்களும், பூவுலகில் உபமன்யு முதலான முனிவர்களும் ஆகிய பல்லோரும் பணிந்து வணங்கக் கயிலை சேர்ந்த செய்தி எத்தனை அற்புதமானது. சிவனடி ஞானம் முத்தி சித்திக்கும் என்பதற்கு ஐயமும் உண்டோ.

**திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்**
**திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்**
**திருவடி ஞானம் சிவம் ஆக்குவிக்கும்**
**திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே.**

என்பது திருமந்திரம்.

# ஆன்ம யாத்திரை

மனித வாழ்வைப் பலரும் பலவாறு விமர்சிப்பர். சிலர் வாழ்க்கை ஒரு போராட்டம் என்பர். சிலர் வாழ்க்கை ஒரு சவால் என்பர். சிலர் வாழ்க்கை ஒரு சமுத்திரம் என்பர். சிலர் வாழ்க்கை ஒரு துன்பச் சுமை என்பர். சிலர் வாழ்க்கை ஒரு விளையாட்டு என்பர். இப்படியே ஒவ்வொருவரும் தத்தம் அனுபவத்தை முன்வைத்து விமர்சிப்பர்.

மனித வாழ்க்கை என்பது பலர் நினைப்பது போலப் பிறப்புக்கும் இறப்புக்கும் உட்பட்டது மட்டுமல்ல. இப்படி எத்தனையோ எண்ணில்லாத காலம் இறந்தும் பிறந்தும் தொடர்வது தான் வாழ்க்கை. மாணிக்கவாசக சுவாமிகள் "புல்லாகிப் பூடாய்" எனத் தொடங்கி "இத்தாவர சங்கமத்துள்" "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" எனக் கூறுவது கொண்டு பிறப்புக்கள் எண்ணில்லாதன என்பதை அறிய முடியும். இப்படி எண்ணில்லாப் பிறப்புகள் பிறந்த பின் இறுதியில் என்ன நடக்கும் என்பதையும் "மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" எனச் சொல்கின்றார்.

எனவே பிறவியின் பயன் இறைவனை அடைதல் என்னும் உண்மை பெறப்படுகின்றது. ஆதலால் வாழ்க்கையை ஆன்ம யாத்திரை என்பதே பொருத்தம்.

எமது வாழ்நாளில் இறைவனுடைய அருளை வேண்டிப் பல புண்ணிய தலங்களுக்கும் புண்ணிய தீர்த்தங்களுக்கும் யாத்திரை செய்கின்றோம். களைத்த போது ஒரு இடத்தில் தங்கி இருந்து களைப்பு மாறிய பின் யாத்திரையைத் தொடர்ந்து நிறைவு செய்வோம்.

அதேபோல ஆன்மா ஒரு உடலை எடுத்து வாழ்ந்து அந்த உடல் பழுதான போது விட்டு விலகி இருந்து பின் வேறொரு உடலை எடுத்து வாழ்ந்து இப்படியே எண்ணில்லாப் பிறவிகளை எடுத்து வாழ்கிறது. ஆன்ம யாத்திரையில் ஒவ்வொரு பிறப்பும் அது தங்கிச் செல்லும் இடமாகும்.

தலயாத்திரையில் ஒவ்வொரு தலமாகத் தரிசித்து மேலே செல்லச் செல்ல மனதில் மகிழ்ச்சியும், தெய்வ நம்பிக்கையும் வளர்வது போல

ஆன்ம யாத்திரையிலும் ஒவ்வோர் பிறப்பும் உயர்வுடையதாக அமைதல் வேண்டும்.

ஒருவர் இறந்து விட்டார் என்றால் இறந்தது அவரது உடல் தான். உடலுள் வாழ்ந்த உயிர் இறப்பதில்லை. உயிர் அநாதியானது. என்றும் உள்ள பொருள். உயிருக்கு இந்த உடல் எப்படிக் கிடைத்தது என்றால் அது போன பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பவே கிடைத்தது.

இறக்கும் போது, உயிர் செய்த நல்வினை தீவினைகள் மட்டும் தான் உயிருடன் போகும். ஏனைய சொத்துக்கள் எல்லாம் உடலுடன் நின்றுவிடும்.

**அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே. விழிஅம்பொழுக**
**மெத்திய மாதரும் வீதிமட்டே. விம்மி விம்மி இரு**
**கைத்தலை மேல் வைத்தழும் மைந்தரும் சுடுகாடுமட்டே**
**பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே.**

என்பது பட்டினத்தால் பாடல்

இறந்த போது அவர் தேடிய செல்வமும் வாழ்வும் வீட்டுடன் நின்று விடும். கண்ணீர் சொரிந்து கதறியழும் பெண்கள் வீதியுடன் நின்று விடுவர். விம்மி விம்மி அழும் மைந்தரும் உறவுகளும் சுடலையுடன் திரும்பி விடுவர். அவருடைய உயிருடன் செல்பவை அவர் வாழும் போது செய்த நல்வினையாகிய புண்ணியமும் தீவினையாலாகிய பாவமும் தான்.

இறப்பு எனப்படுவது இந்த உடலை விட்டு உயிர் பிரிதல் ஆகும். நாம் அணிகின்ற சட்டை பழுதாகி விட்டால் அதை எறிந்து விட்டுப் புதிய சட்டையை வாங்கிப் போடுகிறோம். அதேபோல உயிர் இருந்து வாழ்ந்த உடல் பழுதாகிவிட்டால் உயிர் அவ்வுடலை விட்டு விலகிப் புதிய உடலைப் பெறுகிறது. இதனைத் தான் இறப்பும் பிறப்பும் என்கின்றோம். அவரவர் வசதிக்கேற்ப சட்டையை வாங்கிப் போடுவதைப் போல உயிர் செய்த பாவ புண்ணியத்துக்கேற்ற உடலைப், (பிறப்பைப்) பெறுகின்றது.

ஆதலால் இப்பிறப்பில் சிறந்த புண்ணியங்களைச் செய்து நற்கதி பெற முயற்சிப்போம்.

*** 

# மங்கல வாழ்த்தின் மாண்பு

ஒரு நூலைச் செய்யத் தொடங்கும் போது அதன் ஆசிரியர் அந்த நூல் தடையின்றி இனிதே நிறைவேற வேண்டுமெனத் தான் வழிபடு கடவுளையோ அல்லது அந்த நூலுக்கு ஏற்புடைய கடவுளையோ வாழ்த்திப் பாடி வணங்கித் தொடங்குதல் மரபு. அதுவும் ஞானநூல் செய்வோர்க்கு இது இன்றியமையாததாகும். வாழ்த்தின் உள்ளுறையாக வாழ்த்து வணக்கம் வருபொருள் உரைத்தல் என்பன அடங்கி இருக்கும்.

இந்த வாழ்த்து, சூத்திரம் போலச் சிறியதாயும் பொருள் விரிக்க விரிக்கப் பெருகுவதாயும் இருக்கும். சூத்திரம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கே ஒரு சூத்திரம் உண்டு.

**சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச்**
**செவ்வண் ஆடியிற் செறித்தினி துணர்த்தும்**
**திட்ப நுட்பம் சிறந்தன சூத்திர நிலை.**

என்பது அந்தச் சூத்திரம்.

மிகச் சுருங்கச் சொல்லும் சில எழுத்துக்களில், பல்வகைப்பட்ட பெரிய பொருளை, சிறிய கண்ணாடிக்குள்ளே பென்னம் பெரிய பொருட்கள் தெரிவது போலச் செறிவாக அடக்கித் திட்பநுட்பமாகச் சொல்வதே சூத்திரம் ஆகும், என்பது இதன் விளக்கம்.

இதற்கு அமைவாக உள்ள ஒரு மங்கல வாழ்த்தினைக் காண்போம். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு. அவற்றுக்கு மணிமுடியாகத் திகழ்வது சிவஞானபோதம். சிவஞானபோதத்தைப் பாடியவர் இரண்டு வயதில் சிவஞானம் பெற்ற மெய்கண்டார். அவர் சிவஞானபோதத்தைப் பன்னிரண்டு சூத்திரங்களில் பாடி முடித்துள்ளார். இப்பன்னிரண்டு சூத்திரங்களுள் அடங்கியுள்ள பொருளையே ஏனைய பதின்மூன்று சாத்திரங்களும் விரித்துச் சொல்கின்றன. அது மட்டுமல்ல சிவஞான மாபாடியம் எனும் வியாக்கியான விரிவுரை நூலும் எழுந்துள்ளது.

பன்னிரண்டு சூத்திர வடிவிலமைந்த சிவஞானபோதத்திற்குப் பன்னிரண்டு சொற்களில் மெய்கண்டார் மங்கல வாழ்த்துப் பாடியுள்ளார். அதன் மகிமையைக் கண்டு இன்புறலாம்.

**கல்லால் நிழல் மலை**
**வில்லார் அருளிய**
**பொல்லார் இணைமலர்**
**நல்லார் புனைவரே.**

என்பதே அந்த மங்கல வாழ்த்து. இதன் வெளிப்படையான பொருள் "கல்லால விருட்சத்தின் நிழலிலே இருந்து வேதப் பொருளை மயக்கமின்றி உபதேசித்த சிவபெருமான் தந்த பொல்லாப்பிள்ளை யாரின் இரண்டாகிய திருவடி மலர்களை வணங்கும் பேறு பெற்றவர் நல்லாராவார்" என்பதேயாகும்.

சூத்திரம் போன்ற இந்த மங்கல வாழ்த்து, நூலுக்கு ஏற்புடைக் கடவுளை வாழ்த்தும் வகையில் அமைந்துள்ளது. சிவஞானபோதம் ஞானநூல். ஆதலால் இந்த நூல் முட்டின்றி முடிவதற்கு ஞானமுதல் வனாகிய விநாயகப் பெருமானை வாழ்த்தி வணங்குவதாகக் கொள்ள லாம். அதேவேளை மூலமுதற் கடவுளாகிய சிவனையும் நினைவது சிறப்புடையதாகின்றது.

இந்த மங்கல வாழ்த்தில் உள்ளுறையாகச் சொல்லப்பட்டிருக்கும் பொருளை இனி விரித்துப் பார்ப்போம்.

- ❖ சிவஞானபோதம் 12 சூத்திரங்களால் ஆனது. அது
- ❖ பொது அதிகாரம் சிறப்பு அதிகாரம் என இரண்டு அதிகாரப் பிரிவுகளை உடையது.
- ❖ பிராமண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என நான்கு இயல்களை உடையது.
- ❖ இந்த நாலு இயல்களும் முறையே

| | | |
|---|---|---|
| பிராமண இயல் | - | இடத்தின் தன்மையையும் |
| இலக்கண இயல் | - | செயல் கூறுதலையும் |
| சாதன இயல் | - | திருவடியையும் |
| பயனியல் | - | பயனையும் உணர்த்துகின்றன. |

❖ ஒவ்வொரு இயலிலும் மூன்று மூன்று சூத்திரங்கள் உள்ளன. இவ்வமைப்பு முறையே இந்த மங்கல வாழ்த்து உள்ளுறையாக உணர்த்தும் நுட்பத்தை இனிக் காண்போம்.

❖ இம்மங்கல வாழ்த்தில் கல், ஆல், நிழல், மலைவு, இல்லார் அருளிய பொல்லார், இணை, மலர், நல்லார், புனைவர், ஏ எனும் பன்னிரண்டு சொற்கள் வந்துள்ளன. இவை சிவஞானபோத நூல் பன்னிரண்டு சூத்திரங்களால் ஆனது என்பதை உணர்த்துகின்றன எனலாம்.

❖ இதில் கல்லால் மலை வில்லார் அருளிய எனும் ஒரு தொடரும் பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே எனும் இன்னொரு தொடருமாக இரு தொடர்கள் வந்துள்ளன. இவை இந்த நூல் பொது அதிகாரம் உண்மை அதிகாரம் எனும் இரு பிரிவுகளை உடையது என்பதை உணர்த்துகின்றன எனலாம்.

❖ இனிச் சிவஞானபோதம் பிராமண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என நான்கு பிரிவுகளை உடையது. இந்த உட்பொருளுக்கு அமைவாக மங்கல வாழ்த்திலும் முதல் வரியில் கல் ஆல் மலை எனும் மூன்று சொற்களும் இடத்தின் தன்மையைக் குறித்துப் பிராமண இயலை உணர்த்துகின்றன. இதில் மூன்று சொற்கள் இருப்பது பிராமண இயலில் மூன்று சூத்திரங்கள் இருப்பதை உணர்த்துகின்றன.

இரண்டாவது அடியில் மலைவு இல்லார் அருளிய என்ற மூன்று சொற்களும் செயல் கூறுதலில் இலக்கண இயலைக் குறிக்கும். இதில் வந்துள்ள மூன்று சொற்கள் இலக்கண இயலில் மூன்று சூத்திரங்கள் இருப்பதை உணர்த்தும். மூன்றாவது அடியில் உள்ள பொல்லார், இணை, மலர் என்னும் மூன்று சொற்களும் திருவடியை உணர்த்துதலால் அது சாதன இயலைக் குறிக்கும். இதில் வந்துள்ள மூன்று சொற்களும் மூன்று சூத்திரங்களை குறிக்கும்.

நாலாவது அடியில் நல்லார், புனைவர், ஏ என வந்துள்ள மூன்று சொற்களும் பயன் கூறுதலின் பயன் இயலைக் குறிக்கும். இங்குள்ள மூன்று சொற்களும் மூன்று சூத்திரங்களை உணர்த்துகின்றன எனலாம். ஆகவே சிவஞானபோத மங்கல வாழ்த்தின் மகிமையை உணர்ந்து படித்து மகிழ்வோம்.

* * *

# இறையனாரின் திருமுகப்பாசுரம்

எங்கள் தமிழ்மொழி உலகச் செம்மொழிகளில் ஒன்றாகப் போற்றப்படும் சிறப்பிற்குரியது. இதற்குக் காரணம் தமிழில் உள்ள இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் வளங்களேயாகும். சங்ககாலம் முதல் இக்காலம் வரை காலத்தால் அழியாத இலக்கண இலக்கிய நூல்கள் எண்ணில்லாதன எழுந்துள்ளன.

சங்ககால இலக்கண இலக்கிய நூல்கள் பிற்காலத்து ஆக்கங் களுக்கு ஊற்றுக் கண்ணாக இருக்கின்றன. ஒரு விளை நிலம் எப்படி எக்காலத்தும் விளைவு தந்து கொண்டிருக்கின்றதோ அப்படியே சங்க காலப் பாடல்களும் பிற்காலக் கலை வளங்களுக்கு விளை நிலமாக இருக்கின்றன எனலாம்.

புலமையுடையோர் புலவர்கள் எனப்படுவார்கள். அவர்கள் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்களாக இருந்திருக்கிறார்கள். நாடாளும் மன்னர்களும் பலர் புலவர்களாக இருந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே சங்கப் புலவராக இறையனார் எனும் பெயருடன் இலக்கியம் படைத்த வரலாறும் உண்டு.

இங்கு நாம் இறைவன் படைத்த திருமுகப்பாசுரம் என்னும் பாடல் ஒன்றை நயக்கலாம். திருமுகம் என்றால் கடிதம், அல்லது தபால், அஞ்சல், முடங்கல், ஓலை எனும் பொருள் தரும். ஒரு தேவை கருதி இன்னொருவருக்கு எழுதப்படுவது திருமுகம் என இலக்கியங்களில் சொல்லப்படுகின்றது..

இங்கு மதுரைச் சோமசுந்தரப் பெருமான் சேரநாட்டு மன்னன் சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுகம் ஒன்று உளது. அது பக்தனாகி தினமும் யாழ் வாசித்துப் பண்ணிசை பாடித் தன்னைத் தொழுகின்ற பாணபத்திரன் என்னும் இசைவல்லோனுக்காக எழுதப் பட்டது. அவனது வறுமையைப் போக்குவதற்குப் பொருள் கொடுத்தனுப்பு மாறு கேட்டு எழுதிய திருமுகப்பாசுரம் இது.

இந்தத் திருமுகத்தில், ஒரு திருமுகம் எழுதும் போது எழுதுபவர் ஆகிய தான் யார், தன் தகைமை என்ன, யாருக்கு எழுதுகின்றேன்.

அவருடைய தகைமை என்ன எதற்காக யாருக்காக எழுதுகின்றேன். எழுதும் நோக்கின் முக்கியத்துவம் என்ன என்பது செம்மொழியில் இலக்கியச் சுவை ததும்ப அதைப் படிக்கத் தொடங்கியவர் தொடர்ந்து சுவைத்துப் படித்துத் தன் விருப்பத்தை நிறைவு செய்யக்கூடிய மனமகிழ்வைத் தரக் கூடிய விதத்தில் எழுதப்பட்டுள்ள சிறப்பை இங்கு காணலாம்.

முதலிலே எழுதுபவர் தன்னை அறிமுகம் செய்கின்றார்.

**"மதிமலி புரிசை மாடக் கூடல்**
**பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு**
**அன்னம் பயில் பொழில் ஆலவாயின்**
**மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்"**

ஆகாய வீதியில் வலம் வரும் சந்திரனை முட்டக் கூடிய உயர்ந்த மாடமாளிகைகள் விளங்கும் கூடல் எனப்படும். மதுரை மாநகரின் மாடங்களில் பால் போன்ற வெள்ளைச் சிறகுகளையுடைய அழகிய அன்னப் பட்சிகள் இதுவல்லவோ நடையழகு என்று வியக்கும் வண்ணம் அன்னநடை பயில்கின்ற திருவாலவாய் என்று சொல்லப்படும் சிவத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமான் ஆகிய நான் எழுதும் செய்தி என்று தொடங்கித் தொடர்ந்து யாருக்கு எழுதுகின்றேன் என்பதை

**பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு**
**உரிமையின் உரிமையின் உதவிஒளிதிகழ்**
**குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்**
**செருமா உகைக்கும் சேரலன் காண்க!**

என விழிக்கின்றார். மழைக்கால முகிலானது மண் செழிக்கக் காலமறிந்து மழை மொழிவது போல புலவர்களுக்கு அவர் வறுமை நீங்கும் வண்ணம் உரிமையுடன் வேண்டிய செல்வத்தை வழங்கி அவர்கள் முகம் மலர்வதைக் கண்டு ஈந்து உவக்கும் இன்பத்துடன் தானும் முகம் மலர்ந்து நீதி தவறா வெண்கொற்றக்குடையின் கீழ் வீற்றிருந்து பகையை விரட்டும் வீரம் மிக்க சேரமன்னனே காண்பாயாக! என்று தான் பின்னால் கேட்கப்போகும் உதவியை வழங்குவதற்கு

முற்றிலும் தகுதியுடையவன் நீ என்பதைச் சொல்லாமற் சொல்லி அதன் மேலே, தான் எழுதும் நோக்கத்தை எழுதுகின்றார்.

**பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்**
**தன்போல் என்பால் அன்பன் தன்பால்**
**காண்பது கருதிப் போந்தனன்**
**மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.**

யாழ் இசைப்பதற்குரிய அத்தனை பண்பும் நிறைந்த உத்தமக் கலைஞனாகிய பாணபத்திரன் என்பவன் இந்தத் திருமுகத்தை உன் சமூகத்திற்கு கொண்டு வருகின்றான். இவன் நீ என்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கின்றாயோ அவனும் அந்தளவு அன்பை என்மீது வைத்துள்ளான். உன்போல் என்பால் அன்பன். இவன் உன்னைக் காண்பதற்காக வருகின்றான். இவனுக்குத் தேவையான பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பி வைப்பாய். மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பாய் எனத் திருமுகத்தை முடிக்கின்றார்.

திருவாலவாய் இறையனார் எழுதிய இத்திருமுகத்திற்கு இணையான திருமுகம் எங்குமே இல்லை. இது திருமுகம் எழுதும் பாடத்தை எமக்கு பண்பாக உணர்த்துவதைக் கண்டு பயன் கொள்ளலாம்.

# சிற்றம்பலவன் கைச்சீட்டு

தில்லைச் சிற்றம்பலவன் கொற்றங்குடியார் எனும் உமாபதி சிவாச்சாரியாருக்குப் பெற்றான் சாம்பான் எனும் பக்தனுக்காக எழுதிய கைச்சீட்டு ஒன்றுள்ளது.

பெற்றான் சாம்பான் எனும் பக்தன் தினமும் தில்லைச் சிற்றமுடைய நடராசப் பெருமானுக்கு அமுது ஆக்குவதற்கு விறகு கொடுக்கும் தொண்டு புரிந்தவன். என்னேரமும் நின்றும் இருந்தும் கிடந்தும் நடராசப் பெருமானையே நினையும் கருத்துடையவன். தன்னை முழுமையாகச் சிவ தொண்டுக்கே அர்ப்பணித்த பக்குவ ஆன்மா ஆகிய அவனுக்கு முத்தி பெறும் பக்குவம் வாய்க்கப் பெற்றது.

அதேவேளை தன்னை முப்போதும் திருமேனி தீண்டி அர்ச்சிக்கும் தில்லை மூவாயிரவர்களில் முதல்வரான சைவசித்தாந்தம் தெளிந்த குருஞானியாகிய கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாருக்கு ஞான குருவாகும் பக்குவம் வாய்க்கப் பெற்றிருந்தது.

இங்கு சிவன் ஒரு திருவிளையாடல் செய்யக் கருதினர். ஒரு பக்கவ ஆன்மாவுக்கு இன்னொரு பக்குவ ஞானகுரு மூலம் முத்தி கொடுப்பித்து இவரின் பக்குவத்தையும் உலகுக்கு உணர்த்தக் கருதினார்.

திருமுகத்தை எழுதிப் பெற்றான். சாம்பானிடமே கொடுத்து உமாபதிசிவாச்சாரியாரிடம் அனுப்பினார். அத்திருமுகம் இது.

**அடியார்க்கெளியன் சிற்றம்பலவன், கொற்றங்**
**குடியார்க் கெழுதிய கைச்சீட்டு படியின்மிசை**
**பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து**
**முத்தி கொடுக்க முறை**

இத்திருமுகத்தைக் கைச்சீட்டு என்றே குறிப்பிடுகின்றார்.

தன் அடியவர்களுக்கு எளிதில் வெளிப்பட்டு அருள்புரியும் பண்புடைய தில்லைச் சிற்றம்பலவானாகிய நான், கொற்றங்குடியில்

இருக்கும் உமாபதி சிவத்துக்கு எழுதும் கைச்சீட்டு இது. இப்பூமியிலே பலரும் அறியும் படியாகப் பெற்றான் சாம்பான் என்னும் என் அன்பனுக்கு, அவனுடைய மலபந்தங்கள் எல்லாம் நீங்கும் படியான நிர்வாண தீட்சை கொடுத்துத் தூய்மையுடையவனாக்கி, அவனுக்கு நீர் முறையாக முத்தி கொடுப்பீராக, என்பது இக்கைச்சீட்டின் கட்டளை.

சிற்றம்பலவன் கட்டளைப்படியே உமாபதி சிவாச்சாரியார் சிவனை நினைந்து பெற்றான் சாம்பானுக்கு நயன தீட்சை நல்கி அவன் மீது அருட்கண் பார்வை செலுத்தினார். உடனே பெற்றான் சாம்பான் ஜோதிமயமான ஒளியுடல் பெற்று சிவபதமாகிய முத்தி பெற்றார்.

இதனை விளங்கிக் கொள்ளாத சிலர் மன்னனிடம் முறையிட மன்னனும் உமாபதியிடம் நீ முத்தி கொடுத்தது உண்மையானால் இன்னொருவருக்குக் கொடுத்துக் காட்ட வேண்டும் எனக் கட்டளை இட்டான்.

அங்கு பக்குவர்கள் யாரும் இல்லாததால் தினமும் சிவனுக்குச் செய்யப்படும் அபிஷேக நீரான திருமஞ்சனத் தீர்த்தத்தில் நீராடும் பேறுபெற்ற கோமுகியின் பக்கத்தில் நின்ற முல்லைச் செடி ஒன்றின் பக்குவத்தை அறிந்து அதற்கு முத்தி கொடுத்துச் சிவசோதியுடன் கலக்கச் செய்தார்.

சிற்றம்பலவன் கொடுத்த கைச்சீட்டின் மகிமையால் இந்த அற்புதச் செயல் நிகழ்ந்தது.

தமிழ் இலக்கியப் பரப்பிலே திருவாலவாய் இறையனாரின் திருமுகப்பாசுரமும் தில்லைச் சிற்றம்பலவனின் கைச்சீட்டும் தெய்வீகத் தமிழுக்கு அணி சேர்த்து என்றும் நின்று நிலவும் செம்மை இன்புறத் தக்கதே.



# திருமூலர் காட்டும் சிவநெறி

எமது சமயம் சைவசமயம், எங்கள் முழுமுதற் கடவுள் சிவபெருமான், சிவசம்பந்தமுடையது சைவம், இது சிவநெறி எனவும் படும். ஆன்மாக்கள் சைவசித்தாந்த நெறி நின்று அகப்புற வழிபாடு செய்து சிவனுடன் இரண்டறக் கலந்து சாயுச்சிய முத்தி பெறுவதே வாழ்வின் பயனாகிய பேரின்பப் பேறு. இந்நிலையே வீடுபேறு, முத்திப் பேறு, சிவகதி என்றும் சொல்லப்படும்.

சைவசமயத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் வடமொழியில் உள்ள வேத சிவாகமங்களும், தமிழ்மொழியில் உள்ள பன்னிரு திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திரங்களும் ஆகும். வடமொழி வேதசிவாகமங்களின் உட்பொருளையே திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் தமிழிற் கூறுகின்றன. இது பற்றியே திருமுறைகள் தமிழ் வேதம் எனவும் தமிழ் ஆகமம் எனவும் போற்றப்படுகின்றன.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாக உள்ளது திருமந்திரம். இதுவே சைவத் திருமுறைகள் எல்லாவற்றிலும் காலத்தால் முந்தியது. கி.பி ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்திய மூவாயிரம் ஆண்டு காலத்தில் ஆண்டுக்கு ஒன்றாக அருளிச் செய்யப்பட்ட மூவாயிரம் மந்திரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது திருமந்திரம் என்பது பெரியோர் முடிவு.

திருமூலர் நந்தியெம்பெருமானாகிய சிவபெருமானின் அருள் பெற்று மூவாயிரம் தமிழ் எனும் திருமந்திரத்தைப் பாடினாரென்றும், இதனைத் தினமும் காலையில் கருத்தறிந்து ஓதி வழிபட்டால் ஞால முதல்வனாகிய சிவபெருமானை அடைய முடியும் என்பதைத் திருமூலரே,

> **மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்**
> **ஞாலம் அறியவே நந்தி அருளது**
> **காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்**
> **ஞால முதல்வனை கண்ணுவரன்றே.**

எனக் கூறுகின்றார்.

இது தமிழ் மந்திரம் எனவும், தமிழ் ஆகமம் எனவும், மூவாயிரம் தமிழ் எனவும் போற்றப்படுகின்றது. அத்துடன் ஏனைய திருமுறைகள் எல்லாம் தோத்திரங்களாக இருக்க இது தோத்திரமாகவும்

சாத்திரமாகவும் விளங்குகின்றது. வேத, ஆகம, அறநூல்களின் கருத்துக்களையெல்லாம் மந்திர வடிவில் தரும் தனிச்சிறப்புக்கும் உரியது. சைவ சமயத்தைப் பற்றிய எல்லாக் கருத்துக்களையும், முழுமையாகத்தரும் தனிப்பெரும் நூலாக உள்ளது திருமந்திரம் எனின் மிகை இல்லை.

சைவம், சிவநெறி, சிவபெருமான், சைவசித்தாந்தம், சிவகதி, சாயுச்சிய முத்தி முதலான சைவம் சார்ந்த சொற்களையும், அவை பற்றிய தத்துவ விளக்கங்களையும் முதன் முதலில் தமிழிற் கூறிய காலத்தால் முந்திய மூத்த நூலாகத் திருமந்திரமே விளங்குகின்றது. உதாரணத்துக்குச் சிலவற்றைக் காண்போம்.

சைவப்பெருமைத் தனி நாயகன் நந்தி, தெய்வச் சிவநெறி சன்மார்க்கம், தேடித் திரிந்து சிவபெருமான் என்று, சைவம் சிவனுடன் சம்பந்தமாவது சிவசிவ என்கிலர் தீவினையாளர். சிவனோ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை, சிவகதியே கதி, சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்திக்கும் என்பன போன்ற பல தொடர்களையும், விளக்கங் களையும் திருமந்திரத்தில் காணலாம்.

பின்வரும் மந்திரத்தில் சைவம், சிவநெறி, குருநெறி, சன்மார்க்கம் எனும் சொற்கள் இடம் பெற்றிருப்பதையும் இம்மந்திரப் பொருள் அதற்கு விளக்கம் அளிப்பதையும் காண முடிகிறது.

**சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி**
**உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு**
**தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய**
**வையத்து உள்ளார்க்கு வகுத்து வைத்தானே.**

என்பது அந்த மந்திரம்.

இதன் பொருள் சைவசமயத்துக்குப் பெருமை தேடித்தரும் ஒப்பற்ற பரம்பொருள் ஞானத் தலைவனாகிய நந்தியெம் பெருமான் எனும் சிவன். அவன் ஆன்மாக்கள் கடைத்தேறுவதற்குச் சொல்லி வைத்த குரு உபதேசமாகிய ஞானநெறி ஒன்று இருக்கிறது. அதுதான் தெய்வச் சிவநெறியாகிய சன்மார்க்க நெறியாகும். இந்தப் பூமியில் உள்ளவர்கள் அதனை மேற்கொண்டு வாழ்வின் பயனாகிய முத்தியின்பத்தைப் பெற அந்த நன்நெறியை வகுத்து வைத்துள்ளான் எனக் கூறுகின்றது இந்த மந்திரம்.

* * *

# சிவபுரத்துள் செல்வர்

திருப்பெருந்துறையிலே சிவபெருமான் ஆகிய பரமாசாரியாரிடம் திருவடி தீட்சை பெற்று ஞானம் சித்திக்கப் பெற்ற திருவாதவூரடிகள் பெருமானைப் பாடத் தொடங்குகின்றார்.

அவருடைய வாக்கிலே வந்த முதல் திருவாசகத் தொடர் 'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க'' என்பதாகும். நமச்சிவாய எனும் நாமத்தை உடைய சிவப்பரம் பொருளாய நாதனின் தாள்கள், திரு வடிகள் வாழ்க எனத் திருவடிகளையே முதலில் பாடுகின்றார். தொடர்ந்து இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என இமைக்கும் அளவு நொடிப்பொழுதுகூட என் நெஞ்சை விட்டு நீங்காத திருவடிகள் வாழ்க என்கின்றார். என்நேரமும் சிவனடியையே சிந்திக்கும் பேறு அவருக்குக் கிடைத்தது. தொடர்ந்து திருவாசகத்தின் முதற் பாடலாகிய சிவபுராணத்தில் சிவபெருமானின் திருவடிகள் வாழ்க வென்றும் வெல்கவென்றும் போற்றியென்றும் இருபதுதரம் வாயார, மனமாரப் பாடித் தொடர்வதைக் காண முடிகிறது.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க எனச் சிவபுராணம் பாடத் தொடங்கிய திருவாதவூரர் தன் மாணிக்கவாசகங்களால் மாணிக்கவாசகர் ஆகிறார். சிவபுராணத்தில் நிறைவுப் பகுதியில் சிவனடி ஞானத்தால் பெறக்கூடிய பேற்றையும்

**சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ்ப்**
**பல்லோரும் ஏத்தப் பணிந்து.**

எனச் சிவனடி ஞானத்தின் பயனையும் கூறுகின்றார். சிவனடியைச் சிந்தை வைத்துச் சொல்லிய பாட்டின் பொருளை உணர்ந்து சொல்லுபவர்கள், சிவபுரத்தில் உள்ள சிவனடிக்கீழ்ப் பல்லோரும் பணிந்து ஏத்தச் செல்வர் என்கின்றார்.

இவ்வாக்கிற்கு அவரே இலக்கியமாகும் சிறப்பையும் நாம் இங்கு நோக்கலாம்.

சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு ஆலயந்தோறும் சென்று அற்புதங்களை நிகழ்த்தி எம்பெருமான் திருவடிகளைப் போற்றித் தேனினும் இனிய திருவாசகங்களைச் தித்திக்கப் பாடிய திருவாதவூரர் ஈற்றில் சிதம்பரத்தில் தங்கியிருந்து ஆடவல்லானைப் பாடிப் பணிகின்றார். ஆனிமகத்துக்கு முதனாள் ஒரு அந்தணர் வந்து அவர் பாடும் மாணிக்கமனைய வாசகங்களை அவர் வாயால் கேட்டுத் தன் கையால் ஏட்டில் எழுதிச் செல்கின்றார்.

மறுநாள் ஆனிமக நாளில் ஒரு ஆச்சிரியம் நடந்தது. அதிகாலை தீட்சிதர்கள் வந்து நடராசப் பெருமான் சந்நிதியைத் திறக்கும் போது பெருமானின் திருவடியின்கீழ் ஒரு ஏட்டுக்கட்டு இருப்பதைக் கண்டு அதிசயித்தார்கள். பெருமானுக்குத் தீபாராதனை செய்து திருவாதவூரர் சொல்லச் சொல்ல அந்தணர் எழுதிய பாடல்கள் அவையெனக் கண்டார்கள். ஏட்டின் முடிவில் “அழகிய சிற்றம் பலமுடையான் கைச்சாத்து'' எனக் கைமுத்திரையும் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆனந்தமும் அதிசயமும் கொண்டார்கள்.

ஓடோடிச் சென்று திருவாதவூரரை வழிபட்டு வணங்கி அழைத்து வந்து இந்த அதிசயத்தைக் காட்டினார்கள். நடராசப் பெருமானின் திருவிளையாடலை வியந்து மெய்விதிர் விதிர்க்க கண்கள் ஆனந்த அருவிசோரத் திருவாதவூரர் மெய் மறந்து ஆனந்த பரவசராகி நின்றார்.

தீட்சிதர்கள் அவரைப் பணிந்து சுவாமி, இதுவரை காலமும் தாங்கள் பாடிய இப்பாடல்களின் அருமை பெருமையை அறியாதிருந்து விட்டோம். இன்று அப்பனின் திருவிளையாடலே எங்கள் அகக் கண்களைத் திறந்தது. பெருமானே நாமும் கேட்டுணர்ந்து உய்தி பெறுவதற்கு இந்தத் திருவாசகப் பொருளை எமக்குச் சொல்ல வேண்டும் என்று விண்ணப்பித்து நின்றார்கள்.

இதன் பொருள் சொல்லுத்தரத்தன்று. இதன் பொருளைக் காட்டு கின்றேன் எல்லோரும் வாருங்கள் பாருங்கள் என்று நடராசப் பெருமான் திருவடிகளைக் காட்டிய படியே கோயில் உட்சென்றார். கண் இமைக்காமல் எல்லோரும் பார்த்து நின்றார்கள். உள்ளே சென்றவரை அவர்களால் காண முடியவில்லை. இந்தக் காட்சியை மாணிக்கவாசக

சுவாமிகளின் வரலாற்றைத் திருவாதவூரடிகள் புராணம் எனும் நூலாகப் பாடிய கடவுள் மாமுனிவர்

> **செய்காட்டும் கமுகடவித்தில்லையுள்ளார் பொருள்கேட்ப**
> **கைகாட்டித் தன்னுருவம் காட்டாமல் மறைந்தாரைப்**
> **பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு**
> **மெய்காட்டிப் பாலுடனே மேவிய நீராயினர்.**

என்கின்றார்.

வளப்பம் பொருந்திய கமுகஞ் சோலைகள் சூழ்ந்த தில்லையிலுள்ளவர்கள் திருவாசகத்தின் பொருள் என்ன என்று கேட்ப, அவர் தனது இரு கைகளையும் நடராசப் பெருமானுடைய திருவடிகளை நோக்கிக் காட்டியவண்ணம் சென்று அப்பெருமானுக்குத் தனது அன்பின் மெய்ப்பாட்டைக் காட்டிப் பாலுடன் கலந்த நீர் போல நடராசப் பெருமானுடன் இரண்டறக் கலந்து சாயுச்சிய முத்தி பெற்றார்.

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் பணிந்து ஏத்தச் செல்வார் என்று சிவபுராணம் பாடிய மாணிக்கவாசகரே அச்சொல்லுக்கு இலக்கியமாகி தில்லையுள்ளார் பல்லோரும் பணிந்தேத்தப் பேரின்ப நிலை பெற்றார்.

"தாடலை போல் கூடியவை தான் நிகழா வேற்றின்பக் கூடலை நீ ஏகமெனக் கொள்" என்ற சைவசித்தாந்த உண்மையே தாள் + தலை எனும் இரு சொற்கள் சேர்ந்து பிரிப்பின்றித் தாடலை என ஒரு சொல்லாவது போலப் பெருமானின் தாள்களில் தன் தலை சேர அத்துவித முத்தி பெற்றார்.

"நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தோறெப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையானுக்கே சென்றுதாய் கோத்தும்பி" எனப் பாடியவர் தானே அத்தும்பியாகிப் பெருமான் திருவடிமலரில் சேர்ந்தார்.

# பெரியபுராண மங்கல வாழ்த்து

தமிழ் மண்ணில் தமிழில் எழுந்த தனித்துவமான காப்பியமான பெரியபுராணத்தின் மங்கல வாழ்த்தாகிய காப்புச் செய்யுளின் உட்பொருட் சிறப்பைப் பார்ப்போம். பெரியபுராணம் தில்லை நடராசப் பெருமான் உலகெலாம் என அடியெடுத்துக் கொடுக்கத் தெய்வப் புலவராகிய சேக்கிழார் சுவாமிகளால் பாடப்பெற்றது.

இதன் மங்கல வாழ்த்தாய் அமைந்த காப்புச் செய்யுள்

**உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்**
**மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்**

என்பதாகும் இதன் பொருள்.

இறைவனாகிய சிவபெருமான் உலக உயிர்களால் இன்ன தன்மையன் என்று எடுத்துக் கூறுவதற்கு அரியவர். அரியவனாயினும் யாவரும் வணங்கும் படியாகப் பிறைச் சந்திரனையும் கங்கையையும் அணிந்த சடையினை உடையவன். அளவில்லாத ஒளி மயமானவன். தில்லையம்பலத்தில் திருக்கூத்து ஆடுபவன். மலர்கின்ற மென்மை யானதும் சிலம்பினை அணிந்ததுமான திருவடிகளையுடைய அத்தகைய இறைவனை வாழ்த்தி வணங்குவோம். என்பது இதன் பொருள். இவ் வாழ்த்திலே மங்கல வாழ்த்திற்குரிய இலக்கணமான

**"வழிபடு தெய்வ வணக்கம் கூறி**
**மங்கல மொழிமுதல் வகுத்து எடுத்துக்கொண்ட**
**இலக்கண இலக்கியம், இடுக்கணின்றி**
**இனிது முடியும் என்மனார் புலவர்"**

எனும் சூத்திரத்திற்கு அமைவாக வழிபடு தெய்வ வணக்கம் முழுமுதற் பொருளான அம்பலத்தாடும் பெருமானுக்கே கூறப்பட்டுள்ளது. மங்கல மொழி முதலாக வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு

அமைவாக உலகு எனும் மங்கலச் சொல்லிலேயே தொடங்குகின்றது. இச்சொல்லுக்கு இரண்டு தனிச் சிறப்புக்கள் இருப்பதைக் காணலாம். ஒன்று அம்பலத்தில் ஆடும் பெருமானே அடி எடுத்துக் கொடுத்த நூல். அதுவும் நாதமும் விந்துவுமான பிரணவத்தின் குறியீடான பிள்ளையார் சுழியான உவில் தொடங்குவது மற்றுமோர் சிறப்பு ஆகும். இம்மங்கல வாழ்த்துடன் தொடங்கும் பெரியபுராணம் உலகெலாம் என்று தொடங்கி இறுதிப்பாடலிலும் நின்றதெங்கும் நிலவி உலகெலாம் என்று முடியும் சிறப்பையும் நோக்கும் போது இந்த நூல் பதி வாக்கேயாகும் என உணர முடிகிறது.

உலகெலாம் எனச் சிவன் வாக்காகவே எழுந்த பெரிய புராணத்தின் மங்கல வாழ்த்தாகிய முதற்பாடல் நம் சைவ சமயத் தத்துவக் கருத்துக்களைக் கொண்டு உயர்ந்து நிற்கிறது.

பெரியபுராணத்தில் 63 தனியடியார்கள் வரலாறும், 9 தொகையடி யார்கள் வரலாறும் சொல்லப்படுகிறது. இவ்வுண்மையை இக்காப்புச் செய்யுளில் உள்ள எழுத்துக்கள் உள்ளுறையாக உணர்த்துகின்றன. இதில் வரும் எழுத்துக்கள் 63. பதம் பிரித்து எண்ணினால் அவை 72 ஆகும். முதற்சொன்ன 63 எழுத்துக்களும் தனி அடியார்களையும் பின்வரும் 72 எழுத்துக்களும் தொகையடியார்கள் 9 பேரினையும் சேர்த்ததாயும் அமைந்துள்ளமை ஒரு தெய்வீகப் புதுமை.

இவ்வுலகு நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களால் ஆனது. அவற்றின் கலப்பு வடிவமே நாம் காணும் உலகு. இவ்வுண்மையை இதில் வந்துள்ள உலகு, நீர், சோதி, ஆடுவான், அம்பலம் எனும் சொற்கள் உணர்த்துகின்றன.

சைவசித்தாந்த தத்துவம் இறைவன் நிலையை சொரூப இலட்சணம் என்றும் தடத்த இலட்சணம் என்றும் இருவிதமாகச் சொல்லும். உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன் என்பது சொரூப நிலையையும், நிலவுலாவிய நீர்மலி வேணியன் என்பது தடத்த நிலையையும் காட்டுவதைக் காணலாம்.

தடத்த நிலையில் இறைவன் அருவமாயும், உருவமாயும், அருவுருவமாயும் உள்ளான். இங்கு உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவன்

என்பது அருவத் திருமேனியையும், நிலவுலாவிய நீர்மலி வேணியன் என்பது உருவத் திருமேனியையும் அலகில் சோதியன் என்பது அருவுருவத் திருமேனியையும் உணர்த்துவதை எண்ணி இன்புறலாம்.

பெரியபுராணத்தில்

**உலகெலா**முணர்ந் தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

எனும் காப்புச் செய்யுள் பிரணவ எழுத்தாகிய உகரத்தில் உலகெலாம் எனத் தொடங்கி

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி **உலகெலாம்**.

உலகெலாம் என்று முடிகிறது. உகரத்தில் தொடங்கி "ம்" எனும் மகர மெய்யுடன் முடிவது பெரியபுராணம் முழுவதும் ஓம் எனும் பிரணவ வடிவமான பதி வாக்கே என அறிந்து வியக்க வைக்கின்றது.

தில்லையில் ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டு பஞ்ச கிருத்தியம் செய்யும் நடராசப் பெருமானே உலகெலாம் என தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானுக்கு அடியெடுத்துக் கொடுத்த அற்புதம் முதல், நூல் முழுவதும் பதி வாக்காக அமைந்துள்ள செம்மையைக் கண்டு வியக்க வைக்கிறது.

# திருவடி ஞானம்

சிவபெருமானைத் தம் உள்ளத்துள் வைத்து எந்நேரமும் வழிபடுபவர் சிவனடியார் எனப்படுவர். சிவசின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் முதலிய சிவ வேடங்கள் மட்டும் ஒருவரைச் சிவனடியார் ஆக்கமாட்டா. சிவபெருமானுடைய திருவடிகளை - சிவன் அடிகளைத் தம் உள்ளத்துள் வைத்திருப்பவரே சிவன் அடியார் ஆவர்.

தமிழ் நாட்டில் சைவம் குன்றி வருதலைக் கண்ட ஒரு சிவன் அடியார், சிவபெருமானை இடையறாது தொழுது வணங்கித் தென் நாட்டில் வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், பூத பரம்பரை பொலியவும் செய்யவல்ல ஒரு புனிதக் குழந்தையைத் தர வேண்டுமென்று தவமிருந்தார். அவர் தான் சிவபாதஇருதயர். அவர் பெயரே சிவன் பாதத்தைத் தன் இருதயத்தில் பூண்ட சிவபாத இருதயர் ஆயிற்று. சிவனை நினைத்து வழிபட்டதால் அவருக்குக் கிடைத்த ஞானக் குழந்தைதான் ஆளுடைய பிள்ளையார் என்னும் திருஞான சம்பந்தப் பெருமான்.

அவர் மூன்று வயதுக் குழந்தையாய் இருக்கும் போதே தந்தையார் சிவபாத இருதயரின் தோள் மீதிருந்து சிவாலய வழிபாட்டுக்காகச் சீர்காழிப் பெருமானிடம் சென்றார். தந்தையார் நீராடும் போது அவரைக் காணவில்லையே என அழுதார். வேதநெறி தழைத்து ஓங்கவும், மிகுசைவத் துறை விளங்கவும், பூதபரம்பரை பொலியவும் புனிதவாய் மலர்ந்து அழுதார். சிவபெருமான் உமாதேவியுடன் காட்சி கொடுத்து இந்தக் குழந்தைக்கு ஞானப்பாலை ஊட்டினார்.

ஞானப்பால் உண்ட குழந்தை ஞானசம்பந்தரானார். ஞானத்துடன் சம்பந்தம் - தொடர்புபட்டார். அக்கணமே அவர் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம் தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் எனப் பாடுகின்றார் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள்.

சம்பந்தருக்கு சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் சிந்தித்தது. தந்தையார் நீராடி முடித்து வந்தார். குழந்தை வாயில் பால் வடியக் கண்டார். பால் தந்தார் யார் எனக் கடிந்தார். சிவனடி ஞானம் சித்தித்த குழந்தை "போதையார் பொற்கிண்ணத்தடிசில் பொல்லாதெனத் தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டான்" எனச் சிவன் திருவடி

களையே நினைத்து தான் கண்ட சிவக்காட்சியைத் தோடுடைய செவியன் எனத் தொடங்கி ஞானத் தமிழில் பாடியது. அவருக்குச் சிவனடி ஞானம் சித்தித்ததாலே தமிழ் நாட்டிற்குத் தேவாரத் திருமுறைகள் கிடைத்தன. வேதநெறி தழைத்தோங்கியது. மிகுசைவத் துறை விளங்கியது. பூதபரம்பரை பொலிந்தது. பக்தி இயக்கம் தலையெடுத்தது. ஞானத்தமிழ் நமக்குக் கிடைத்தது.

சைவத் திருமுறைகளில் முதலாவது திருமுறையே சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெற்ற சம்பந்தப் பெருமானின் ஞானத்தமிழாக ஊற்றெடுத்தது.

சிவனடி ஞானம் சிந்திக்கப் பெற்ற ஒவ்வொரு நாயனார் வரலாற்றிலும் சிவனடி ஞானம் சிவம் ஆக்குவித்த செய்தியைக் காணமுடியும். மூன்று வயதில் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் சித்திக்கப் பெற்ற திருஞானசம்பந்தா் கோயில் தோறும் சென்று ஞானத் தமிழால் ஞானப் பொருளைப் பாடி பக்தி எழுச்சியை ஏற்படுத்தினாா். அவருக்குப் பதினாறு வயது எய்திய போது அவரைத் தம் குல தருமப்படி மணஞ் செய்ய வேண்டும் என பெற்றோா் விரும்புகின்றனா். தனக்கு அது தகாது சிவன் திருவடிகள் சேரல் தான் தனக்கு வேண்டியதென்பதை யுணா்ந்த போதும் பெற்றோா் சொற்கேட்டல் பிள்ளைகள் கடன் என்பதற்கிணங்கத் திருமணத்துக்குச் சம்மதிக்கிறாா். திருமணம் நடந்து முடிந்ததும் திருநல்லூா்ப் பெருமணம் எனும் திருக்கோயிலுக்கு மணமகளின் கைபற்றிச் செல்கின்றாா். சிவன் திருவடி சேரும் காலம் வந்ததென உணா்ந்து பெருமானை வேண்டுகின்றாா்.

**அன்புறு சிந்தையா் ஆகிஅடியவா்**
**நண்புறு நல்லூா்ப் பெருமணம் மேவிநின்று**
**இன்புறும் எந்தை இணையடி ஏத்துவாா்**
**துன்புறுவாரல்லா் தொண்டு செய்வாரே.**

எனப் பணிந்து "காதலாகி" எனும் பதிகம் பாடினாா். சிவஜோதி தோன்றியது. திருமணம் காண வந்தவா்களுடன் அன்று வைகாசி மூலத்தில் சிவசோதியுடன் கலந்தாா். இங்கும் சொல்லிய பாட்டின் பொருள் உணா்ந்து சொல்லுவாா் சிவபுரத்தில் உள்ளாா் சிவனடிக்கீழ் பல்லோரும் பணிந்து ஏத்தச் செல்வா் என்றபடி திருமணங் காண வந்த பல்லோரும் பணிந்தேத்தச் சிவகதி சோ்ந்த காட்சியைக் காண முடிகிறது.

☆ ☆ ☆

# சிவ விரதங்கள்

எமக்கு எல்லா நன்மைகளையும் எப்பொழுதும் தந்து கொண்டு இருக்கின்ற இறைவனை மறவாது, நினைத்து வாழ்த்தியும் வணங்கியும் இருத்தலே எமது கடமையாகும். குறிப்பாக சில நாட்களிலேனும் மக்கள் அக்கடப்பாட்டில் நிற்றல் வேண்டும். அந்த நாட்களே விரத நாட்களாகும்.

"மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலே விரத மாகும்" என்பது நாவலர் பெருமான் வாக்கு.

நாம் வணங்கும் எல்லாக் கடவுளுக்கும் இவ்வித விரதங்கள் பெரியோர்களால் வகுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு சிவ விரதங்களைப் பார்ப்போம். அதில் சிவராத்திரியைச் சிறப்பாகவும், ஏனைய விரதங் களைப் பொதுவாகவும் காண்போம்.

01. சிவபெருமான் நடராஜராக ஐந்தொழில் நடனம் செய்கின்ற சிதம் பரத்தில் ஆண்டுதோறும் ஆறு விசேட அபிஷேகங்கள் நடைபெறும். அந்நாட்கள் சிவ விரத நாட்களாகும். அவை,
    சித்திரைத் திருவோணம்
    ஆனி உத்தரம்
    ஆவணிப் பூர்வபக்க சதுர்த்தசி
    புரட்டாதி பூர்வபக்க சதுர்த்தசி
    பங்குனி உத்தரம்
    மார்கழித் திருவாதிரை
    என்பனவாகும். இந்நாட்களில் விரதமிருந்து நடராஜரை வணங்க வேண்டும்.
02. வெள்ளிக்கிழமையாகிய சுக்கிர வார விரதம்
03. ஐப்பசித் தேய்பிறை சதுர்த்திக்கு முன் வருகின்ற 21 நாட்கள் கொண்ட கேதார கௌரி விரதம்
04. மகா சிவராத்திரி
05. பங்குனி உத்தரம்
06. மார்கழித் திருவெம்பாவை - திருவாதிரை விரதம்
07. பூர்வபக்க திரயோதசி திதியில் வரும் உமாமகேஸ்வர விரதம்

08. கார்த்திகைப் பூரணையில் வரும் உமாமகேஸ்வர விரதம்

09. வைகாசிப் பூர்வபக்க அட்டமியில் வரும் இடப விரதம்

10. கார்த்திகைத் திங்களில் வரும் சோமவார விரதம். இவற்றுள் சிவராத்திரியே மிகச் சிறந்த விரதமாகும்.

## மகாசிவராத்திரி

மாசி மாத அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி திதியில் வருவது மகாசிவராத்திரியாகும். இது சிவபெருமான் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் ஊழி முடிவுக் காலத்தைக் குறிக்கும். ஒடுக்கிய உலகத்தை உயிர்களின் பொருட்டு மீளத் தோற்றுவிப்பதற்காக இறைவன் சோதி இலிங்கமாக நின்று இலலித தேவி என்னும் பெயரோடு சக்தியைத் தோற்றுவிக்க அத்தேவி சிவலிங்கப் பெருமானை வணங்க, அவர் இலிங்கோற்பவராகத் தோன்றி பிரமா முதலியோரைப் படைத்து உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் ஆரம்பித்தார்.

இதனையே மாசி மாதத்து அபரபக்க சதுர்த்தசித் திதியில் வரும் இரவும், அன்றிரவு மூன்றாம் சாமத்தில் வரும் இலிங்கோற்பவ பூசையும் உணர்த்துகின்றன. அன்று பகல் முழுவதும் சிவ சிந்தனையோடு உணவு உண்ணாமல் உபவாசம் இருந்து, இரவு முழுவதும் விழித்திருந்து நான்கு சாமமும் நடக்கும் அபிஷேக பூசைகளைத் தரிசித்து அடுத்த நாட் காலையிலே புண்ணிய தீர்த்தத்தில் தீர்த்தமாடிக் காலையிலே பாரணம் பண்ண வேண்டும். (பாரணம் : உபவாசத்தின் பின் சிவனின் பிரசாதமாக உட்கொள்ளும் உணவு) அன்று பகலிலும் நித்திரை செய்யாது சிவ சிந்தனையுடன் இருத்தல் வேண்டும்.

மனத்தை வேறு வழிகளில் போக விடாமல் வழிபாடு செய்வதற்குச் சிவாலயத்தில் இருந்து அபிஷேக, பூசை வழிபாடுகளைத் தரிசித்தும், தோத்திரங்களைப் பாராயணம் செய்தும், சிவன் பெருமைகளைச் சிந்தித்தும் வழிபடுதலே உண்மையான சிவராத்திரி விரதமாகும். எப்படியும் நித்திரை விழித்து விட்டால் போதும் என வீண் கேளிக்கை களில் ஈடுபடுதல், குளிக்கப் போய் சேறு பூசுதல் போன்றவை பாவச் செயலாகும். பசித்திரு, விழித்திரு, தனித்திரு என்னும் நம் முன்னோர் வாக்கு சிவராத்திரி விரதத்துக்கு மிகப் பொருத்தமானதாகும்.

☆ ☆ ☆

# மாசி மகம்

மாசி மாதத்திலே வரும் மக நட்சத்திரத்தோடு கூடிய புண்ணிய காலம் மாசி மகம் எனப்படும். இது நோன்பிருந்து புண்ணிய தீர்த்தம் ஆடுவதற்குரிய சிறந்த நாள் ஆகும். இதற்குப் பல சிறப்புக்கள் உண்டு.

சிதம்பரத்தில் பஞ்சகிருத்திய திருநடனம் புரிகின்ற நடராசப் பெருமானின் தீர்த்த நாட்களில் இதுவும் ஒன்று. சிதம்பரத்துப் பத்துத் தீர்த்தங்களுள் பாசம் அறுத்ததுறையும் ஒன்று. இது சிதம்பரத்திலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் உள்ளது. இங்கு மாசி மகத்தில் தீர்த் தோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நாளில் தான் வருணபகவான் இங்கு தீர்த்தமாடி தன் பாசக்கட்டு நீங்குவதற்கு நடராசப் பெருமானிடம் அருள் பெற்றான்.

மாசி மகத் தீர்த்தத்தின் மகிமையைச் சம்பந்தப் பெருமானும் திருமயிலாப்பூரில் பூம்பாவையை எழுப்பிய பதிகத்தில்

**மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்**
**கடலாட்டுக் கண்டான் கலா லீச்சரம் அமர்ந்தான்**
**அடல் ஆனேறு ஊரும் அடிகள் அடிபரவி**
**நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்.**

எனக் குறிப்பிடுவதைக் கொண்டு அறியலாம்.

தக்கனுக்கு உமாதேவியார் தாட்சாயினி எனும் பெயரில் மகளாகக் கிடைத்த நாளும் மாசி மகம் ஆகும். தக்கன் உமாதேவியார் தனக்கு மகளாகப் பிறக்க வேண்டும் எனத் தவமிருந்து வரம் பெற்றான். ஒரு மாசி மகத்தில் அம்பாள் காளிந்தி நதியில் ஒரு தாமரைப் பூவில் வலம்புரிச் சங்கு வடிவாய் இருந்தாள். தக்கன் தனது மனைவி வேதவல்லியோடு மாசி மகத்தில் நீராடப் போனபோது அதைக் கண்டு எடுத்தான். அச்சங்கு அழகிய குழந்தை வடிவானது. தக்கன் தான் செய்த தவப்பயன் மாசி மகத் தீர்த்தத்தில் உமை மகளாகக் கிடைத்தாள் என மகிழ்ந்து வளர்த்தார். பின் சிவபெருமானே அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றார் என்பது வரலாறு.

பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை இத்தினத்தில் வரும் புண்ணிய நாள் மாமாங்கம் எனப்படும் கும்பகோணத்தில் இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெறும். கும்பகோணப் பட்டினத்தின் நடுவில் ஒரு தீர்த்தக்குளம் உள்ளது. அது மகாமகக் குளம் எனப் பெயர் பெறும்.

இவ்வுலகில் ஞானாக்கினிக்கு நிலைத்த இடம் கும்பகோணம், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஞானாக்கினி தேவனால் நீர்மயமான ஒரு நீர்ப்பெருக்கு உண்டாக்கப்படுகின்றது. அதில் சப்த (7) தீர்த்தங்களும், கோதாவரி, காவிரி, யமுனை, கங்கை, சரஸ்வதி முதலான புண்ணிய நதிகளும் இப்புண்ணிய காலத்தில் இக்குளத்தில் வந்து தங்குவதாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்நாளில் இக்குளத்தில் நீராடினால் இத்தனை புண்ணிய தீர்த்தங்களிலும் ஆடிய புண்ணியம் கிடைக்கும். இதனை அப்பர் சுவாமிகள்

**ஏவி இடர்க் கடல் இடைப்பட்டு இளைக்கின்றேன்**
**இப்பிறவி அறுத்து ஏறவாங்கி ஆங்கே**
**கூவிய மருள் அனைத்தும் உருவிப் போகக்**
**குறியில் அறுகுணத்தாண்டு கொண்டார் போலும்**
**தாவி முதல், காவிரி, நல்யமுனை, கங்கை**
**சரசுவதி, பொற்றாமரை, புட்கரணி, தெண்ணீர்க்**
**கோவி யொடு, குமரி,வரு தீர்த்தஞ் சூழ்ந்த**
**குடந்தைக் கீழ்க்கோட்டத்து எங்கூத்தனாரே**

என அத்தீர்த்தங்களைக் குறிப்பிடுகின்றார். அவை தாவி என்பது கோதவரி, பொற்றாமரை - சரயு நிதியாகும். கோவி என்பது நர்மதை.

இவ்வொன்பது தீர்த்தங்களும் மகாமகத்தன்று மாமாங்கக் குளத்தில் வந்து மூழ்கித் தங்களில் நீராடியவர்களின் பாவங்களையும் தாம் ஏற்று இப்புண்ணிய நாளில் இங்குவந்து கழுவிப் புனிதம் பெறுகின்றன.

ஞானாக்கினி தேவன் மாமாங்கக் குளத்தில் இருந்து கொண்டு நதிகள் கழுவிவிட்ட பாவங்களையும், அங்கு தீர்த்தமாடும் மக்களின் பாவங்களையும் இந்த மகாமக நாளில் எரிக்கின்றான். ஆதலால் இந்நாளில் மனிதரும், தேவரும், முனிவர்களும், ஞானிகளும் இங்கு வந்து தீர்த்தமாடித் தங்கள் பாவங்களைப் போக்கிப் புனிதர் ஆகின்றார்கள்.

கும்பகோணத்துக்கு குடந்தை என்றும் ஒரு பெயர் உண்டு. குடமூக்கு என்றும் சொல்லப்படும். சுமார் 1500 வருடங்களுக்கு முந்திய புராதனமான நாகேஸ்வரர் ஆலயம் இங்குள்ளது. இது "குடந்தைக் கீழ்க் கோட்டத்தெம் கூத்தனாரே" என அப்பர் சுவாமிகளால் பாடல் பெற்ற தலம். இத்தலத்தின் ஞானாக்கினித் தீர்த்தமே மகாமகக் குளம்.

★★★

# தருமம் என்று ஒரு பொருள் உளது

இவ்வுலகில் வாழும் மக்கள் எல்லோரும் இன்பமாக வாழவேண்டும் என்றே விரும்புகின்றார்கள். "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" ஆதலால் தாம் விரும்பும் இன்பத்தைத் தரக்கூடியது பொருளே என்று எண்ணிப் பொருள் தேடுவதிலேயே கண்ணும் கருத்துமாகப் பாடுபடுகிறார்கள்.

பொருளைத் தேடிவிட்டால் அது இன்பத்தையே தருகின்றதோ என்றால், அது இன்பத்தையும் தருகின்றது. துன்பத்தையுமல்லவா தருகின்றது. பொருளைத் தேடுங்கால் துன்பம், அதைப் பேணுங்கால் பெரும் துன்பமாக இருக்கின்றதே.

அப்படியாயின் இன்பத்தையே தரும் பொருள் எது என்ற தேடல் எங்கள் மனதில் உண்டாகின்றது அல்லவா. அதுதான் தருமம் எனும் பொருள். அதுவே அறம் எனவும் படும்.

கந்தபுராணத்திலே காசிபர் உபதேசப் படலத்திலே இதற்கு விளக்கம் சொல்லப்பட்டிருக்கின்றது. இம்மையிலும் இன்பம் தரும், மறுமையிலும் இன்பம் தரும், இருமையிலும் இன்பம் தரும் பொருள் ஒன்று இருக்கிறது. அப்பொருளுக்குப் பெயர்தான் தருமம்.

**தருமம் என்றொரு பொருள் உளது; தாவிலா**
**இருமை இன்பமும் எளிதின் ஆக்குமால்;**
**அருமையின் வரும் பொருள் ஆகும்; அன்னதும்**
**ஒருமையினார்க்கு அல்லால் உணர்தற்கு ஒண்ணுமோ.**

கந் - காசிபர் - 12

இதன் பொருள், தருமம் என்று ஒரு பொருள் உளது, அது குற்றமற்றதாய் இம்மை மறுமை ஆகிய இருமைக்கும் இன்பத்தைத் தரவல்லது. அது அருமையாகத்தான் வரும். இதனை நேரிய தூய மனமுள்ளவரே உணர்வர்.

அதுதான் அறம், அறம் செய்யவிரும்பு என்று படித்தோமே அதுதான் இது. இந்த இன்பத்தைத் தரும் பொருளைப் பெற விரும்புவோர் தீச்செயல்கள் எதையும் செய்யக்கூடாது என்பார் வள்ளுவர்.

**தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால** - குறள் 209

எங்களிலே நாங்கள் அன்புடையவர்களாய் இருந்தால், பிறர்க்குத் தீங்கு செய்யக்கூடாது. சுவரிலே எறிந்த பந்து எறிந்தவரிடமே திரும்பி வருதல் போல நாம் செய்த செயலின் பயன் எங்களிடமே வரும். நாம் நல்வாழ்வை விரும்பினால் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது. செய்தால் அது நம்வாழ்வுக்கே நட்டமாகும். இதுதான் தருமத்தின் ஆரம்பம். தருமத்தை நன்கு பேணினால் அன்பு செய்யத்தக்க இடத்தில் அன்பு செய்ததாகும். தொடர்புடையவர்களிடம் செய்யப்படும் இந்த அன்பு வளர்ந்து எல்லா உயிர்கள் மேலும் செல்லும், ஒரு நாளைக்கு அது அருள் ஆகும். இந்த அருள் அன்பு ஈன்குழவி.

அன்பும் அருளும் சித்தித்த போது தவம் வந்து கைகூடும். அத்தவம் மாட்சிமைப்படும் போது அறிவு தெளியும். அறிவு தெளியவே சீவன் சிவனாகும். இவ்வாழ்வின் பயன் ஆகிய இறையின்ப வீடு சித்திக்கும்.

**தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்:**
**அருள் எனும் குழவியும் அணையும், ஆங்கவை**
**வருவழித்தவம் எனும் மாட்சி எய்தும்; மேல்**
**தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்**

கந் - காசி -13

என்பது காசிபர் உபதேசம்.

உண்மை இன்பத்தைத் தரும் பொருள் தருமமே. அது இம்மையில் இன்பத்தைத் தந்து மறுமையில் பேரின்பத்தைத் தரும். ஆகவே தருமத்தைப் போற்றினால் அன்பு வளரும், அருள் மலரும், தவம் கைகூடும், பேரின்பம் பிறக்கும்.

# அறவழி வாழ்வோம்

ஔவையார் "அறம் செய்ய விரும்பு" என்று கூறுகின்றார். இதை எல்லோரும் அறிவோம். அறம் என்றால் என்ன? அதை ஏன் நாம் செய்ய வேண்டும்? எனும் வினா மனதில் எழுகின்றதல்லவா?

ஔவையாரே "புண்ணியம் ஆம் பாவம் போம்" என்று அதற்கு வழியும் காட்டுகிறார். ஆகக்கூடியது புண்ணியம், போக வேண்டியது பாவம். அதாவது செய்ய வேண்டியது புண்ணியம், செய்யக் கூடாதது பாவம் என்பது பொருள்.

ஆகவே புண்ணியச் செயல்கள் எவை? பாவச்செயல்கள் எவை என்பதை அறிந்தால்தானே அதன்படி செய்யலாம். புண்ணியச் செயல்கள்தான் அறச் செயல்கள். அவற்றால் வருவது இன்பம், பாவச் செயல்களால் வருவது துன்பம். எல்லோரும் விரும்புவதும், எல்லார்க்கும் வேண்டியதும் இன்பமே.

நமது ஆன்றோர்கள் புண்ணிய, பாவச் செயல்கள் எவையெவை என்பதை அறுதியிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். அதற்காகப் பல அறநூல்களையும், காவியங்களையும் எழுதி வைத்திருக்கிறார்கள்.

**செய்ய வேண்டிய அறச் செயல்கள்**

| | | |
|---|---|---|
| அன்பு | - | தன்மீதும் தொடர்புடையவர்கள் மீதும் அன்பு பாராட்டுதல் |
| இன்சொல் | - | பிறர்க்கு இனிமை தரும் சொற்களைப் பேசுதல் |
| உண்மை | - | உண்மை பேசுதல் |
| நேர்மை | - | நேரிய முறையில் வாழ்தல் |
| நீதி | - | நீதி தவறாது நடத்தல் |
| கடமை | - | தனது கடமையைத் தவறாது செய்தல் |
| கண்ணியம் | - | கௌரவமாக வாழ்தல் |
| தூய்மை | - | அகமும் புறமும் சுத்தமாயிருத்தல் |
| கருணை | - | பிற உயிர்கள் மேல் இரக்கமாயிருத்தல் |
| நடுவுநிலைமை | - | எந்தச் சந்தர்ப்பத்திலும் பக்கம் சாராது இருத்தல் |
| சாந்தம் | - | அமைதியாய் இருத்தல் |

| | | |
|---|---|---|
| பொறுமை | - | எதையும் பொறுத்துக் கொண்டிருத்தல் |
| பணிவு | - | நான் என்ற அகந்தை இன்றி எல்லோருடனும் பணிவாக நடத்தல் |
| ஈதல் | - | இல்லாதவர்க்குக் கொடுத்தல் |
| கடவுள் வழிபாடு | - | கடவுள் நம்பிக்கையுடன் அவரை வழிபட்டு வாழ்தல் |

இவ்விதமான தனக்கும், பிறர்க்கும் நன்மை தரும் செயல்கள் எல்லாம் அறச் செயல்கள் எனப்படும்.

## செய்யக்கூடாத பாவமான செயல்கள்

| | | |
|---|---|---|
| பொய் | - | பொய் பேசுதல், உள்ளதை மறுத்து இல்லாததைச் சொல்லுதல் |
| கொலை | - | உயிர்களைக் கொல்லுதல் |
| புலால் | - | உயிர் நீங்கிய உடலை உண்ணுதல் (மச்சமாமிசம்) |
| களவு | - | பிறர் பொருளை அவருக்குத் தெரியாமல் எடுத்தல் |
| கள் | - | மது முதலான போதைப் பொருள்களைப் பாவித்தல் |
| காமம் | - | தன் கணவன், மனைவியோடல்லாமல் பிறருடன் பாலியல் தொடர்பு கொள்ளல் |
| பொறாமை | - | பிறரின் சிறப்பைக் கண்டு பொறுக்காமை |
| அவா | - | பேராசை கொள்ளல் |
| கோபம் | - | கோபித்தல் |
| வஞ்சகம் | - | நல்லவர் போல் நடித்துத் தீமை செய்தல் |
| சூது | - | சூதாட்டத்தில் ஈடுபடுதல் |
| அநீதி | - | நீதியில்லாச் செயல்களைச் செய்தல் |
| கொடுமை | - | கொடிய செயல்களில் ஈடுபடுதல் |
| வன்சொல் | - | மற்றவர்க்குத் துன்பம் தரும் சொற்களைப் பேசுதல் |
| புறங்கூறல் | - | ஒருவர் இல்லாத இடத்தில் அவரைத் தூற்றுதல் |
| செருக்கு | - | நான் எனும் அகங்காரம் |

இவை போன்ற தீய செயல்கள் தனக்கும் பிறர்க்கும் துன்பம் தருவன. ஆதலால் இவை பாவச் செயல்கள். மறச் செயல்கள் எனப்படும். எனவே விதிக்கப்பட்ட அறச் செயல்களைச் செய்யா திருத்தலுமே அறம் எனப்படும்.

வள்ளுவர்

**செய்தக்க அல்ல செயக்கெடும். செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்.** - குறள் 466

என்கிறார். செய்யக்கூடாதவற்றைச் செய்வதால் கேடுவரும், செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விடுவதாலும் கேடு வரும் என்பது இதன் பொருள். மேலும்,

**தீயவை தீய பயத்தால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்.** - குறள் 202

தீய செயல்கள், செய்பவருக்குத் தீமையையே தரும் ஆதலால் தீயவற்றைத் தீயினும் பார்க்கக் கொடியவை என்றும், அவை தம்மை அழித்துவிடும் என்றும் அஞ்சி விலக்குதல் வேண்டும்.

செய்ய வேண்டிய அறச் செயல்களைச் செய்து, செய்யக் கூடாத மறச் செயல்களைச் செய்யாமல் அறவாழ்வு வாழ்வோம்.

**"தீதும் நன்றும் பிறர்தரவாரா"**



# பண்பாட்டுக் கோலங்கள்

ஒரு இனத்தின் நடைத்தைகளே, வாழ்க்கையை நடத்தும் முறைகளே பண்பாடு ஆகும். இது முந்திய தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறை பெற்றுக்கொள்ளும் செல்வமாகும்.

நடத்தைகள் எல்லாம் பண்பாடு என்று சொல்லப்பட்டாலும் நீர் என்றால் நன்னீரையே குறிப்பது போல நல் நடத்தைகளே பண்பாடு எனப் போற்றப்படும். பண்பட்டதே பண்பாடு.

ஒரு இனத்தை அடையாளப்படுத்துவது அந்த இனத்தின் பண்பாடே ஆகும். பல்லாயிரக் கணக்கான இனங்கள் வாழும் உலகத்தில் தமிழர்களாகிய நாம் எங்கள் இனத்தின் தனித்துவத்தை அடையாளத்தை நிலைபெறச் செய்வதற்கு எங்கள் பண்பாட்டைக் காக்க வேண்டும்.

நமது நடத்தைகள் அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது. சிறப்பாக எமது பெயர், உடை, உணவு, உறையுள், உபசரிப்பு முறை, உறவாடும் முறை, பெரியோரைக் கனம் பண்ணும் முறை, நமது சடங்குகள், விழாக்கள், ஒழுக்க முறைகள் என அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது.

**பெயர் :**

ஒருவரை, இவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர், எந்த மொழிக்கு உரியவர், எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர், எந்தப் பண்பாட்டுக்கு உரியவர் என்பதை அவருடைய பெயர்தான் அடையாளப்படுத்துகிறது. ஆணா, பெண்ணா என்பதைக்கூட பெயர்தான் காட்டுகிறது. அதனால்தான் எவருக்கும் பெயர்தான் முதல் அடையாளமாக உள்ளது. பெயர் இல்லாதவன் இந்த உலகத்தில் எவருமே இல்லை. ஆதலால் பண்பாட்டின் வேர் பெயர் ஆகும் என்பது எல்லோர்க்கும் தெரிந்த ஒன்று.

தமிழர்களாகிய நம்முன்னோர்கள் அனைவரும் தமிழ்ப் பெயர்களை உடையவர்களாகவே இருந்தனர். பெயர் சூட்டுதலையே ஒரு முக்கியமான சடங்காகவே செய்தனர். பெயரைக் கொண்டு பொருளை அறிதல் போல ஒருவரின் பெயருக்கேற்பவே அவருடைய நடத்தைகள் அமையும் என்பதால் ஒரு பெரியவர் மூலம், சுபநேரத்தில் இறைவனை வணங்கிப் பெயர் சூட்டி அப்பெயரை எல்லோரும் அழைத்து

அக்குழந்தையை வாழ்த்துவர். இதனை நாமகரணம் எனப் பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றது. ஒரு மந்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லும்போது மந்திரபலன் கிடைக்கும். அதுபோலப் பிள்ளையின் பெயரும் மந்திரம் போல் அமைய வேண்டும். பிள்ளையின் பெயரைச் சொல்லச் சொல்ல அப் பெயரின் பொருளுக்கேற்றவனாய் அவன் உருவாகி வளர்வான். அதனால் தான் பிள்ளைகளுக்கு பெரியவர்களின் பெயரையோ அல்லது வணங்கும் தெய்வத்தின் பெயரையோ வைக்கும் பண்பாடு நிலை பெற்று இருந்தது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற வள்ளுவனின் சொல்போலப் பிள்ளையின் பெயர் மந்திரம் போலப் பலன் தந்தது.

இக்காலத்தில் இந்த உண்மைகளை நம்மவர்கள் மறந்து விட்டார்கள். அந்நிய மோகத்துக்கு ஆட்பட்டுப் பிறமொழியில் பெயர்களை வைக்கும் நிலை ஓங்கி வருகிறது. அப்பெயர் குறிக்கும் பொருள் என்ன என்பதைப் பெற்றார் அறிவதில்லை. பெயருக்குரிய பொருளைப் பிள்ளைகளும் அறிய மாட்டார்கள்.

இதனால் எங்கள் பண்பாட்டின் ஆணிவேராகிய தமிழ்ப் பெயர்களை இழந்து எம் இனத்தின் அடையாளத்தையே அழித்து அன்னியமாகிக் கலப்பினமாகி விடுவோம். இக்காலக் குழந்தைகளின் பெயர்களைப் பார்ப்போமானால் எதிர்காலத்தில் இவர்கள் தமிழர்கள்தானோ என்ற ஐயம் உருவாகி விடும். இனப்பற்று உள்ள ஒவ்வொருவரும் இதனைச் சிந்தனைக்கு எடுத்துப் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர்களையே வைக்க வேண்டும்.

**உடை :**

உலகில் பல்வேறு இனத்தவர்க்கும் தனித்தனி அந்தந்த இனத்தின் பண்பாட்டுக்கு ஏற்ற மாதிரியான உடைகள் உள. இவை பெரும்பாலும் அவர்கள் வாழும் நாடுகளின் தட்ப வெப்ப சுவாத்தியத் துக்கு ஏற்றதாக அமைந்திருக்கும். உடை உடல் அழகிற்கு மட்டுமல்ல உடல் நலத்துக்கும் இன்றியமையாதது.

தமிழர்களின் பண்பாட்டு உடை வேட்டி, சால்லை, சேட்டு அல்லது நஷனல் ஆண்களுக்குரியது. பருவம் எய்யாத பெண்குழந்தைகளுக்கு முழுப்பாவாடை, சட்டையும், பருவம் எய்திய பெண்களுக்கு முழுப்பாவாடையும் சட்டையும் துண்டுத் தாவணியும், வளர்ந்த பெண்களுக்கு சேலையும் உரியன. இக்காலத்தில் உடைகள் பெரிதும் மாறிவிட்டன.

உத்தியோகம், மற்றும் தொழில்களுக்குச் செல்வோர், பாடசாலை மாணவர்கள் சீருடை அணிவது தவிர்க்க முடியாதது. எனினும் எங்கள் இனத்துக்குரிய திருமணம் முதலான பண்பாட்டு விழாக் காலங்களிலும், ஆலய வழிபாடு முதலான இடங்களிலும் எமது பண்பாட்டு உடைகளை அணிவதைத் தவறவிடக்கூடாது. அந்நிய இனத்தவர்களின் உடைகளை அழகானது அல்லது கவார்ச்சியானது என அணிதல் எங்கள் பண்பாட்டையும், இன அடையாளத்தையும் சிதைக்கும் செயலாகும்.

**உணவு**

உண்ணும் உணவும், உடைபோல மக்கள் வாழும் நாட்டின் சுவாத்தியத்துக்கேற்ற இயற்கையோடு இயைந்த உணவாகவே இருப்பதைக் காணலாம். தமிழர்களாகிய நாம் எங்கள் மண்ணில் உற்பத்தியாகும் தானியவகை, பழவகை, கிழங்குவகை, இலைவகைக்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

உண்ணும்போது குடும்பத்தினர் எல்லோரும் ஒன்றாக இருந்து அளவளாவி ஆறுதலாக உண்ண வேண்டும். அப்போதுதான் குடும்ப உறவு நிலைப்பதுடன், உண்ணும் உணவும் சரியாகச் சமிபாடடையும். உணவு சமிபாடு அடைவதற்குத் தேவையான சுரப்புகள் சுரந்து சத்துக்கள் உடலில் உறிஞ்சப்படவும் வாய்ப்பாக இருக்கும்.

பல நாட்களுக்கு முன் சமைத்துக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு அவரவர் தமக்கு வசதியான நேரத்தில் சூடாக்கி உண்ணும் பழக்கவழக்கத்தால் குடும்ப உறவும், உணவின் பயனும் பாதிப்படையும்.

நாம் மட்டும் உண்ணாமல் விருந்தினர்க்கோ இல்லாதவர்க்கோ பகிர்ந்து கொடுத்து உண்பதும் நமது பண்பாடு ஆகும். இதனை வள்ளுவன் குறளில்,

> **"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
> **தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"**

என்றும் சொல்வதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

★★★

# காலதத்துவமும் சித்திரை வருடப்பிறப்பும்

அண்டசராசரங்கள் அனைத்தையும் கடவுள் உள்ளும் புறமுமாக நின்று இயக்குகின்றார். இந்த இயக்கம் காலதத்துவத்தைக் கொண்டு இயக்கப்படுகிறது. இதனை நாங்கள் வெளிப்படையாகக் காணமுடியும்.

மனிதவாழ்க்கை வட்டத்தைப் பார்ப்போமானால் நாம் தாயின் வயிற்றிலிருந்து பிறந்து கிடந்து பின் தவழ்ந்து, எழுந்து, தளர்நடை நடந்து, வேகமாய் நடந்து, ஓடி உலாவி உழைத்து வாழ்கின்றோம்.

வாழ்வின் நடுப்பகுதியாகிய ஐம்பது அறுபது வயது வரை ஏறுமுகத்தில் இயங்கிய எங்கள் வாழ்வும் அதற்கு உபகாரமான உடலும் பின் இறங்குமுகமாகத் தளர்வடைகின்றன. அறுபது வயதில் ஓய்வுபெற்று உடல் உழைப்பும் குறைந்து ஓடி நடந்த வேகம் குறைந்து, தளர்நடை நடந்து, எழுந்திருக்கவும் முடியாமல் பொல்லுப்பிடித்து, இருந்து, தவழ்ந்து தொடங்கிய வாழ்க்கை முதியோராய்க் கிடந்து இறந்து முடிகிறது. இயற்கையில் அனைத்தும் இந்தக் காலதத்துவத்தின் படியேதான் இயங்குகின்றன.

காலச்சக்கரத்தில் கணங்களாய், மணித்தியாலங்களாய், நாட் களாய், வாரங்களாய், மாதங்களாய், வருடங்களாய், யுகங்களாய் மீண்டும் மீண்டும் வட்டமாய் வந்து போய் மீண்டும் மீண்டும் வந்து போய்க்கொண்டு இருக்கின்றன.

ஒவ்வொரு 60 செக்கன்களுக்கும் ஒரு நிமிடமாய் வரும், ஒவ்வொரு 60 நிமிடங்களும் ஒரு மணித்தியாலமாய் வரும் ஒவ்வொரு 24 மணித்தியாலங்களும் ஒவ்வொரு நாட்களாய், ஒவ்வொரு 7 நாட்களும் ஒவ்வொரு வாரமாய், நான்கு வாரங்களும் ஒவ்வொரு மாதங்களாய். ஒவ்வொரு 12 மாதங்களும் ஒவ்வொரு வருடமாய், ஒவ்வொரு 60 வருடங்களும் ஒவ்வொரு வருட வட்டமாய் மீண்டும் மீண்டும் வரும். இதனை நம்முன்னோர் நன்கு திட்டவட்டமாய்க் கணித்து வகுத்து வைத்துள்ளார்கள். நாம் அதனை நேரமுகாமைத்துவம் செய்து எங்கள் வாழ்வை நடத்திக் கொண்டு இருக்கின்றோம். காலச் சக்கரத்தின் அடை யாளமாய் மணிக்கூடுகளும், கலண்டர்களும் எம்மை வழிநடத்துகின்றன.

இறைவன் இந்தக் காலச்சக்கரத்தை இயக்குகின்ற முறையைப் பார்ப்போம்.

இந்தப் பூமியில் சூரிய சந்திரர்களின் இயக்கத்தால்தான் பருவ காலங்கள் தோன்றுகின்றன. பருவகாலங்களுக்கு ஏற்பத்தான் இயற்கையின் மாற்றங்களும் உயிரினங்களின் வாழ்வும் நடைபெறு கின்றன.

நமது முன்னோர் சூரிய வீதியாகிய 360 பாகை கொண்ட வானவட்டத்தையும், 30 காகைகள் கொண்ட 12 இராசிகளாக வகுத்தனர். இந்த வானவட்டத்தில் சந்திரனும் ஏனைய கோள்களாகிய கிரகங்களும், தம்மைத்தாம் சுற்றுதலும், சூரியனைச் சுற்றுதலுமாகிய செயல்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

சூரியன் 12 இராசிகளையும் ஒரு இராசிக்கு ஒரு மாதமாக ஒரு வருடத்தில் வலம் வரும். சந்திரன் ஒரு இராசிக்கு இரண்டரை நாட்களாக ஒரு மாதத்தில் வலம் வரும்.

ஒரு வாரத்தில் 7 நாட்களும் கோள்களின் பெயரால் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி எனப்பெயர் பெறும். இப்படியான 4 வாரங்கள் ஒரு மாதம் ஆகும்.

சந்திரனுடைய சுற்றில் 27 நட்சத்திரங்கள் தொடர்புபடுகின்றன. இந்த அச்சுவினி முதலாய் ரேவதி ஈறான 27 நட்சத்திரங்களில் சூரியனுடைய செல்வாக்கினால் ஒவ்வொரு இராசியில் ஒவ்வொரு நட்சத்திரம் மேன்மையுறும். அத்தொடர்பில் மேன்மையுறும் நட்சத்திரங்களின் பெயரில் 12 இராசிகளுக்கு உரிய 12 மாதங்களும் பெயர் பெறுகின்றன.

இராசிகள் மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருட்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம் எனப் பெயர் பெறுகின்றன.

முதலாவதாகிய மேட இராசியில் மேன்மையுறும் நட்சத்திரம் சைத்திரா என வடமொழியில் பெயர் பெறும் சித்திரை ஆகும். அதனால் மேட இராசியில் சூரியன் வலம் வரும் காலம் சித்திரை எனப்படும்.

எனவே 12 இராசிகளில் முதல் இராசியாகிய மேட இராசியில் சூரியன் வலம் வரத் தொடங்கும் நாள் சித்திரை முதல் நாள் வருடப்பிறப்பாகக் கொள்ளப்படுகிறது.

★★★

# வழிபாடு

“இந்தப் பிறவி நமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்'' என்பது யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் நன்மொழி. அரிதினும் அரிதாகிய இந்தப் பிறப்பு இறைவனால் எமக்குத் தரப்பட்டது. இவ்வுலகில் ஓரறிவுடைய புல்பூண்டு முதல் ஆறறிவு படைத்த மனிதர் வரை எண்ணில்லா உயிரினங்கள் வாழ்கின்றன. இவற்றில் மேலான பிறப்பு மனிதப் பிறப்புத்தான். மற்றைய பிறப்புக்களுக்கு இல்லாத மனம் எனும் பகுத்தறிவு ஆகிய ஆறாவது அறிவு மனிதனுக்குத்தான் உண்டு.

ஏனைய உயிரினங்கள் உணவு தேடுவதும் உண்பதும் உறங்குவதும் இனப்பெருக்கம் செய்வதுமே வாழ்வாகக் கொண்டுள்ளன. மனிதன்தான் நான் ஏன் பிறந்தேன். இந்த வாழ்வின் பயன் என்ன, எப்படி வாழ வேண்டும், இந்த வாழ்வை எனக்குத் தந்தவர் யார் என்றெல்லாம் சிந்திக்கின்ற திறன் உள்ளவனாயிருக்கின்றான். என்னைப் படைத்து வாழ வைத்த அந்த இறைவனுக்கு நன்றியுடையவனாய் இருக்க வேண்டும் என்ற எண்ணம் மனிதனுக்குத்தான் உண்டு.

இந்த உண்மையை சைவசமய சாத்திரங்கள் தெரிவிக்கின்றன. சிவஞான சித்தியார் எனும் நூலில்

**மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம்வாக்காயம்**
**ஆனிடத்தைந்துமாடும் அரண்பணிக் காகவன்றோ**
**வானிடத்தவரும் மண்ணில் வந்தரன் தனை அர்ச்சிப்பர்**
**ஊனெடுத் துழலும் மாந்தர் ஒன்றை யுமறியார் தாமே.**

என்று கூறப்பட்டுள்ளது. இறைவன் மனிதப் பிறவியைத் தந்தது மனம், வாக்குக், காயம் ஆகிய திரிகரணங்களாலும் இறைவனுக்குத் தொண்டு செய்வதற்கே ஆகும். தேவலோகத்தில் உள்ள தேவர்கள் கூடப் பூமிக்கு வந்து சிவனை வழிபாடு செய்கின்றார்கள். வழிபாட்டுக்குரிய உடல் உறுப்புக்களையுடைய மனிதப் பிறவியைப் பெற்ற இந்த மனிதர்கள் இதை உணராமல் வீணே ஏதேதோ செய்து விலங்குகள் போல உழல்கின்றார்களே என்று சிந்திக்க வைக்கின்றார்.

மனிதனுக்குத் தலை, கண், காது, மூக்கு வாய், கைகள், உடல், நெஞ்சு, கால்கள் எனும் உறுப்புக்களால் என்ன பயன் என்று சிந்திக்க வேண்டாமா என வினவுகின்றார்.

இவ்வுறுப்புக்களால் என்ன பயன் என்பதைச் சிந்தித்து வாழ்ந்து நமக்கும் வாழ வழிகாட்டுகிறார்கள் அருளாளர்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் இவ்வுறுப்புக்கள் ஒவ்வொன்றினையும் கடவுள் வழிபாட்டுக்கு எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைச் சிந்தித்து அவ்வவ்வுறுப்புக்களுக்குக் கட்டளை இடுதல் போலத் திருவங்கமாலை எனும் ஒரு பதிகம் பாடித் தந்துள்ளார். அது நமக்கு நல்வழி காட்டியாய் அமைகிறது.

**தலையே நீவணங்காய் தலைமாலை தலைக்கணிந்து தலையாலே**
**பலிதேரும் தலைவனைத் தலையே நீவணங்காய்**

என்றும்

**கண்காள் காண்மின்களோ கடல் நஞ்சுண்ட கண்டன்தனை**
**எண்தோள் வீசி நின்றாடும் பிரான்தன்னை கண்காள் காண்மின்களோ**

என்றும்

**செவிகாள் கேண்மின்களோ சிவன் எம்இறை செம்பவள**
**எரிபோல் மேனிப் பிரான்தினம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ**

என்றும்

மூக்கே நீமுரலாய் முதுகாட்டுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீ முரலாய்

என்றும்

நெஞ்சே நீநினையாய் நிமிர்புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய்

என்றும்

கைகாள் கூப்பித் தொழீர் கடிமாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்தபரமனைக் கைகாள் கூப்பித்தொழீர்

என்றும்

ஆக்கையால் பயனென் அரன் கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்வாக்கையால் பயனென்

என்றும்

கால்களால் பயன்என் கறைக்கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயனென்

என்றும்

கேட்பது போலக் கட்டளையிடுகின்றார். தலையால் வணங்கிக், கண்களால் அவனைக் கண்டு, காதுகளால் அவன்புகழ் கேட்டு, மூக்கால் முரன்று, வாயால் வாழ்த்தி, நெஞ்சால் நினைந்து, கைகளால் கூப்பித் தொழுது, ஆக்கையால் வீழ்ந்து வணங்கி, கால்களால் கோயிலை வலம்வந்து வழிபட்டால் - எமது உள்ளத்துள்ளே இறைவனைக் காணலாம் என்பதைத் தான் அவ்விதம் வழிபட்டு “தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித்தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்” என்று கூறி நம்மை வழிப்படுத்துகின்றார். நாமும் அவ்வழி நின்று நம் உறுப்புக்களால் வழிபட்டு உய்தி பெறுவோம்.

# அடியார் நடுவுள் இருக்கும் அருள்

எங்கும் நிறைந்துள்ள இறைவனைத் திருக்கோயிலும் சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளிடத்திலும், சிவனடியார்களிடத்திலும் வழி படலாம் என்பது சைவநெறிமுறையாகும். இதிலே சிவனடியார்களை வழிபடும் வழிபாட்டைச் சங்க வழிபாடு என்பர் பெரியோர். சங்கமம் என்றால் கலத்தல், சங்கமர் என்றால் சிவனுடன் கலந்திருப்போர். சிவனடியார் என்ற சொல்லைப் பிரித்துப் பார்ப்போமானால் சிவன் அடியார் எனும் இரு சொற்கள் இருக்கின்றன. சிவனுடைய அடியை அதாவது திருவடிகளைத் தமது உள்ளத்தில் வைத்து வழிபடுபவர்களே சிவனடியார்கள். அவர்கள் நின்றும், இருந்தும், கிடந்தும் நினை என்றும் சிவன்தாள் இணை என்பதற்கேற்ப எந்நேரமும் சிவனடி மறவாதவர்களாயிருப்பர். ஆதலினாலேதான் சிவனுடன் சங்கமமாய் இருப்போர் சங்கமர் எனப்படுபவர். வெறுமனே திருநீறும் உருத் திராக்கமும் காவியுமாகிய சிவவேடம் மட்டும் உடையோராயிருத்தல் போதாது. புறத்திலே இந்தச் சிவவேடமும் அகத்திலே சிவன் திருவடிகளும் இருத்தல் வேண்டும்.

இது பற்றியே சைவசித்தாந்த மணிமுடியாகத் திகழும் சிவஞானபோதம் "மாலறநேயம் மலிந்தவர் வேடம் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்கின்றது. மாலறநேயம் என்பது குற்றமற்ற அன்பு. அது உள்ளம் நிறைந்த, சிவனடியில் வைக்கும் அன்பு எனப்படும்.

"வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்டமுழுதும் தருவோய் நீ" என்று சிவனை விழிக்கும் மாணிக்கவாசகர் வேண்டும் பரிசொன்று உண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே என்று எதையும் கேளாமல் கேட்கிறார். அவர் கேட்பது ஒன்றேயொன்று அது சிவனடியார் நடுவுள் இருக்கும் வரம்.

சிவபெருமானே உனக்கு நடுவுள் உமாதேவி இருக்கின்றார். உமாதேவியின் நடுவுள் நீ இருக்கின்றாய். நீங்கள் இருவரும் சேர்ந்து எனக்கு நடுவில் என்னுள்ளத்தில் இருக்கிறீர்கள். அப்படியானால் எனக்கும் இருக்க ஒரு இடம் வேண்டாமா? நான் இருக்க ஒருஇடம் தரவேண்டும். பொன்னம்பலத்தில் அம்மை அப்பனாக எழுந்தருளி

இருந்து அடியார்க்கு அருள்பாலிக்கும் பெருமானே எனக்கு இந்த அருளைத் தரவேண்டும் எனக் கேட்கிறார். அந்தத் திருவாசகம்.

**உடையாள் உன்றன் நடுவிருக்கும் - உடையாள் நடுவில் நீயிருத்தி**
**அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால் அடியேன்உன்**
**அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரிவாய் பொன்னம்பலத்தெம்**
**முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.**

இதன்மூலம் அம்மையப்பராகிய சிவனை தம் உள்ளத்தில் வைத்திருப்பவரே சிவனடியார் என்பதையும் அச்சிவனடியார் நடுவில் நாமும் சிவனடியாராய் இருக்கின்ற பேறே சிவப்பேறு என்பதையும் அறிய முடிகிறது. இதனையே தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் என்கின்றார். ஆதலால் நாம் எந்நேரமும் சிவபெருமானுடைய திருவடியிணைகளை மறவாது உள்ளத்தில் வைத்து வணங்கி நற்பேறு பெறுவோம்.

ஞானசம்பந்தப் பெருமான் ஞானப்பாலுண்டு பெற்ற ஞானத்தைச் சேக்கிழார் சுவாமிகள்

**சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்**

எனப்பாடுகிறார். இவ்வித ஞானம் பெற்ற அடியார் நடுவுள் இருக்கும் அருளை இறைவனிடம் பெற்று உய்வோம்.



# தமிழர் பண்பாடும் தைப்பொங்கலும்

தைப்பொங்கல் தமிழர் பண்பாட்டின் உச்சமான நன்றிப் பெருவிழாவாகும். ஒரு இனத்தின் நடத்தைகளே - வாழ்க்கையை நடாத்தும் முறைகளே பண்பாடு எனப்படும். இது முந்திய சந்ததியிலிருந்து அடுத்த சந்ததி பெற்றுக்கொள்ளும் செல்வமாகும்.

நடத்தைகள் எல்லாம் பண்பாடு அல்லது கலாசாரம், அல்லது நாகரிகம் என்று சொல்லப்பட்டாலும் நீர் என்றால் நன்னீரையே குறிப்பது போல நன்னடத்தைகளே பண்பாடு எனப் போற்றப்படும். பண்பட்டதே பண்பாடு ஆகும்.

ஒரு இனத்தை அடையாளப்படுத்துவது அந்த இனத்தின் பண்பாடாகும். நமது நடத்தைகள் அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது. சிறப்பாக நமது பெயர், உடை, உணவு, உறையுள், உறவாடும் முறை, நமது சடங்குகள், விழாக்கள், ஒழுக்க முறைகள் அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது.

தைப்பொங்கல் தமிழரின் விழாக்களில் மிகமுக்கியத்துவம் வாய்ந்தது. நமது பண்பாட்டின் முக்கிய கூறுகள் பலவற்றைத் தைப்பொங்கலில் காணலாம்.

பண்டைத் தமிழர்கள் வானியல், புவியியல் இரண்டையும் நன்கு அறிந்திருந்தனர். அதற்கேற்பத் தமது வாழ்வியலையும் வகுத்து வாழ்ந்தனர்.

### தைப்பொங்கல் நாள்

நாம் வாழும் பூமி தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றது. அதனால் பருவ காலங்கள் தோன்று கின்றன. பருவகாலங்களுக்கேற்ப உயிரினங்களும், மரஞ்செடி கொடி உயிர்களும் வாழ்வு பெறுகின்றன.

நம்முன்னோர் சூரிய வீதியாகிய வான வட்டத்தைப் பன்னிரண்டு இராசிகளாக வகுத்தனர். ஒவ்வொரு இராசியிலும் சூரியன் வலம் வரும் காலத்தை இராசிப்படி பன்னிரண்டு மாதங்களாக வகுத்தனர்.

தைப்பொங்கல் சூரியன் மகரராசிக்கு வருகின்ற தை மாதம் முதல் நாளாகக் கொள்ளப்படுகின்றது. இதற்குக் காரணம் வானவீதியில்

சூரியன் ஒரு வருடத்தில் ஆறுமாத காலம் வடக்குப் பக்கம் சரிந்தும் ஆடி முதல் மார்கழி வரை ஆறு மாதம் தெற்குப் பக்கம் சரிந்தும் வலம் வரும். இதிலே வடக்கே சரிந்து வரும் கால ஆரம்பம் மகரராசியாகிய தை மாதம் முதல் நாள் ஆகும். அந்த நாளே தைப்பொங்கல் நாள்.

தை முதல் நாளில் முற்றத்தில் மங்கலமான முறையில் பொங்கல் இட்டுப் படைத்தும் சூரியனுக்கு நன்றி செலுத்தப்படுகின்றது. பூமிக்கு வெப்பமும் ஒளியும் தந்து மழை தந்து அதன்மூலம் விளைவு தந்து நம்மை வாழவைக்கும் சூரியன் நன்றி கூரப்படுகின்றான். சூரியன் உதவியால் வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து வந்து அந்த அரிசியால் பொங்கலிட்டுச் சூரியனுக்குப் படைத்து வணங்கி நன்றி செலுத்துதல் முதன்மையானது. வள்ளுவப் பெருமான் தன் அறநூலில் செய்ந்நன்றி அறிதல் என ஒரு அதிகாரத்தையே வைத்துள்ளார். அதனால் சூரியனுக்கு நன்றி செலுத்தும் விழாவாகவே தைப்பொங்கல் அமைகின்றது. மனித நாகரிகத்தின் உச்சம் நன்றி செலுத்துதல் ஆகும். மறுநாள் பட்டிப் பொங்கல் பொங்கப்படுகின்றது. உழவனின் தொழிலுக்கு உபகாரியாயிருக்கும் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் பொங்கல் இது. எருதுகள் வயல் உழுதும், வண்டி இழுத்தும் உதவ, பசுக்கள் பால் தந்து உதவ, எருதுகள், பசுக்கள், கன்றுகள் எல்லாமே எருதந்து வயல் விளைக்க உதவுகின்றன. அதேவேளை நாம் கழித்துவிடும் புல்லையும், வைக்கோலையும் தவிட்டையும் கழுநீரையும் உண்டு தம் பயனை முழுமையாக எமக்குத் தரும் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் பொங்கல் பண்பாட்டின் உச்சம் அல்லவா.

தைப்பொங்கலில் உடை உறையுள், உணவு, உபசரிப்பு, உறவாடல், விழாச் செய்தல் முதலான நமது பண்பாட்டுக் கோலங்கள் அத்தனையும் காணமுடிகிறது.

பொங்கிய புற்கையைப் படைத்து நன்றி செலுத்தி வணங்கிய பின் அதனை உற்றார் உறவினர், நண்பர்கள் ஆதரவற்றோர் அனைவர்க்கும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாடும் பரிமளிக்கிறது அல்லவா.

ஆகவே தைப்பொங்கல் விழா தமிழரின் நன்றித்திருநாள் விழா. பண்பாட்டின் உச்சமான விழா என்பதை நினைவோம். வானியலில், புவியியலில், வாழ்வியலில் உயர்ந்து நிற்கும் தமிழரின் பண்பாட்டின் சின்னம் இதுவெனக் கொள்வோம்.

★★★

# அன்னையும் பிதாவும்

என்னை என் அன்னை பத்துமாதம் தன் வயிற்றினுள் சுமந்து வளர்த்தாள். அப்போது, தான் உண்ணும் உணவை எனக்குத் தேவையான சத்தாக்கித் தொப்பூழ்க் கொடி ஊடாக ஊட்டினாள்.

நான் பிறக்கும் போது நிர்வாணமாய் அழுதுகொண்டுதான் பிறந்தேன். என்னைப் பெற்றதாய் பெற்ற நோவையும் மறந்து என்னைத் தூக்கித் துடைத்து அணைத்துத் தன் அமுதப்பாலை ஊட்டி என் அழுகையை மாற்றிச் சிரித்தாள்.

எனக்குச் சின்னச் சட்டையும் போட்டுப் பிதாவின் கையில் கொடுத்தாள். அவர் ஒரு பூவைத் தூக்குவது போல என்னை வாங்கிப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தார். நான் முதலில் அன்னையைத்தான் கண்டேன். பின் அன்னை மூலமாகப் பிதாவையும் கண்டேன். அப்பா வாங்கிக் கொண்டு வந்த சட்டையும், சோப்பும், பவுடரும் எனக்குப் போட்டு அழகு பார்த்து மகிழ்ந்தார்கள்.

எங்கள் செல்வமே குல விளக்கே என்று கொஞ்சிக் கொஞ்சி மகிழ்வார்கள். நான் அழுதால் ஏன் அழுகிறேன் என்பது என் அன்னைக்குத் தெரியும். பசியில் அழுதால் பால் ஊட்டுவாள், நித்திரைக்கு அழுதால்

**கண்ணே கண்மணியே கண்உறங்கு**
**பூப்போல வந்த பொன்மணியே கண்ணுறங்கு**
**எங்கள் குலம் விளங்கவந்த இனியவரே கண்ணுறங்கு**
**தவமிருந்து நாம் பெற்ற தவமணியே கண்ணுறங்கு**

என்று தாலாட்டுப் பாடித் தூங்க வைப்பாள்.

ஏதாவது வருத்தத்தில் அழுதால் பாட்டியைக் கேட்டு கைமருந்து தந்து உறங்க வைப்பாள்.

சில வேளைகளில் என்நோய்க்குரிய மருந்தை அன்னை, தானே அருந்தித் தன் பால் மூலம் ஊட்டி நோயை மாற்றுவாள்.

நான் பிறந்த 31ஆம் நாள் துடக்குக் கழித்து எங்கள் உறவினர் எல்லார்க்கும் விருந்து கொடுத்து மகிழ்ந்தார்கள். 41ஆம் நாள் என்னைக்

குலதெய்வம் கோயிலுக்குக் கொண்டு போய் எனக்காகத் தாங்கள் கும்பிட்டார்கள். எனக்குத் தெய்வத்தைக் காட்டித் தெய்வத்துக்கும் என்னைக் காட்டினார்கள். நான் முதல் கண்ட தெய்வம் என் அன்னை. அன்னை காட்டிய தெய்வம் பிதா. அன்னையும் பிதாவும் காட்டிய தெய்வம் எங்கள் குலதெய்வம். அதனால் அன்னையும் பிதாவும் தான் எனக்கு முன்னறி தெய்வங்கள் ஆவார்கள்.

ஒவ்வொரு நாளும் எனக்குக் குளிப்பாட்டிப், புதுப்புது சட்டைகள் போட்டு ஒவ்வொரு நேரமும் புதுப்புது உணவு ஊட்டி மகிழ்வார்கள். தொட்டிலில் போட்டுத் தாலாட்டி மகிழ்வார்கள். ஊஞ்சல் கட்டி அதில் வைத்துப் பாடி ஆட்டி மகிழ்வார்கள்.

ஆறு மாத வயது வந்தவுடன் என்னைக் குலதெய்வம் கோயிலுக்குக் கொண்டு போய் பால்சோறு ஊட்டினார்கள். மூன்று வயது வந்தவுடன் விஜயதசமியில் எனக்கு ஏடு தொடக்கிப் படிக்க வைத்தார்கள்.

பாலர் பாடசாலையில் சேர்ந்து அழகான வண்ண வண்ணப் படங்கள் உள்ள புத்தகங்களும், புதுப் புத்தகப் பையும் வாங்கித் தந்தார்கள். என்னைப் போன்ற சின்னச்சின்ன பிள்ளைகள் சேர்ந்து பாடிப்பாடி விளையாடி விளையாடிப் படித்து மகிழ்ந்தோம். எனது அன்னை புத்தகப் பையுடன் குடிக்க அழகிய போத்தலில் நீரும் சாப்பாட்டுப் பெட்டியில் சாப்பாடும் தந்து விடுவாள். பிதா என்னைக் கொண்டுபோய் படிக்க விட்டுப் படித்து முடிந்ததும் வெய்யில் படாமல் குடை நிழலில் தூக்கிக் கொண்டு வருவார்.

எனக்கு ஆறு வயது வந்ததும் பாடசாலையில் சேர்த்தார்கள். வெள்ளை வெளேரென்ற சீருடை, சப்பாத்து, கழுத்துப்பட்டி, தலையிலே தொப்பி எல்லாம் போட்டு மகிழ்ந்தார்கள். நானும் கண்ணாடியில் என்னைப் பார்த்து மகிழ்ந்தேன்.

நன்றாகப் படிக்க வேண்டும். பாடசாலைக்கும் பெற்றார்க்கும் பெருமை தேடிக் கொடுக்க வேண்டும் என்பது எனது ஆசை. எனக்கு அவர்கள் செய்த உதவிக்குப் பதிலாக அவர்களுக்கு நான் உதவி செய்ய வேண்டும். என்னை ஆளாக்கிய பாடசாலைக்கும் நான் உதவ வேண்டும். எல்லாம் வல்ல தெய்வம் எனக்கு வழிகாட்ட வேண்டும் என்று வணங்கி நன்றி கூறுகின்றேன்.

★★★

# அன்பே சிவம்

அன்பே சிவம் என்பது திருமூலர் சுவாமிகளின் திருமந்திர வாக்கு. இதனை நாம் அனைவரும் சர்வ சாதாரணமாகச் சொல்வதுண்டு. அன்பெனப்படுவது தொடர்புடையாரிடத்து உண்டாகும் மன நெகிழ்வு எனக் கூறுவார் பரிமேல் அழகர்.

இதனைப் பற்று, பாசம், விருப்பு என வேறு பல சொற்களாலும் சிலர் சொல்வர். இவையெல்லாம் அன்பு எனும் சொல்லுக்கு நிகராகமாட்டா. அன்பினுடைய முக்கியத்துவம் பற்றி உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் பெருமான் அன்புடைமை என்று ஒரு அதிகாரத்தையே வகுத்து பத்துக் குறள்களில் அன்பு பற்றிச் சொல்லியுள்ளார்.

நாம் அன்பு பற்றிப் புரிந்து கொள்வதற்கு அன்புடைமையில் சொல்லப்பட்ட ஒரு குறளே இங்கு போதுமானதாகும். நாம் யாருக்காக அன்பு செலுத்துகின்றோம் என்றால் எங்களுக்காகவே. நாம் மகிழ்ச்சி அடைவதற்காகவே மற்றவர்மேல் அன்பு செலுத்துகின்றோம். பிள்ளை மீது அன்பு செலுத்துவோம். பிள்ளையை மகிழ்வித்து நாம் மகிழ்வதற்காக கணவன் மனைவி மேல் செலுத்தப்படும் அன்பும் அவர்களை மகிழ்வித்துத் தாமும் மகிழ்வதற்காகவே. எது உண்மையான அன்பு என்பதை வள்ளுவர் சொல்கிறார்.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

என்பது குறள்.

அன்பிலாதவர்கள் அன்புடையவர் போலக் காட்டிக்கொண்டு எல்லாவற்றையும் தமக்காகத் தாம் மகிழ்வதற்காகவே செய்வர். இவர்கள் அன்பெனச் சொல்வது உண்மை அன்பு அல்ல. அது உண்மை அன்பென்றால் தம்முடைய உடலையே கொடுக்க வேண்டும். அவரே உண்மை அன்பு உடையவர் என்பதற்கு அடையாளமாகும். உண்மை அன்பைத்தான் எமது அறநூல்கள் தலை அன்பு என்று கூறுகின்றன.

திருமூலர் சுவாமிகள் அன்பு பற்றி மிக அழகாகச் சொல்கின்றார்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவதாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே.**

என்பது திருமந்திரம்

உண்மை அறிவில்லாதவர்கள் அன்பும் சிவமும் வேறுவேறு பொருள் என்பார்கள். அன்புதான் சிவம் என்பதை அவர்கள் அறிவதில்லை. அன்புதான் சிவம் என்பதை அவர்கள் அறிவார்களாயின் அன்பே சிவமாய் தம்மை மறந்து சிவ கதியே கதி என்று லயித்திருப்பார்கள்.

பெருஞ் செல்வராயிருந்த பட்டினத்தார் செல்வத்தின் நிலையாமையை உணர்ந்து தன் செல்வம் முழுவதையும் துறந்து துறவியானார். அவர் துறவியாகப் போகும்போது ஆக பிச்சை எடுப்பதற்கு ஒரு ஓட்டுத்துண்டும், மானத்தை மறைப்பதற்காக ஒரு கந்தைத் துண்டுமே கொண்டு போகிறார். அதை அவரே "ஓடுண்டு, கந்தையுண்டு உள்ளே எழுத்தைந்தும் ஓதவுண்டு, பீடுண்ட கண்டன் அடியார் நமக்குத் துணையும் உண்டு" என்கிறார்.

சிவகதியே கதியெனப் போன அவர் சிவன்மீது தலையாய அன்பு பூண்டு சிவகதி பெற்றவர்களை நினைத்துப் பார்க்கின்றார்.

**வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லேன்**
**மாது சொன்ன**
**சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன்**
**தொண்டு செய்து**
**நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லேன்**
**நான் இனிச் சென்று**
**ஆளாவது எப்படியோ காளத்தி அப்பனுக்கே.**

சிவபெருமான் வைரவவேடந் தாங்கி வந்து பிள்ளைக் கறி கேட்டபோது இல்லையென்னாது தாய் பிடிக்கத் தந்தை அரிந்து சமைத்துக் கொடுத்தார்களே சிறுத்தொண்டரும் துணைவியும்.

"திருநீலகண்டம் ஆணை எம்மைத் தீண்டாதீர்" என்று மனைவி சிவன்மீது சத்தியம் செய்ததற்காக இளமைக்காலம் முழுவதும் மனைவியைத் தீண்டாது வாழ்ந்தாரே திருநீலகண்டர்.

சிவபெருமானின் கண்ணிலிருந்து இரத்தம் வடிந்ததைக் கண்டு தன் கண்ணையே தோண்டி அப்பினாரே கண்ணப்பர். இவர்கள் எங்கே, நான் எங்கே.

பிறர்க்குத் தம்மையே கொடுத்த இவர்களல்லவா அன்புடையார். இவர்கள் அன்பே சிவம் அல்லவா என்கிறார். "அன்புடையார் என்பும் உடையார் பிறர்க்கு" எனும் வள்ளுவர் வாக்கிலிருந்து உண்மை அன்பைப் புரிந்து கொள்வோம்.



# குரு லிங்க சங்கம வழிபாடு

குரு என்றால் பாசத்தை நீக்குபவர். அஞ்ஞானம் என்னும் அறியாமை இருளை அகற்றுபவர் என்பது பொருள். தீட்சை அளித்த வரும், கல்வி போதிப்பவரும் குரு ஆவார். சைவநெறி தழைத்தோங்கத் தேவார திருவாசகங்களையும் மெய்கண்ட சாத்திரங்களையும் அருளிய சமய குரவர்களும், சந்தான குரவர்களும் போற்றி வழிபடுவதற்குரிய குருமார்களே. வாழ்க்கையில் பரிபக்குவம் ஏற்பட்டதும் பிறவியை ஒழிக்க ஞானாசாரியராக வருபவர் ஞானகுரு எனப்படுவார்.

யாம் அறியாமல் எங்கள் உள்நின்று நடாத்தும் திருவருட் சக்தியே எமது பக்குவ நிலையில் நாம் கண்டுணர்ந்து வழிபடவும் எம்மை வழிநடத்தவும் மானிடவடிவில் குருவாக வந்து எம்மை ஆட்கொள் கின்றது. சகலர் ஆகிய எம்மனோர்க்கு இறைவன் நேராக வராமல் குருவை அதிட்டித்து நின்று அருள் செய்கின்றான். எனவே குருவே எமது கண்கண்ட தெய்வம். குருவின் அருளாலேயே இறைவனை அடைய முடியும். சூரியகாந்தக் கல்லை (குவிவுவில்லை)ச் சூரியனுக்கு நேரே பிடித்தால் கீழ் உள்ள பஞ்சில் நெருப்பு மூளும். அந்த நெருப்பு சூரிய காந்தக் கல் இல்லாமல் சூரியனில் இருந்து நேராக வருவதில்லை. அதேபோலத்தான் சிவபெருமானின் திருவருளும் குருவினூடாகத்தான் கிடைக்கும்.

எனவே ஞானகுருவே எமது கண்கண்ட தெய்வம். குருவின் அருளாலேயே இறைவனை அடையமுடியும். நாம் குருபூசை செய்து வழிபடுவதும் இதற்காகவேயாகும்.

**இலிங்க வழிபாடு**

சிவலிங்கம் சிவபெருமானின் அருவுருவத் திருமேனி. அது ஞானசோதி வடிவானது. பீடம் சக்தியையும் இலிங்கம் சிவத்தையும் குறிப்பது. உலகில் மிக அநாதியானதும் உலகெங்கும் வியாபித் திருந்ததும் சிவலிங்க வழிபாடேயாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கத்தில் உள்ளவர்களும் திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் சிவலிங்கத்தை வழிபடுவர். இச்சிவலிங்கமே அவரவர் பக்குவத்திற்கேற்பப் பல்வேறு மூர்த்திகளாகக் காட்சியளிப்பர்.

சரியையாளர் இறைவனது உருவத் திருமேனிகளை சிவனெனக் கொண்டு வழிபடுவர். கிரியையாளர் அருவமாகிய பரம்பொருளே இலிங்கம் முதலிய திருவுருக்கொண்டு அருளினர் எனத் தெளிந்து மந்திரத்தினால் சிவலிங்கத்தில் சிவனை எழுந்தருளச் செய்து வழிபடுவர்.

யோகிகள் தம் உள்ளத்தில் நிறைந்திருக்கும் இறைவனே சிவலிங்கத் திருமேனியில் இருந்து பூசைகொண்டருள்வர் எனத் தெளிந்து வழிபடுவர். ஞானிகள் அன்பினால் அறிவு வடிவான சிவத்தை வழிபடுவர்.

## சங்கம வழிபாடு

சிவனடியார் திருக்கூட்டம் சங்கமம் எனப்படும். சிவபெருமானிடம் மெய்யன்பு பூண்டு ஒழுகுவோர் சிவனடியார் ஆவர். அவர்கள் சிவனை நினைத்தாலும் அவரைப்பற்றிக் கேட்டாலும் அவர்களது திருமேனியைக் கண்டாலும் தம்வசம் இழப்பர். சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்தும், அவரது புகழ் பாடியும், திருவைந்தெழுத்தை ஓதியும் இன்புறுவர். சிவபெருமானை நினைக்கச் செய்யும் சிவசின்னங்களை அணிந்த திருமேனியுடையவராயிருப்பர்.

அடியார்க்குரிய பாவனை, செயல்வேடம் இவற்றை உடைய எவரும் சிவமாகக் கருதி வழிபடத்தக்கவராவர். சிவனடியார்களைக் காணச் செல்லுங்கால் கையில் ஏதேனும் கொண்டு செல்லுதலும் அதனை அவர்முன் வைத்து வணங்கலும், அவர் அனுமதியுடன் இருந்து அவர் கூறும் நல்லுரைகளைக் கேட்டலும் முறையாகும்.

நமது இல்லத்துக்கு வரும் சிவனடியார்களை எதிர்கொண்டு வரவேற்று இன்சொல் கூறி ஆசனத்திருத்தி உபசரித்து வணங்கி அமுதளித்து அவரை வழியனுப்புதல் வேண்டும்.

ஆகவே நாம் குருவினிடத்திலும், சிவலிங்கத்தின் இடத்திலும் சிவனடியார்கள் இடத்திலும் சிவனையே கண்டு வழிபட்டு உய்தி பெறவேண்டும்.

**"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"**

★★★

# சம்பந்தரும் மெய்கண்டாரும்

இறைவனுடைய படைப்பிலே ஒவ்வோர் உயிரினத்துக்கும் வாழும் காலம் வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் மனிதனுக்குத் தான் வாழும் காலம், வயது அதிகம். "மனிதர்க்கு வயது நூறல்லதில்லை" என்பது பழமொழி. ஒழுங்காக வாழ்ந்தால் மனிதர் நூறுவயது வரை வாழலாம்.

வயது என்பது உடலுக்கு உரியதாகும். உடலை இயக்குகின்ற உயிருக்கு வயது இல்லை. உயிர் அநாதியானது ஆதலால் உயிரின் வயதைக் கணக்கிட முடியாது. அறிவுக்கு வயது உண்டு. உடல் வளர்வது போல அறிவும் வளரவேண்டும். உயிர் எடுக்கும் பிறவிகள் தோறும் அறிவு வளர்ந்து கொண்டே போகும். போகவேண்டும்.

வாழ்வின்பயன் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதல் ஆகும். இதனை நாவலர் பெருமான் "இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது. நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என அறுதியிட்டுச் சொல்லியுள்ளார். சிவஞானம் பெற்றவரே முத்தி பெற்றவராவர்.

சிவஞானம் பெறுவதற்கு வயதெல்லை இல்லை. மிகச்சிறிறய வயதில் சிவஞானம் பெற்ற பலரைப் பார்க்கலாம். மெய்கண்டதேவர் இரண்டு வயதில் ஞானம் பெற்றார். திருஞானசம்பந்தர் மூன்று வயதில் ஞானம் பெற்றார். குமரகுருபரர் ஐந்து வயதில் ஞானம் பெற்றார். சங்கரர் ஏழு வயதில் ஞானம் பெற்றார். இவ்விதம் பலரைப் பார்க்கலாம்.

இவர்களில் மிகக் குறைந்த வயதாகிய இரண்டு வயதில் ஞானம் பெற்ற மெய்கண்டாருக்கும் மூன்று வயதில் ஞானம் பெற்ற சம்பந்தருக்கும் உள்ள தொடர்பை அறிதல் உவப்பான செய்தியாகும். திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மெய்கண்டார் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

சம்பந்தர் சைவத்திருமுறை இலக்கியமாகிய தேவாரப் பதிகங்களைப் பாடியவர். மெய்கண்டார் திருமுறை இலக்கியத்துக்கு இலக்கணமாயமைந்த மெய்கண்ட சாஸ்திரமாகிய சிவஞானபோதம் எனும் சைவ இலக்கணத்தைப் பாடியவர்.

சம்பந்தர் தேவாரம் பாடிச் சைவத் திருமுறைகளைத் தொடக்கி வைத்தார். மெய்கண்டார் சிவஞானபோதம் பாடி மெய்கண்ட சாத்திரங் களைத் தொடக்கி வைத்தார்.

இவர்கள் இருவரும் இட்ட ஞானவித்து முளைத்து வளர்ந்து பரந்து பன்னிரு சைவத்திருமுறைகளாகவும், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களாகவும் மலர்ந்தன. சைவசமயத்தவரின் இரு கண்களாகத் தோத்திரமும் சாத்திரமும் விளங்குகின்றன. சிறப்பாகத் தமிழர்களாகிய எமக்குத் தமிழில் எழுந்த முதல் நூல்களாக இவை விளங்குகின்றன.

இன்னுமோர் இரகசியம் இதனுள் உள்ளது. திருமுறைகளின் சாரமாயுள்ளது மெய்கண்ட சாத்திரம். சைவத்திருமுறைகளைத் தொடக்கி வைத்தவராகிய திருஞானசம்பந்தரின் ஒரு தேவாரத்தால் வந்தவர் மெய்கண்டார்.

திருஞானசம்பந்தரின் தந்தையார் சிவபாதஇருதயர் சிவனுடைய பாதங்களை எந்நேரமும் தன் இருதயத்தில் வைத்துத் தொழுது தனக்கொரு சற்புத்திரனைத் தரவேண்டும் எனத் தவம் கிடந்து சம்பந்தரைப் பெற்றார். அதேபோல அச்சுதகளப்பாளர் என்பவர் தவமிருந்து மெய்கண்டாரைப் பெற்றார். இங்கேதான் அந்த இரகசியம் இருக்கிறது.

நீண்டகாலமாக அச்சுதகளப்பாருக்குப் பிள்ளை இல்லாததால் தன் குலகுருவாகிய சகலாகமபண்டிதரின் ஏற்பாட்டின்படி திருமுறை களுக்குப் பூசை செய்து வணங்கி அதில் ஒரு ஏட்டினை எடுத்துப் பார்த்தார்கள். அது சம்பந்தரின் தேவாரம் எழுதிய ஏடு.

**பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ளம் நினை**
**வாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டாவொன்றும்**
**வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்**
**தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.**

என இருந்தது. அதில் திருவெண்காட்டிலுள்ள முக்குள நீரில் தீர்த்தமாடி நோன்பிருந்தால் பிள்ளைச் செல்வம் கிடைக்கும் என்றிருந்தது. அதன்படி நோன்பிருந்தனர். மெய்கண்டார் பிறந்தார்.

சம்பந்தரின் தேவார ஏடு மெய்கண்டாரைத் தந்தது. சம்பந்தர் தொடக்கிவைத்த சைவத் திருமுறையின் சாரமாகிய மெய்கண்ட சாத்திரத்தை மெய்கண்டார் தந்தார்.

பெற்றார் தவமிருந்து பெற்ற ஞானக் குழந்தைகள் இருவரும் சைவசமயத்துக்கு இருஞானக் கண்களானார்கள்.

★★★

# வினையும் பயனும்

நாம் செய்யும் எல்லாச் செயல்களும் நல்வினை தீவினை எனும் இரு பிரிவுள் அடங்கும். நன்மைதரும் வினைகள் நல்வினை என்றும், தீமை தரும் வினைகள் தீவினை என்றும் ஆகின்றன. நல்வினைகள் புண்ணியமாகி இன்பத்தைத் தருகின்றன. தீவினைகள் பாவமாகித் துன்பத்தைத் தருகின்றன. அவரவர் செய்யும் வினையின் பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும். "தாம் தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்" என்பது பழமொழி.

இதனை ஔவையார் "புண்ணியமாம், பாவம் போம். போன நாள் செய்த அவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்" என்று இலகு தமிழில் எளிமையாகச் சொல்லி வைத்துள்ளார். நாம் கடந்த காலத்தில் செய்த வினைகளே நம்வாழ்வுக்கு முதலீடு ஆகும். ஆதலால் இன்பத்தை வேண்டுவோர் செய்ய வேண்டியது புண்ணியம். செய்யக் கூடாதது பாவம்.

ஒவ்வொருவருடைய மனமும் இன்பத்தையே விரும்பும். துன்பத்தை விரும்புபவர் யாருமில்லை. தீதும் நன்றும் பிறர்தர வாரா. எமக்கு வரும் தீமையோ நன்மையோ மற்றவரால் தரப்படுவன அல்ல. அவற்றை நாமே முன்செய்த வினைப்பயனாகத் தேடிக் கொள்கின்றோம். மற்றவர்கள் அதற்குக் கருவியே அன்றிக் காரணர்கள் அல்ல. நாமே காரணர்கள் ஆவோம் என்பது உறுதி.

நல்வினையிலும் இருவிதமானவை உள. உயிர்களுக்குச் செய்கிற நல்வினைகள் பசு நல்வினை எனப்படும். சிவனுக்குச் செய்கின்ற நல்வினை சிவ நல்வினை எனப்படும். பசு நல்வினையால் இன்பமே விளைந்தாலும் அது பிறவிக்கும் காரணமாகி மீண்டும் மீண்டும் பிறப்பதற்கு ஏதுவாகும். நல்வினை பொன்விலங்கு, தீவினை இரும்பு விலங்கு. இரண்டும் விலங்குதான். பற்றற்றுச் செய்யப்படும் சிவ நல்வினை (சிவபுண்ணியம்) ஒன்றே பிறவியினை நீக்கி இறை இன்பமாகிய வீடு பேற்றை (முத்தியைத்) தரும். அது நான் செய்கிறேன் என்ற முனைப்பை விட்டுச் சிவன் செயல் என்றே செய்யப்பட வேண்டும்.

அவ்விதம் செய்யப்படும் சிவபுண்ணியம் செய்யப்படும் விதம் நோக்கி வல்வினை எனவும், மெல்வினை எனவும் கொள்ளப்படும். இவை தன் முனைப்பு அற்றுச் சிவன் செயலாகவே செய்யப்படுவதால் "சிவதன்மம்" எனப்படும்.

மெல்வினையே என்ன வியனுலகில் ஆற்றரிய
வல்வினையே என்ன வருமிரண்டும் - சொல்லிய
சிவதன்மம் ஆயவற்றில் சென்றதிலே செய்வாய்
பவகன்மம் நீங்கும்படி

எனத் திருக்களிற்றுப்படியார் சொல்கிறது.

சிவதன்மம் எனப்படுவது சிவப்பரம்பொருளை நோக்கிச் செய்யும் அறமாகும். சிவப்பரம் பொருளை எளிய மென்மையான செயல்களைச் செய்தும் அடையலாம். அன்றிச் செயற்கரிய வன்மையான வினைகளைச் செய்தும் அடையலாம். இவற்றுள் எந்த அறமும் (வினையும்) ஏற்றதே. எனினும் அவ்வாறு மேற்கொள்ளப் பெறும் அறம் தன்முனைப்பு இன்றியும் உலகியல் பயன்கருதாமலும் செய்யப்படவேண்டும்.

இக்காலத்தில் நடைபெறும் வழிபாடுகள் எல்லாம் இவ்வுலக இன்பம் கருதி, காமிய வழிபாடுகளாகவும், காமிய பூசைகளாகவும் நடை பெறுவதைக் காண்கின்றோம். நான் உனக்கு இன்ன பூசை வழிபாடு செய்வேன் நீ எனக்கு இன்ன பலன் தருதல் வேண்டும் எனும் வர்த்தக நோக்கில் செய்யப்படும் வழிபாட்டால் இறைவனின் அருளைப் பெற முடியாது. மனதுக்குச் சாந்தி மட்டும் கிடைக்கும். வழிபாட்டின் முழுமையான பயனைப் பெற வேண்டுமானால் அவ்வழிபாடு சிவதன்ம மாகச் செய்யப்பட வேண்டும்.

கோயில் தொண்டுகள் செய்தல், அடியவரை வழிபடுதல், மாகேசுர பூசையாகிய அடியவர்க்கு அமுது அளித்தல், நோன்பிருத்தல், திருவைந்தெழுத்தைத், திருமுறைகளை ஓதுதல் முதலாயின மெல் வினைகள் ஆகும். நமது நாயன்மார்களில் பலர் இவ்வித மெல்வினை களைச் செய்து முத்தியடைந்திருக்கிறார்கள். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியோர் செய்தவை மெல்வினைகளே.

கண்ணப்பர் தன் கண்ணைத் தோண்டிச் சிவனுக்கு அப்பினார், சிறுத்தொண்டர் தன் பிள்ளையையே கறியாக்கிச் சிவனடியார்க்கு அளித்தார். சண்டேசுரர் தான் செய்த சிவபூசைக்கு இடையூறு செய்த தந்தையின் காலையே வெட்டினார். இவை எல்லாம் வல்வினைகள் ஆகும். சிவன்மீது கொண்ட பக்தியின் காரணமாகவே அவ்விதம் செய்தனர். எமது பார்வைக்குத்தான் அவை துன்பமாகத் தெரிந்தாலும் அவர்களுக்கு அவை இன்பமாயின. ஆகவே சிவதன்மம் செய்து சிவகதி பெறுவோர்.

☆☆☆

# பஞ்ச பூதத் தலங்கள்

நாம் காணும், இப்பிரபஞ்சத் தோற்றத்திற்கு மூலக் கூறுகளா யுள்ளவை நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்கள் ஆகும். இது மெய்ஞ்ஞானிகளாலும், விஞ்ஞானிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இப்பிரபஞ்சத்துக்கு உட்பட்ட எமது உடலும் பஞ்ச பூதங்களால் ஆனதே.

சிவபெருமான் பஞ்சபூதங்களின் இடமாக நின்று ஆன்மாக்கள் உய்வடைவதற்காக இப்பிரபஞ்சத்தைப் படைத்துக் காத்து, அழித்து, மறைத்து அருளுகின்றார். இவ்வுண்மையைச் சைவத் திருமுறைகள் எல்லாம் எடுத்து இயம்புகின்றன. இதனை மாணிக்கவாசக சுவாமிகள் தனது போற்றித் திருவகவலில்,

**பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**

எனப் போற்றி வணங்குகின்றார்.

தென்நாட்டிலுள்ள சிவாலயங்களிலே பஞ்சபூதத் தலங்கள் என ஐந்து சிவத்தலங்கள் விசேடித்துச் சொல்லப்படுகின்றன.

**நிலம் ஆகிய பிருதுவித்தலம் திருவாரூர்**
**நீர் ஆகிய அப்புத்தலும் திருவானைக்கா**
**தீ ஆகிய தேயுத்தலம் திருவண்ணாமலை**
**வளி ஆகிய வாயுத்தலம் திருக்காளத்தி**
**வெளி ஆகிய ஆகாயத்தலம் சிதம்பரம்**

இத்தலங்களிலே அவ்வப்பூதங்களின் வடிவிலே சிவபெருமான் காட்சி கொடுத்து அருள் புரிகின்றார்.

**திருவாரூர் பிருதுவித்தலம்**

திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயிலில் புற்றிடம் கொண்ட புற்று நிலம் - (மண்) பெருமானாகச் சிவன் காட்சி கொடுக்கின்றார்.

பெருமானைத் திருமூலட்டானேசுவரர், வன்மீகநாதர் புற்றிடங் கொண்டார் எனவும் அழைப்பர். அம்பாள் கமலாம்பிகை, தீர்த்தம், கமலாலயம், ஆறு ஆதாரங்களில் இது மூலாதாரமாய் இருப்பதால் திருமூலட்டானம் எனச் சிறப்பாக அழைக்கப்படுகிறது. பூமாதேவி பூசித்ததால் பூங்கோயில் என வழங்கப்படுகிறது.

"திருவாரூர்த் தேரழகு, திருவாரூர்ப் பிறக்கமுத்தி" என்பன தெய்வீக வாக்குகள். சோழ மண்டலத்தில் உள்ள இத்தலத்திலேதான் சுந்தரர் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டத் தொகை பாடினார்.

**திருவானைக்கா (அப்புத்தலம்)**

சோழநாட்டில் உள்ள திருவானைக்கா பஞ்சபூதத் தலங்களில் அப்பு (நீர்)த்தலமாக விளங்குகின்றது. கருவறையில் சுவாமியின் அடியில் இருந்து நீர் சுரந்து கொண்டே இருக்கிறது.

வெண்ணாவல் மரத்தடியில் (ஜம்பு) சுவாமி எழுந்தருளி இருப்பதால் ஜம்புகேஸ்வரம் எனவும் அழைக்கப்படும். வெள்ளை யானையும் சிலந்தியும் வழிபட்டதலமானதால் ஆனைக்கா எனப் பெயர் பெற்றது. சுவாமி ஜம்புநாதர் அம்பாள் அகிலாண்டேஸ்வரி.

**திருவண்ணாமலை (தேயுத்தலம்)**

தேயு (அக்னி)த் தலமாக விளங்குவது திருவண்ணாமலை. அடிமுடி தேடியபிரம விட்டுணுக்களுக்குச் சிவபெருமான் சோதிப் பிழம் பாகக் காட்சி கொடுத்த தலம். திருக்கார்த்திகை விளக்கீட்டின் போது அச்சோதியை மலைமீது காணலாம். இது ஆறு ஆதாரங்களில் மணிபூரக (தொப்பூழ்)த் தலம்.

இலிங்கோற்பவரின் மூலத்தானம் திருவண்ணாமலை, நடுவில் சிவபெருமான் அவரது முழங்காலுக்குக்கீழ் அருவம், சுற்றிலும் தீப்பிழம்பு திருவடிப்புறம் திருமால் பன்றியுருவில் கீழ் நோக்கியும், திருமுடிப்புறம் பிரமா அன்னப்பட்சி வடிவில் மேல் நோக்கியும் அருகில் தாழம்பூவும் காட்சியளிக்கும் இலிங்கோற்பவராகப் பெருமான் காட்சியளிக்கிறார். பெருமான் அருணாச்சலேஸ்வரர் எனவும் அம்பாள் உண்ணாமுலை அம்மை எனவும் பெயர் பெறுவர்.

**திருக்காளத்தி (வாயுத்தலம்)**

தமிழ்நாட்டின் வடஎல்லையில் ஆந்திர மாநிலத்தில் உள்ள வாயுத்தலம் திருக்காளத்தி. காளாஸ்திரி, காளகத்தி, தென்கயிலாயம் எனவும் அழைக்கப்படும். காளத்திநாதர் சந்நிதியில் ஒரு தீபம் காற்றால் அசைக்கப்படுவது போல எந்நேரமும் அசைந்து எரிந்து கொண்டே யிருக்கும். கண்ணப்ப நாயனார் தன் கண்ணைத் தோண்டி இறைவனுக்கு அப்பிய தலம் பொன்முகலி (சுவர்ணமுகி) ஆற்றின் கரையில் அமைந் துள்ளது.

**சிதம்பரம் (ஆகாயத்தலம்)**

கோயில் எனுத் சிறப்புப் பெற்ற சிதம்பரம் பூலோகத்தின் இதயத்தானமாக இருக்கிறது. இங்கு சிவன் நடராச மூர்த்தியாக எழுந்தருளி ஐந்தொழில் நடனம் புரிகின்றார். எந்நேரமும் நடனம் ஆடுவதால் நடராசர் எனப்படுகின்றார். அம்பாள் சிவகாமி தீர்த்தம் சிவகங்கை சித் அம்பரம் - ஞானவெளி எனப் பொருள்படும். பொன் ஓடு வேயப்பட்டு இருப்பதால் பொன்அம்பலம் எனப்படும். தரிசிப்போர்க்கு முத்தி கொடுக்கும் தலம் இதுவாகும்.



# ஈழநாட்டுப் பஞ்ச ஈஸ்வரங்கள்

ஈழத் திருநாட்டில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பே சைவத் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஈழத்தின் நான்கு திசைகளிலும் அமைந்துள்ள ஈஸ்வரங்களே (சிவாலயங்களே) சான்றாகும். வட திசையில் கீரிமலை நகுலேஸ்வரமும், கீழ்த்திசையில் கோணேஸ் வரமும், தென்திசையில் தொண்டீஸ்வரமும், மேற்குத் திசையில் முனீஸ்வரமும், வடமேற்குத் திசையில் கேதீஸ்வரமும் அமைந்துள்ளன.

பௌத்தசமயம் கி.மு 237ஆம் ஆண்டில் (கி,மு மூன்றாம் நூற்றாண்டில்) இலங்கைக்கு மகிந்ததேரரால் கொண்டுவரப்படுவதற்கு முன்பே இங்கு இப்பஞ்ச ஈஸ்வரங்களும் இருந்துள்ளன. இவற்றின் தொடக்ககாலம் இன்னதென வரலாற்றாய்வாளர்களால் அறிய முடியாத மிகப்பழைய கோயில்கள் இவை.

### திருக்கேதீஸ்வரம்

இலங்கையின் மேற்குப் பாகத்தில் மன்னார் மாவட்டத்தில் கடற்கரையை அடுத்த மாதோட்டம் என்ற பழம் பெரும் துறைமுகப் பட்டினத்தில் பாலாவி எனும் தீர்த்தக்கரையில் திருக்கேதீஸ்வரம் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தராலும், சுந்தரராலும் தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்ற சிறப்புக்குரியது. கேதுவினாற் பூசிக்கப்பட்ட தலம் ஆனதால் கேதீஸ்வரம் எனப் பெயர் பெற்றது.

இயற்கை அனர்த்தத்தால் சிதைவுற்றிருந்த இத்தலம் விஜயனால் புதுப்பிக்கப்பட்டதென்றும் வரலாறு உண்டு. திருக்கேதீஸ் வரத் திருப்பணிச்சபையால் புனருத்தாரணம் செய்யப்பெற்ற இத்தலம் ஈழத்தில் சிவராத்திரி நாளில் பல இலட்சம் பக்தர்கள் கூடி வணங்கும் சிறப்புக்குரியதாகத் திகழ்கிறது.

### திருக்கோணேஸ்வரம்

இது இலங்கையின் வடகிழக்குப் பாகத்திலே திருகோணமலைக் கடற்கரையிலே உள்ள மலை மேல் உள்ளது. முன்னொரு கற்பத்திலே ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் பலப்பரீட்சை ஏற்பட்ட போது வட கயிலையில் இருந்து வாயுவால் பெயர்த்து தென்கடலில் எறியப்பட்ட

சிகரம்தான் இந்தமலை என்றும் வடகயிலையில் போலவே இங்கும் சிவபெருமான் சிவகணங்களோடும் எழுந்தருளியிருந்து அருள் புரிகின்றார் என்றும் தலபுராணம் கூறும். இதன் காரணத்தால் இது தட்சணகயிலாயம் (தென்கயிலாயம்) என வழங்கப்படுகிறது.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பதிகம் பெற்ற சிறப்பும் இதற்குண்டு. முக்கோணமாயிருக்கும் மலைகளாலான இயற்கைத் துறைமுகப்பட்டிமான பெருமையும் உடையது.

வீணைக்கொடியோன் எனப்பட்டவனும் சாமவேத விற்பன்னனு மான இராவணன் வழிபட்ட சிவத்தலம் இதுவாகும். குளக்கோட்டு மன்னனால் கோயில் புதுப்பிக்கப்பட்டது மட்டுமன்றி கோயிலுக்கு ஏராளமான வயல் நிலங்களையும் நிபந்தமாகக் கொடுத்துள்ளான். கோணேசர் கல்வெட்டு என்ற நூலில் இதன் ஆதியந்தமான வரலாறு உளது.

**நகுலேஸ்வரம்**

ஈழநாட்டின் வடக்கே யாழ்ப்பாணத்தின் வடகரையில் அமைந்துள்ள கீரிமலையே நகுலேஸ்வரம் ஆகும். ஆதிகாலத்தில் திருத்தம்பலேஸ்வரம் எனும் பெயருடன் விளங்கியது. இதன் மலைச் சரிவிலிருந்து சுரந்துவரும் புனித தீர்த்தத்தில் நீராடிக் கீரிமுகம் உடைய நகுலமுனிவர் என்பவரின் கீரிமுகம் (நகுலம் - கீரி) மாறப் பெற்றதால் இதற்குக் கீரிமலை- நகுலேஸ்வரம் எனப்பெயர் ஏற்பட்டது. இது புராண இதிகாச காலங்களுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை மிக்கது.

அர்ச்சுனன், நள மகாராசன், மாருதப்புரவீகவல்லி முதலியோர் தீர்த்த யாத்திரை செய்து அருள்பெற்ற பெருமைக்குரியது. தென்திசையில் இருந்து வரும் ஊற்றுநீரும் வடதிசைக் கடல் நீரும் கலத்தலால் சங்கம தீர்த்தமாகி மாறாவினை தீர்க்கும் புனித தீர்த்தமாக விளங்குகிறது.

காசியில் கங்கைக் கரையில் இறந்தவர்களுக்குப் பிதிர்க்கடன் செய்தல் எவ்வளவு சிறப்புடையதோ அதேபோல ஈழத்தில் கீரிமலைச் சங்கம தீர்த்தக் கலையில் செய்தலும் புண்ணியமாக மக்களால்

கைக்கொள்ளப்படுகிறது. ஆடி அமாவாசையில் தீர்த்தமாடிப் பிதிர்க்கடன் செய்தலும் பெரும்பேறாகக் கருதப்படுகின்றது.

**முனீஸ்வரம்**

இத்தலம் ஈழத்தின் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்திலுள்ள சிலாபத்தில் அமைந்துள்ளது. இதனருகே மாயவன் ஆறு எனும் (தெதுறு ஓயா) புனித கங்கை ஓடிக்கொண்டிருக்கிறது. வியாச முனிவர், ஸ்ரீராமர் வழிபட்டதாகத் தட்சணகயிலாயபுராணம் கூறுகின்றது. முனிவர்கள் வழிபட்ட தலமாதலால் முனீஸ்வரம் என அழைக்கப்படுகிறது. அளகேஸ்வரம் எனும் பெயரும் உண்டு. சுவாமி முன்னை நாதர் எனவும் அம்பாள் வடிவாம்பிகை எனவும் அழைக்கப்படுவர்.

சிங்கள மன்னர்களும் கோயில் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். சிங்கள மக்களும் பயபக்தியுடன் வழிபடும் தலம் இதுவாகும்.

**தொண்டீஸ்வரம்**

ஈழத்தின் தென்கரையில் மாத்தறை மாவட்டத்தில் தேவேந்திர முனையில் இத்தலம் இருந்தது. போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டபின் இது புனரமைப்புச் செய்யப்படாமல் மறைந்துவிட்டது. புதைபொருள் ஆராய்வின்போது நந்தி மட்டும் கண்டு எடுக்கப்பட்டது. அவ்விடத்தில் விஷ்ணு ஆலயம் அமைக்கப்பட்டுச் சிங்கள, தமிழ் மக்களால் வழிபடப் படுகிறது. பஞ்ச ஈஸ்வரங்களில் இன்று நான்கு மட்டுமே உள.



# கற்றலும் தொழுதலும்

கல்வி கற்கும் இடம் பாடசாலை, கடவுளைத் தொழும் இடம் கோயில், நம்முன்னோர் இவை இரண்டும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதை நமக்குணர்த்தும் வகையில் பாடசாலையை வித்தியாலயம் என்றும் கோயிலைச் சைவாலயம் என்றும் சொல்லி வைத்தார்கள். வித்தை பயிலும் இடமாகப் பாடசாலை இருக்க வேண்டும். சைவ வழிபாடு செய்யும் இடமாகச் சைவாலயம் இருக்க வேண்டும் என்பது இதனால் பெறப்படும். வித்தையாகிய கல்வியைக் கற்பதற்கும், கல்வியின் பயனாகிய கடவுளைத் தொழுவதற்கும் உரிய இடங்கள் இரண்டும் ஆலயங்களாகவே இருப்பதை நாம் உணரவேண்டும்.

உயர்ந்தோரால் போற்றப்படும் உலகப் பொதுமறையாகிய திருக்குறளில் கல்வி கற்றலைப்பற்றிச் சொல்லும்போது,

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

என்கிறார் வள்ளுவர். கற்க கசடறக் கற்க, கற்பவை கற்க, கற்றபின் அதற்குத் தக நிற்க என அழுத்தம் திருத்தமாகச் சொல்லிய வள்ளுவர் கற்றபடி வாழவேண்டும் என்பதே கற்றலின் பயன் என்பதை உணர வைக்கின்றார். இதனை மேலும் தெளிவாக வலியுறுத்த இன்னும் ஒரு குறளைச் சொல்கிறார்.

**கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழார் எனின்.**

என்பது அக்குறள். இதன்மூலம் கற்பதன் பயன் தூய அறிவு வடிவான இறைவனைத் தொழுதல் தான் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றார். கடவுளைத் தொழவில்லையென்றால் கல்வியால் என்ன பயன்? என்று கேட்பதன் மூலம் அக்கல்வியால் பயனே இல்லை என்பதைப் பெற வைக்கின்றார்.

இதன்மூலம் கல்வி கற்றலும், கடவுளைத் தொழுதலும் ஒன்றாகவே பயிலப்பட வேண்டியவை என்பதையும் அதற்குரிய இடமே

வித்தியாலயம் என்பதையும் நாமுணர்ந்து கொள்ள முடியும். அதனால்தான் பெரியவர்கள் பாடசாலைகள் தோறும் கோயில்களை அமைத்து வழிபாட்டுக்கு வகை செய்தனர்.

மகாகவி எனப் போற்றப்படும் பாரதியாரால் "கல்வித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்" எனப்பாடி இருப்பதும் சிந்திக்கத் தக்கது. நமது வித்தியாலங்கள் தோறும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு இது நடைமுறைப்படுத்தப்படுவதையும் நாம் காணலாம்.

சைவத்தமிழர்களின் வாழ்வு வழிபாட்டில்தான் ஆரம்பமாகின்றது.

**"மாதாபிதா குரு தெய்வம் - அவர்**
**மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்"**

என்னும் மகாகவி பாரதியாரின் வாக்கைச் சற்றுச் சிந்திப்போமானால் எம்மைப் பெற்றுப் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கும் தாயைத்தான் நாம் முதலில் அறிகின்றோம். அந்தத் தாய்தான் எமக்குத் தந்தையை அறிமுகம் செய்து வைக்கிறார். தந்தையும் எமக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் பெறுவதற்குரிய கல்வியை நாம் பெறுவதற்குப் பொருத்தமான குருவை (ஆசிரியரை) அறிமுகம் செய்து வைக்கின்றார்கள்.

குரு நமக்குரிய வித்தைகளைக் கற்பிப்பதுடன் கல்வியின் பயனாகிய கடவுளைத் தொழவும் கற்பித்து, கடவுளையும் அறிய வைக்கின்றார். எனவே எம்மைப் பெற்ற தாயையும், வளர்த்த தந்தையையும், கல்விதந்த குருவையும், இதற்கெல்லாம் மூல முதலாகிய கடவுளையும் தினமும் வணங்குவதன் மூலம் நம்வாழ்வு நல்வாழ்வாக மலரும்.

கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் எனக் கண்டோம். கற்றபடி வாழ்வதன் பயன் என்ன என்பதை இனிக் காண்போம். வாழ்வின் பயன் வற்றாத பேரின்பத்தைத் தருவதாகிய இறைவன் திருவடிப் பேறேயாகும் என்பதையே எல்லாச் சமயங்களும் உணர்த்துகின்றன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் நமக்குச் சொல்லும் செய்தி,

"இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது
நாம் இறைவனை வணங்கி
முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்"

என்பதாகும். ஆதலால் இறைவனை வழிபடும் முறை பற்றியும் நாம் அறிதல் வேண்டும்.

நாம் ஆலயத்தில் எமது உடலால் செய்யும் வழிபாடு புறவழிபாடு ஆகும். இது அகவழிபாடாக மலர வேண்டும். இறைவனுடைய அருள் எமக்கு எமது அகத்தினூடாகத்தான் கிடைக்கும். ஆகவே அகவழி பாட்டுக்குரிய வகையில் ஆலய அமைப்பும் எமது உடல் அமைப்பும் ஒரே விதமாக இருப்பதை அவதானிக்கலாம்.

ஆலயத்தின் கருவறையாக எமது தலையும், அடுத்த ஒடுங்கிய அந்தராள மண்டபமாக எமது கழுத்தும் அதற்கடுத்த அகன்ற மகா மண்டபமாக எமது மார்பும், அடுத்த தம்ப மண்டபமாக எமது தொப்பூழ்த் தானமும் அமைந்திருப்பதைச் சிந்திக்கலாம். ஆலயத்தில் நடைபெறும் பூஜை வழிபாடுகளை நம் உடலினுள்ளும் மனதால் கண்டு அக வழிபாடு செய்து பிறவிப் பயனைப் பெறுவோம்.



# மார்கழி மாண்பு

மாதங்களில் மார்கழி செழிப்புமிக மாதம், கீதையில் கிருஷ்ணன் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று சொல்கிறார். இது பொருள் பொதிந்த வார்த்தையாகும்.

மார்கழியைக் கடவுள் மாதம் என்றும் பெரியோர்கள் சொல் வார்கள். சைவர்கள், வைணவர்கள் ஆகிய இருபகுதியார்க்கும் விசேட மான பூசை வழிபாடுகள், விரதங்கள் உடைய மாதம். சைவரும் வைணவரும் மார்கழி மாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சி பாடி இறைவனை எழுந்தருளச் செய்து வழிபடும் மரபு தொன்றுதொட்டு இருந்து வருவதைக் காணலாம்.

மார்கழிப் பிள்ளையார் வழிபாடு, திருவெம்பாவை நோன்பு, திருப்பாவை நோன்பு, மார்கழி நீராடல், திருவாதிரை விழா, வைகுண்ட ஏகாதசி, விநாயசஷ்டி, ஐயப்பன் அவதாரம், அனுமன் அவதாரம், சூரிய வழிபாடு முதலாய பல இம்மை மறுமைப் பயன்களைத் தரவல்ல பூசை வழிபாடுகளுக்குரிய மாதம் மார்கழி.

கீதையில் கிருஷ்ணன் "மாதங்களில் நான் மார்கழி" என்றானே அதன் விளக்கம் என்ன?

இவ்வுலக நல்வாழ்வுக்கு வேண்டிய மழையைத் தருவதும் (புவியில்) - நிலத்தில் நீர் கர்ப்பம் தரிப்பதும், நிலத்தடி நீரூற்றுக்கள் பெருகுவதும், தட்ப வெப்பம் சமனாவதும் மார்கழியில்தான். அடுத்துவரும் ஓராண்டுக்குத் தேவையான நீரை, நீர்நிலைகள் தேக்கிக் கொள்வதும் இம்மாதத்தில்தான்.

ஆடி தொடக்கம் மார்கழி வரையான தெட்ஷணாயனம் முடிந்து தை முதல் ஆனி வரையான உத்தராயணம் ஆரம்பமாவதும் உத்தராயண புண்ணிய காலத்தில் உலக நலன் கருதிய பூசை வழிபாடுகள், நற்கருமங்களுக்குத் திட்டம் தீட்டுவதும் இந்த மார்கழியில் தான்.

மனிதருக்கு ஒருவருடம் தேவர்களுக்கு ஒருநாள் ஆகும். மனிதர்க்கு விடியற்காலம் போன்றது தேவர்களுக்கு மார்கழி. அதனால்

தான் திருப்பள்ளி எழுச்சி பாடி வழிபட்டு எதிர்கால நல் வாழ்வுக்குத் தேவர்களின் ஆசியும் அருளும் வேண்டித் தொழுகின்றோம்.

மார்கழியில் கோயில்கள் மட்டுமன்றி வீடுகளிலும் வழிபாடு நடக்கும் மார்கழி மாதம் பிறந்ததும் முற்றத்தில் கோலம் போட்டுப் பிள்ளையார் பிடித்துவைத்து தினமும் வழிபட்டு தை பிறந்ததும் பிடித்துவைத்த பிள்ளையார்கள் அத்தனையையும் ஒன்றாக வைத்துப் பொங்கிப் படைத்து வணங்கிப் புண்ணிய தீர்த்தத்தில் விடும் வழிபாடு உண்டு. விநாயகர் தீயசக்திகள் வீட்டில் குடிபுகாவண்ணம் காத்து வீட்டில் வாழ்வோரையும் காப்பார். இதனால் இந்த மார்கழி முழுவதும் கடவுள் மாதம் எனப் போற்றப்படும். வீடு பரிமளிப்பாக இருக்கும். மாக்கோலம் மனோரம்மியமாக இருக்கும். வீட்டார்க்கு மட்டுமல்ல வருவோர் போவோர்க்கும் மன நிறைவையும் மகிழ்வையும் தரும்.

மார்கழிப் பாவைநோன்பு மகத்தானது. கன்னிப் பெண்கள் அதிகாலையில் துயில் எழுந்து ஒருவரை ஒருவர் துயில் எழுப்பிக் கொண்டு புண்ணிய தீர்த்தத்தில் நீராடச் செல்வர். சைவப்பிள்ளைகள் மாணிக்கவாசகர் பாடித்தந்த திருவெம்பாவையைப் பாடிக் கொண்டும், வைணவப் பிள்ளைகள் ஆண்டாள் பாடித்தந்த திருப்பாவையைப் பாடிக் கொண்டும் நீராடி வழிபடுவர்.

நாடு செழிக்கவும், தமக்கு நல்ல கணவர் கிடைக்கவும் வேண்டிப் பாடி வணங்கி மகிழ்வர். பழந்தமிழ் மக்களின் சங்ககாலம் முதல் மார்கழி பாவை நோன்பு நோற்கப்பட்டதை அறியலாம். பிங்கலந்தை நிகண்டில் பனிநீர் தோய்தலும் பாவை ஆடலும் எனச் செல்லப்பட்டிருப்பது பாவை நோன்பின் பழமையையும் பெருமையையும் பறைசாற்றுவதாக அமைந் துள்ளது.

கல்லுவைத்த கோயில்களில் எல்லாம் மார்கழித் திருவா திரைக்கு முந்திய பத்து நாட்கள் திருவெம்பாவை பூசை வழிபாடு நடக்கும். திருவாதிரை நட்சத்திரம் சிவனுக்குரிய சிறப்பான நட்சத்திரம். இது சூரியனிலும் பெரிது. ஆருத்திராதரிசனம் என இந்தப் புண்ணிய நாள் போற்றப்படும். சிதம்பர நடராசருக்கு அதிகாலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடந்து தரிசனம் கிடைக்கும். இந்த நாளில்தான்

பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் நடராசர் ஆனந்த நடனக் காட்சியைக் காட்டி அருள் புரிந்தார்.

திருவாதிரைத் தரிசனச் சிறப்பைச் சம்பந்தர் பூம்பாவைப் பதிகத்தில் "ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்" எனவும் சேந்தனார் திருப்பல்லாண்டில் "ஆரார்வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்" என்றும் பாடியிருப்பதன் மூலம் இதன் அருமை பெருமைகளை அறியலாம்.

வைணவர்க்குரிய ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி என்னும் சுவர்க்கவாயில் ஏகாதசி தரிசனம் கிடைப்பதும் மார்கழி பூர்வபக்க ஏகாதசி நாளில் ஆகும். விநாயக சஷ்டியும் மார்கழியில்தான். 21 இழைகளாலான காப்புக்கட்டி 21 நாட்கள் பிள்ளையார் கதைபடித்து லட்சார்ச்சனை, சங்காபிஷேகம் செய்து விழா நடக்கும்.

"மார்கழி மாண்பு மதிப்பிடற்கரியது".

# கொல்லாமை

இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு உயிருக்கும் வாழும் உரிமையுண்டு. அது அவற்றுக்குரிய பிறப்புரிமை, சுதந்திரம். ஒன்றன் வாழ்வைக் கெடுக்கும் உரிமை மற்ற எந்த உயிருக்கும் கிடையாது. இது இயற்கையின் நியதி. அவ்விதம் நிகழுமேல் அதனைத்தான் மிருகக் குணம், விலங்குணர்வு என்போம். விலங்குகள் ஐந்தறிவுடையவை. அவற்றுக்கு நல்லது கெட்டதைப் பகுத்துணரும் பகுத்தறிவு எனும் ஆறாவது அறிவு இல்லை.

மனிதனுக்கு மனம் எனும் ஆறாவது அறிவைக் கடவுள் கொடுத்துள்ளார். மனத்தைக் கொண்டு எச்செய்கையையும் பகுத்துணர்ந்து நல்லது கெட்டதை அறிதலும், கெட்டதை விலக்கி நல்லதைச் செய்தலும் மனிதப் பண்பு ஆகும். மனம் உடையன் ஆதலால் தான் மனிதன் என மதிக்கப்படுகின்றான். எனவே மனிதன் எந்த உயிருக்கும் இடையூறு செய்யக்கூடாது. எல்லா உயிர்களுக்கும் உபகாரியாக வாழ வேண்டும். இதனை நமது அருளாளர்கள் எல்லோருமே சொல்லிவைத்துள்ளார்கள்.

**"எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதேயன்றி**
**வேறொன்றறியேன் பராபரமே"**

என்கிறார் தாயுமானவர். "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்றும், "குறைவிலாது உயிர்கள் வாழ்க" என்றும் பலவாறு வாழ்த்தப் படுவதையும் காண்கின்றோம்.

இவ்விதம் இருக்கையில் பகுத்தறிவுடைய மனிதர் கொலை செய்வதென்பது எவ்வளவு பாதகம். அதுவும் தன்னிலும் அறிவு குறைந்த பிராணிகளைக் கொல்வதும், அவற்றைத் தன் உணவுக்காக கொல்வதும் எவ்வளவு அறிவு கெட்ட அதிபாதகச் செயலாகும்.

உலகப் பொதுமறையாகிய திருக்குறளைத் தந்த வள்ளுவப் பெருமான் மனிதரைப் பார்த்துக் கேட்கின்றார். மனிதா உனக்கு அறிவு உண்டா என்று சிந்தித்துப்பார். பிற உயிர்களுகக்கு வரும் துன்பத்தை உனக்கு வந்த துன்பமாக நீ கருதுவாயானால் நீ அறிவுள்ளவன். இல்லையேல் நீ அறிவு கெட்டவன் என்பதை அறிந்து கொள்.

**அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்.**
**தன் நோய்போல் போற்றாக் கடை.**

என்கின்றார். பகுத்தறிவுள்ளவர்களாகப் படைக்கப்பட்ட நாம் பிற உயிர்களின் துன்பத்தை எமக்கு வந்த துன்பமாகக் கருதுவதை விட்டுப் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யலாமா? அதுவும் அவற்றைக் கொல்லல் எனும் கொடிய துன்பத்தைச் செய்யலாமா? எம் உணவுக்காகக் கொல்லலாமா? இந்த உலகம் உன்னைப் போற்றி வணங்கும் நிலையில் இருந்து தாழலாமா?

**"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்"**

"மனிதா உன் புனிதமான வயிற்றைப் பிற பிராணிகளின் பிரேதக் குழியாக்காதே" என்கிறர் ஒரு அருளாளர். அப்படி நீ செய்வாயானால் உனக்கு என்ன நடக்கும் என்பதை அறிந்து கொள் என்கின்றார் திருமூலர் சுவாமிகள்.

**பொல்லாப் புலாலை நுகரும் புலையாரை**
**எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பார்களே.**

கொன்று தின்னும் உன்னுடைய வாழ்வு என்றும் இப்படியே இருக்கப் போவதில்லை. நீ இறக்கும் போது பொல்லாத புலால் உணவை உண்ணும் கீழ்மகனாகிய உன்னை, எமதூதுவர்கள், மற்றெல்லாரும் காணும் வண்ணம் கறையானைப் போலப் பற்றி அரித்துப்பின் அனல்கக்கும் நரகத்தில் முதுகைக் கீழ்ப்புறமாகக் கிடத்தி வைத்து வருத்துவர் என்பதை மறவாதே என்கிறார்.

கொல்லுதல் தானே பாவம், பிறர்கொன்றதைத் தின்னுதல் எப்படிப் பாவம் ஆகும் என்று பலர் எண்ணுகின்றார்கள். இவர்கள் தின்பதனாலேதான் ஊன் விற்பவர்கள் கொல்கிறார்கள். ஆதலால் புலால் உண்பவரையே கொலைப்பழியும் பாவமும் சேரும் என்கிறார் வள்ளுவர்.

**தினற்பொருட்டால் கொல்லா துலகெனில் யாரும்**
**விலைப் பொருட்டால் ஊன் தருவார் இல்.**

எனவேதான் கொன்றிட்ட பாவம் தின்றிட ஈரும், இரண்டு மடங் காகும் என்றும் சொல்லியுள்ளார்கள். ஆதலால் பாவங்கள் எல்லா வற்றிலும் மிகக் கொடிய பாவமாகிய கொலையையும், புலாலையும் விலக்கி வாழ்வோம்.

★★★

# சைவத்தமிழ்ப் பண்பு

சைவமும் தமிழும் எமக்கு இரு கண்கள் ஆகும். கண்கள் இன்றி உலகில் வாழமுடியாது. அதேபோலச் சைவமும் தமிழும் இன்றி நாம் மனிதராய் வாழமுடியாது. இவை இரண்டும் பண்பின் வடிவங்கள். சைவம் என்பது எங்கள் சமயம். தமிழ் என்பது எங்கள் மொழி. இரண்டும் ஒன்றாய் இணைந்ததே எங்கள் பண்பு. சைவம் இன்றி தமிழ் இல்லை. தமிழ் இன்றிச் சைவம் இல்லை. மொழியின் பண்பு தமிழ், பக்தியின் பண்பு சைவம். ஆகவே சைவமும் தமிழும் அன்பின் வடிவங்கள். அன்பே பண்பு.

சைவம் அநாதியானது, தமிழும் அநாதியானது, இரண்டும் ஒரே இடத்தில் ஊற்றெடுத்துச் சுரப்பவை. சிவசம்பந்தமுடையது சைவம். அது சிவனிடமிருந்து சுரந்துவரும் அன்பின் வடிவம் ஆகும். திருமூலர் சுவாமிகள்

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**

என்கிறார். இங்கே தமிழ் செய்தல் என்றால் அன்பு செய்தல் என்பது பொருள். இந்த அன்பின் பண்பியாகிய தமிழ் சிவனிடத்தில் இருந்து தோன்றியது என்பதை மகாகவி பாரதியாரின் கூற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அவர், தமிழ் என்னும் தனது பாடலிலே

**ஆதிசிவன் பெற்றுவிட்டான் - என்னை**
**ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்**
**வேதியன் கண்டு மகிழ்ந்தே நிறை**
**மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்.**

எனக் குறிப்பிடுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆகவே சைவமும் தமிழும் சிவபெருமானிடமிருந்து தோன்றிய அன்பின் பண்புகள் என்பதில் ஐயமில்லை.

இரண்டுமே என்று தோன்றியவை என்பது யாருக்கும் தெரியாது. கடவுள் ஆகிய சிவபெருமான் எப்படி ஆதியும் அந்தமும் இல்லாத அநாதியானவராக இருக்கின்றாரோ அதேபோல் சைவமும் தமிழும்

அநாதியானவை. அவை மனித வாழ்வின் மூலமுதற்பொருளான அன்பின், பண்பின் வடிவங்கள்.

அன்பு, அறம், கருணை, ஒழுக்கம், உண்மை, நேர்மை, ஈகை முதலான குணங்கள் எல்லாம் ஒன்றுதிரண்டதே பண்பு ஆகும். இக்குணங்கள் எல்லாவற்றுக்கும் ஊற்றுக் கண்ணாயிருப்பது அன்பேயாகும். இதனை வள்ளுவப் பெருமான்

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்பு தோல் போர்த்த உடம்பு.**

என்கிறார். அன்பினால் தான் இந்த உலகில் உயிர்கள் நிலைத்து இருக்கின்றன.

சைவத்தையும் தமிழையும் பிரித்துப் பார்க்க முடியாது. எனவே அவற்றின் பண்பையும் பிரிக்க முடியாது. சைவத்தமிழ்ப் பண்பைச் சைவத்தமிழர் வாழ்வியலில் காணலாம். வாழ்வியல் என்னும் போது உடை, உணவு, உறையுள், உறவாடல் விழாக்கள் என்பவற்றில் காணலாம்.

ஒருவருடைய தோற்றத்தைப் பார்த்தவுடனே இவர் எந்தப் பண்பாட்டுக்குரியவர் என்பதைத் தீர்மானிக்க முடியும். சைவசமய சின்னமாகிய திருநீறும் உருத்திராக்கமும் சந்தனமும், குங்குமமும், நெற்றியில் துலங்கும் கோலம் சைவக் கோலமாகும். பெண்களின் நெற்றியில் விபூதி குங்குமமும் தலையில் பூவும் விளங்கச் சேலையுடுத்து மகாலக்குமி போன்று ஒரு பெண் வருவாளானால் அவள்தான் சைவப்பண்பின் இருப்பிடம் ஆவாள். ஆண்கள் சாதாரண வேளையில் காற்சட்டை போட்டாலும் விழாக்களின் போது வேட்டியும் சால்வையும் சட்டையும் அணிந்து நெற்றியில் நீறும் சந்தனமும் விளங்கும் கோலம் சைவப் பண்பல்லவா.

உண்ணும் உணவில் தூய்மையும், பலவித போசாக்கும் நிறைந்ததாகச் சுத்த சைவ உணவு உண்பவன் சைவன். அவனது உணவில் சாத்வீகக் குணம் இருப்பதால் அவனும் சாந்தமான பண்புடைய வனாக இருப்பான்.

விழாக்களின் போது முற்றத்தில் பந்தல் போட்டு வாயிலில் நிறைகுடம் வைத்து, மங்கல விளக்கேற்றி வருவோரைக் குடும்பத் தலைவனும், தலைவியும் இன்முகத்துடன் சந்தனம், திருநீறு கொடுத்து பன்னீர் தெளித்து வரவேற்பதும் அன்புடன் உபசரித்து விருந்தளிப்பதும் தமிழ்ச் சைவப்பண்பு.

சைவத்தமிழனின் வீட்டில் பிரதான அறை சுவாமி அறையாக இருக்கும். அங்கு சுவாமிப் படங்கள் வைத்துக் காலையும் மாலையும் பூவைத்துத் தூப தீபம் காட்டி வழிபடுவர். இது வழிபாட்டுப் பண்பு ஆகும். வீட்டில் மகாலக்சுமி உறைகின்றாள் என்ற எண்ணத்துடன் வீட்டைப் புனிதமாகவும் அழகாகவும், கலகலப்பாகவும் வைத்திருத்தல் தமிழன் பண்பு.

வீட்டினைக் கட்டும்போதே சோதிடப்படி நிலையம் எடுத்தலும், நல்ல நாளில் அத்திபாரம் போடுதலும், வளை வைத்தலும், வீடு குடி புகுதலும் மங்கல வாழ்வுடையோர் முன்னின்று நாட்கருமங்கள் செய்தலும் வாழ்த்தல் பண்பு ஆகும்.

வீட்டில் குழந்தை பிறந்தநாள் முதல், துடக்குக் கழித்தல், கோயிலுக்கு கொண்டு போதல், பெயர் வைத்தல், ஏடு தொடக்குதல், பெண் பிள்ளைக்குப் பூப்பு நீராட்டல், திருமணம் முதலான பூர்வக் கிரியைகள் செய்தலும், இறந்தவர்க்கான அபரக்கிரியைகள் செய்தலும் வாழ்வுடன் இணைந்த பண்பாடு ஆகும்.

யில்
பத்
த்து
தும்

பாக
யும்
தும்.
டைப்
ழன்

லும்,
குடி
கள்

தல்,
தல்,
வக்
லும்

## சைவப்புலவர் சு. செல்லத்துரையின் நூல்கள்

01. கலைவாணி இசைப்பாடல் – கீதம்
02. சித்திரத் தேரில் சிவகாமி அம்மை – பாடல்
03. வாக்கும் வாழ்வும் – வானொலிப்பேச்சு
04. காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும்
05. வள்ளல் ஏழூர் – சிந்துநடைக்கூத்து
06. ஆனந்த மாலை – பாடல்
07. அண்ணா பொன் ஏடு – வரலாறு
08. வாழ்வாங்கு வாழ்தல் – வானொலிப்பேச்சு
09. அரங்கப்படையல் – முத்தமிழ் நூல்
10. சிவநெறி – ஐரோப்பிய சிவநெறிக்கழகப் பாடநூல்
11. ஐயனார் புராண உரை
12. கல்வளை அந்தாதி – உரைவிளக்கம்
13. பஞ்சபுராணம் – உரை
14. மங்கல மனையறம்
15. மங்கலத் திருமணம்
16. சிவகாமி தமிழ் – கவிதை
17. இன்பத்தமிழ் – வானலையில் வந்தவை
18. வாடாமல்லிகை – வரலாறு
19. பத்தினித் தெய்வம் – நாடகம், வில்லிசை
20. இறந்தபின் எங்கள் நிலை – வினாவிடை
21. நற்சிந்தனைகள் 50 – வானலையில் வந்தவை

## பண்டிதர் சி. அப்புத்துரையுடன் இணைந்து எழுதியவை

01. தொடக்கும் தொடர்பும்
02. அபரக்கிரியை விளக்கம்
03. பூப்புனித நீராட்டல்
04. திருமணக் கிரியைகள்